SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்- 204 ஒக்.08-14, 2000 விலை 12.00






## தொடரும் ஓயாத அலைகள் 4

## தேர்தல் என்கிற ஜனநாயக மோசடி நாமும் துணைபோவோமா?



ஒலியர் மார்கு புதிய உலகைக் காட்டிய கலைஞன்!



## முஸ்லிம் காங்கிரஸ்:

## அதிர்ச்சியிலிருந்து அடுத்த கட்டத்திற்கு

# மூதூர் வேட்பாளர் கொலை : வெறும் அரசியல் வன்முறை மட்டும் தானா?

ஒக்.2ம்திகதி திங்களன்று மூதூரில் இடம்பெற்ற பாரிய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இச் செய்தி எழுதும் வரை 24 பேர் பலியாகியிருக்கின்றனர். 40 பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இறப்புத்தொகை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

இத்தாக்குதல் மொகமட் லத்தீப் பைத்துல்லா என்பவரைக் குறியாக வைத்தே மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் உள்ள பைத்துல்லா ஒரு முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி. விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக மிக வேகமாகச் செயற்பட்ட அதிகாரி. புலிகளினால் ஏற்கெனவே குறி-வைக்கப்பட்டு உயிர் தப்பியவர்.

முஸ்லிம் காங்கிரசின் தீவிர ஆதரவாளராக இருந்த பைத்துல்லா தனது புலனாய்வுத்துறைப் பதவியை விட்டுக் கடந்த வருடம் விலகி இருந்தார். பதவிமூலம் தமக்குக் கிடைத்த பிரபல்யத்தையும் முஸ்லிம்கள் மத்தியிலான செல்வாக்கையும் பயன்படுத்தி அரசியலுக்கு வந்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மறைந்த அஷ்ரஃப்பின் நெருக்கத்துக்குரியவராக இருந்த பைத்துல்லா அஷ்ரஃப்பின் ஆசியுடன் இம்முறை பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் பொ.ஐ.மு. பட்டியலில் திருகோணமலை மாவட்ட வேட்பாளர்களில் ஒருவராக இடம்பெற்றார்.

பைத்துல்லாவின் பிரச்சாரப்-பணிகள் ஒரு பொலிஸ் அதிகாரிக்கே உரிய மிடுக்குடனும், பலத்த பாதுகாப்புடனும் தான் இடம்-பெற்று வந்தன. பொலிஸ் திணைக்களத்தின் முன்னாள் உத்தியோகத்தர் என்ற வகையில் பொலிஸ் திணைக்களச் செல்வாக்கும் இவரது பாதுகாப்பு ஏற்பாடுகளில் பிரதிபலித்தன. எனினும், தனக்கு எந்நேரத்திலும் ஆபத்து நேரலாம் என்ற விழிப்-புணர்வும் அவரிடத்தில் காணப்-பட்டது.

சம்பவதினத்தன்று கலாசார மண்டபத்தில் கூட்டம் இடம்-பெற்றுக் கொண்டிருக்கும் போதே தனக்கு ஏதோ ஆபத்து நேரப்போவதை முன் கூட்டியே பைத்துல்லா அறிந்து கொண்டதாக அவரின் நெருக்கமான சகாக்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இதன் அடிப்படையில் கூட்டம் சற்று அவசரமாக முடிக்கப்பட்டது.

கூட்டம் முடிந்ததும், தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் இருப்பதற்காக பைத்துல்லா தனது வாகனங்களை மாற்றியிருக்கின்றார். வழமையான வாகனத்தில் ஏறாமல் பைத்துல்லா முச்சக்கரவண்டியொன்றில் ஏறி அமர்ந்திருக்கிறார். இவருக்குத் துணையாக உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அருகே வந்து அமர்ந்து கொண்டார். இந்த நேரம் பார்த்து தற்கொலைக் குண்டுதாரி பைத்துல்லாவை நெருங்கியதாகக் கூறப்படுகிறது. பைத்துல்லா தன்னைச் சுதாகரித்துக் கொள்ள முன்னரேயே குண்டு வெடிக்க வைக்கப்பட்டு விட்டது.

இச்சம்பவத்தையடுத்து மூதூரில் எண்ணிக்கையில் குறைவாயிருப்பதன் காரணமாகத் தமிழ் மக்கள் உடனடியாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி அந்தோனியார் ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர்.

இச்செய்தி எழுதும் போது (ஒக்.3ம் திகதி செவ்வாய்க்கிழமை) மூதூர் நகரில் ஹர்த்தால் அனுஷ்-டிக்கப்படுகிறது. கடைகள், பாட-சாலைகள் என்பவை மூடிய நிலையில் காட்சியளிக்கின்றன. திருகோணமலையிலும், முஸ்லிம்கள் செறிவான பகுதிகளில் கடையடைப்புகளும், சோகமும் காணப்படுகின்றன.

இச்சம்பவம் வெறும் தேர்தல் வன்முறை தானா என்று கூறமுடி-யாதிருக்கிறது. ஏனென்றால் பைத்துல்லா ஏற்கெனவே குறிவைக்கப்பட்ட மனிதராகவே இருந்து வந்துள்ளார். குறி வைத்தவர்கள், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர் என்றே சொல்ல வேண்டும். எனினும் வேட்பாளர் ஒருவருடன் இவ்வளவு பெருந்தொகையானோர் கொல்லப்பட்ட சம்பவம் இதுதான் என்று கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க சனிக்-கிழமை இரவு மூதூர் மத்திய கல்லூரியிலிருந்து 9 கணனி இயந்திரங்களும், ஒரு தட்டச்சு இயந்திரமும் அபகரிக்கப்பட்டுள்ளன. இதனை விடுதலைப் புலிகளே செய்ததாகக் கூறி திங்களன்று மாணவர்கள் பாடசாலை பகிஷ்கரிப்பை மேற்கொண்டதுடன் மூதூர் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தையும் தாக்கி அங்கி-ருந்த வாகனமொன்றையும், சேதப்படுத்தினர். பொலிசார் தலையிட்டு ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தே மாணவர்-களைக் கலைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- விவேகி

# உத்தியோகபூர்வமாக வேண்டாம்!

வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிடுகின்ற கட்சிகள், சுயேச்சைக் குழுக்களின் தலைமை வேட்பாளர்களுக்கான இரண்டாவது கூட்டம் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபருடைய அலுவலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த போது இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

தேர்தல் வன்முறைகள், கட்சிகளின் அத்துமீறிய செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்ட போது, வவுனியா மாவட்டத்தின் ஒரு பிரிவிற்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், கட்சிகள் தமக்குத் தேயைான எந்தத் தேர்தல் நடவடிக்கைகளையும் மேற்-கொள்ளலாம். பிரச்சினைகள் எதுவும் கிடையாது. ஆனால் உத்தியோகபூர்வமாக எதனையும் செய்ய வேண்டாம் என்று அறிவுரை பகர்ந்தாராம்.

ஆட்களின் உயிர்களுக்கு மோசமேற்பட்டாலும், ஆளைக் காணவில்லை என்று கூறிவிட்டால் விடயம் அத்துடன் முடிந்து விடும் என்றும் ஆலோசனை கூறினாராம். சுட்டத்தின் காவலர்களாக இருப்பவர்களே இவ்வாறு ஆலோசனை கூறுகின்றார்களே என்று வேட்பாளர் ஒருவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

இதே கூட்டத்தில் ஆயுதக்-குழுக்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்றன என்பது குறித்து கட்சி ஒன்றினால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு பற்றித் தெரிவிக்கப்பட்ட போது, புளொட் இயக்கத்தின் தலைமை வேட்பாளராகிய லிங்கநாதன் கருத்துத் தெரிவிக்கையில், ஆயுதக் குழுக்களாக இருந்த-போதிலும், அரசியலில் தாங்கள் இரண்டு தடவைகள் அனுபவம் பெற்றவர்கள் என்றும், தேர்தல் பிரசாரம் மற்றும் நடவடிக்கைகளில் மிக நாகரிகமாக நடந்து கொள்வதாக-வும் தெரிவித்தாராம். அத்துடன், வவுனியாவுக்குக் கடமைக்காக வந்துள்ள பொலிஸ் அதிகாரிகள் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்தவர்களாக இருந்தாலும், வன்னிப் பகுதிக்கு அவர்கள் புதியவர்களே என்றும், ஆயுதங்கள் தாங்கியவர்கள் தேர்தலில் போட்டியிட்ட போதிலும், கடந்தகால தேர்தல் நடவடிக்-கைகளின் போது, ஒரு துப்பாக்கி வேட்டைக்கூட தாங்கள் தீர்த்ததில்லை என்றும் கூறினாராம். வன்னியில் நிலைமைகள் இப்படியிருக்க, ஆயுதக் குழுக்கள் சம்பந்தப்படாத தென்பகுதி தேர்தல் தொகுதிகளிலேயே, தேர்தல் பிரசாரங்களின் போதும், வாக்களிப்பின் போதும், துப்பாக்கிப் பிரயோகங்கள், கொலைகள், கொலைப் பயமுறுத்-தல்கள், படுகாயப்படுத்தல் போன்ற வன்முறைச் சம்பவங்கள் தாராளமாக இடம் பெறுவதாகவும் அவர் சுட்டிக் காட்டினாராம்.

ஆனால் வன்னியில் தேர்தல் அல்லாத காலங்களில் இடம் பெற்ற கொலைகள், ஆட்கடத்தல்கள், வரி அறவீடுகள், கொலைப் பயமுறுத்தல்கள் கப்பம் கேட்டல் போன்ற ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து எவரும் மூச்சே விடவில்லையாம்.

லிங்கநாதன் அவர்களே, நீங்கள் அக்காலப்பகுதியில் வவுனியாவில் இல்லையோ?

- எஸ்.கே.ரீ

# நெளுக்குளத்தில் அகதி முகாம் இல்லையாம்!

இதுவும் வன்னி தேர்தல் தொகுதியோடு சம்பந்தப்பட்டது தான்.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள இந்திய வம்சாவளி மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காகவும், அவர்களின் பிரச்சினைகளுக்குப் பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதற்காகவும் வன்னித் தேர்தல் தொகுதியில் சேவல் சின்னத்தில் தலைமை வேட்பாளராகப் போட்டியிடுகின்றார் திவ்வியராஜன்.

இவர் நெளுக்குளம் அகதி முகாமில் தேர்தல் பிரசாரத்திற்காகத் தனது சிறிய பரிவாரத்துடன் சென்ற போது, அங்கிருந்த பொலிஸ் பொறுப்-பதிகாரி, இவர்களை உள்ளே விடுவதற்கு மறுத்து விட்டாராம்.

அகதி முகாமின் உள்ளே செல்வதற்குரிய, தெரிவத்தாட்சி அதிகாரியும், அரசாங்க அதிபரு-மாகிய உயரதிகாரியின் அனுமதிக் கடிதத்தைக் காட்டிய போதும், அரசாங்க அதிபர் எனக்குப் பெரியவரல்ல. பொலிஸ் அத்தியட்சகரின் கடிதத்தைக் கொண்டுவந்தால் உள்ளே விடலாம் என்று பிடிவாதமாக மறுத்து விட்டாராம்.

தனது முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தனைப் போல மூன்று தடவைகள் அந்த அகதி முகாமுக்குச் சென்ற திவ்வியராஜன் மூன்றாம் முறை குறிப்பிட்ட அந்த பொலிஸ் பொறுப்பதிகாரி அங்கு இல்லாத வேளையில் உள்ளே புகுந்து விட்டாராம்.

உள்ளே கூட்டம் நடத்த முடியாது என்று பொலிசார் எச்சரிக்கை செய்ய, பொதுக்கூட்டம் நடத்த வரவில்லை வெறும் கலந்துரையாடல் தான் எனக்கூறிவிட்டு தேர்தல் பிரசாரத்தை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்த போது, அவர்களின் பின்னால் பொலிசார் நீட்டுத் தடிகளோடு, திவ்வியராஜன் குழுவினர் சென்ற இடமெல்லாம் மந்தைகளை விரட்டிச் செல்லும் மந்தையோட்டியைப் போல பின்னால் சென்று கண்காணித்து இடைஞ்சல்கள் விளை-வித்தார்களாம்.

இந்த அகதி முகாமில் வேட்பாளராகிய தனக்குக் கிடைத்த வரவேற்புக் குறித்து தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரான சிறிதரனிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முறையிட்டாராம்.

நெளுக்குளம் என்ற இடத்தில் அகதிமுகாமே இல்லையே திவ்வியராஜன், நீங்கள் என்ன சொல்கின்றீர்கள் என்ற எதிர்க்கேள்வி கேட்டு பொலிஸ் அத்தியட்சகர் மடக்கினா-ராம்.

சுதந்திரமாக தேர்தல் பிரசாரம் செய்வதற்குக்கூட வன்னியில் அதிகார வெறியர்கள் தமிழரைத் தடுக்கின்றார்களே, இது என்னப்பா ஜனநாயகம் என்று கொதித்துப் போயிருக்கின்றாராம் கம்பஹா, கொழும்புப் பிரதேசங்களில் இருந்து வன்னித் தொகுதிக்குத் தேர்தலில் போட்டியிடச் சென்ற திவ்வியராஜன்.

வன்னிப்பகுதியின் பல்வேறு ஜனநாயக முகங்களை முழுமையாக புரிந்து கொள்வதற்கு திவ்விய-ராஜனுக்கு இன்னும் எவ்வளவோ விடயங்கள் காத்திருக்கின்றன. பாவம் திவ்வியராஜன்! அவருடைய கட்சியின் தலைமைப்பீடம் அவரை இயக்கும் போது அவரால் என்ன செய்ய முடியும்?

- எஸ்.கே.ரீ

# ரெலோவுடன் சண்டித்தனம்!

அண்மையில் ரெலோ இயக்கத்தினர் வேலணைப் பகுதிக்குப் பிரசாரத்திற்காகச் சென்ற சமயம் புளியங்கூடலில் வைத்து ஈ.பி.டி.பியினரால் திருப்பிஅனுப்பப்பட்டுள்ளனர். பின்னர் இவர்கள் வேறு வழியால் நாரந்தனைக்குச் சென்ற போது (ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள்) ரெலோ உறுப்பினர்களைப் பார்த்து அவர்கள் தான் எமக்கு அரிசி தந்தவர்கள், நிவாரணம் தந்தவர்கள். நீங்கள் எங்கே இருந்து விட்டு வருகிறீர்கள் என குழப்பம் விளைவித்துள்ளனர். இதேபோல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த தினத்தன்றும் ரெலோ இயக்கத்தினர் காரைநகருக்குச் சென்ற போதும் இவர்களின் வாகனத்திற்குக் குறுக்காக ஒருவர் சைக்கிளைப் போட்டு விட்டு சண்டித்தனம் செய்துள்ளார்.

## ஓயாத அலைகள்:

# புலிகள் பக்கம் வளர்ந்து வரும் வாய்ப்புகள்!

வன்னியில் 1999 நவம்பர் தொடங்கி வெற்றி பெற்ற புலிகளின் ஓயாத அலைகள் - 3 அவர்களுடைய மரபுவழிப் போர்த்திறன் ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்தை அடைந்துவிட்டமையைக் காட்டிற்று. இதன் தாற்பரியத்தை சிறிலங்காப் படைத்துறை சரியாக உணர, படிக்கத் தவறிற்று. அது என்ன இந்த மரபுவழிப்போரின் புதிய வளர்ச்சிக் கட்டம்?

இதைச் சுருக்கமாகத் தமிழில் "படை நகர்த்தற் சண்டைத்திறன்" எனலாம். மேற்கத்தியப்போர் வல்லுநர்கள் இதை Manoeuvre War Fighting Capability எனக் கூறுவர். ஒரு பெருநிலப்பரப்பிலுள்ள இரு அரசுகளுக்கிடையிலான நிலப்பறிப்பு - நாடு பிடிப்புப் போர்களில் இந்த படைநகர்த்தற் சண்டைத் திறனே பெரும்பாலும் வெற்றி-தோல்விகளைத் தீர்மானிக்கிறது. உலகப் போர் வரலாற்றில் ஒரு மாபெரும் படையெடுப்பெனக் கருதப்படும் ஒப்பரேஷன் பாபரோஸ்ஸா (Operation Barbarossa) படைநகர்த்தற் சண்டைத் திறனுக்கோர் நல்ல உதாரணமாகும். சோவியத் ரஷ்யாவைக் கைப்பற்றும் நோக்குடன் இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லரால் திட்டமிடப்பட்டு மேற்கு ரஷ்யாவின் பல்லாயிரம் சதுரமைல் பரப்பை உள்ளடக்கும் வகையில் பல்வேறு பெரும் படையணிகளை ஒருங்கிணைத்து, அவற்றுக்கான வழங்கல் சீர்குலையாதபடி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே பாபரோஸ்ஸா ஆகும். (ஹிட்லரின் வீழ்ச்சிக்கும் இதுவே வித்திட்டது என்பது வேறு கதை) ஒரு மரபுவழிப் போரை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அடித்தளமான படைநகர்த்தற் சண்டைத்திறன் பின்வருவனவற்றில் தங்கியுள்ளது.

1. நன்கு பயிற்றுவிக்கப்பட்ட முன்செல்லும் அதிரடிப்படை அணிகள்.

2. குறிப்பிட்ட களமுனையின் இயல்புகளுக்கு மிகவும் ஏற்றமுறையில் அமைந்த வழங்கற் பாதைகளும் வசதிகளும்.

3. பரந்த களமுனையில் வெவ்வேறு இடங்களில் நகரும் படையணிகளை நுட்பமாகக் குறிக்கோள் பிசகாத வகையில் ஒருங்கிணைத்து இயக்கும் கட்டளையகமும் அதற்கான நவீன தொலைத்தொடர்புகளும்.

4. சரியான சூட்டாதரவு (fire support)

5. படைநகர்த்தல்கள் நடைபெறும் நிலப்பரப்பின் சகல புவியியற் தன்மைகள், காலநிலைச்சிக்கல்கள், பாதைகள் என்பன பற்றிய மிகத்தெளிவான, நுட்பமான அறிவு.

மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களிலும் ஹிட்லரின் ஒப்பரேஷன் பாபரோஸ்ஸா சிறப்புற அமைந்த போதும், மேற்கு ரஷ்யாவின் புவியியல் அமைப்பு, காலநிலைச் சிக்கல்கள், இவை வழங்கற் பாதைகளுக்கு ஏற்படுத்திடக்கூடிய இடைஞ்சல்கள் ஆகியன பற்றி ஜேர்மன் படைத்துறை நுட்பமாகப் புரிந்து கொள்ளாததும் அது ஒரு கட்டத்திற்கப்பால் பின்னடைவுகளைச் சந்தித்து இறுதியில் தோல்வியடைந்தமைக்கு ஒரு காரணம் எனப் போர் வரலாற்றாசிரியர்கள் கூறுவர்.

இந்தவகையில் 1999 நவம்பர் 2 தொடங்கிய ஓயாத அலைகள் மூன்று பற்றி நாம் விரிவாக ஆராய்வது நன்றெனினும், இங்கு இடம் போதாமையால் குடாநாட்டுள் நடைபெற்ற படை நகர்த்தற் சண்டைகளைப் பற்றிச் சுருக்கமாகப் பார்த்த பின்னர் விடயத்திற்கு வருவோம்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் மூன்றாம் உலக நாடுகளில் நடைபெற்ற தேசிய விடுதலைப் போர்களை நாம் கவனித்து ஒப்பிட்டு நோக்கி வருகையில் ஆனையிறவின் வீழ்ச்சிக்கு வழிகோலிய புலிகளின் படை நகர்த்தற் சண்டைகளின் தொகுப்பினைப் போல வேறு எங்குமே நடைபெறவில்லை எனத் திட்டவட்டமாகக் கூறக்கூடியதாக உள்ளது. உலகின் பல இடங்களிலும் நடைபெற்ற இப்படியான மரபுவழிப் போர்களின் வரலாற்றில் மிகத்தனித்துவமான சிறப்பத்தியாயமாக ஆனையிறவைக் கைப்பற்ற புலிகள் மேற்கொண்ட படைநகர்த்தற் சண்டைகள் அமையும் என்பதில் ஐயமில்லை. இது ஏன் எனச் சற்றுச் சுருக்கமாகப் பார்ப்போம்.

படைநகர்த்தற் சண்டைத் தந்திரோபாயங்களில் சிறப்பானதொன்றாகக் கருதப்படுவது எதிரியின் படைநிலைகளுக்குப் பின்புறமாகச் சென்று தாக்குவதாகும். இதை வழக்கமாக, கிட்டத்தட்ட நூற்றுக்குத் தொண்ணூறு வீதம், வான்வழியாகவே மரபுவழிப் படைகள் செய்யும். Paratroops என்பன நவீன மரபு வழிப்படைகளில் இதற்கெனவே உருவாக்கப்பட்டன. அத்துடன் பொதுவாக பாதுகாப்பான தூரத்திலேயே எதிரிப்படை அணிகளின் முதுகுப்பக்கம் புகுந்து நிலையெடுப்பது வழமை.

ஆனையிறவின் ஒரேயொரு நம்பகமான வழங்கற் பாதையாக இருந்தது வெற்றிலைக்கேணி. இரண்டாவது கண்டிவீதி. ஆபத்திற்கு யாழ் கடல்நீரேரியை அண்டியிருந்த பழம் பாதை. புலிகளின் முதல் நகர்வு வெற்றிலைக் கேணியை அமுக்கிற்று. இரண்டாவது நகர்வே உலகப் போரியல் வரலாற்றில் முக்கியமானது - தனித்துவமானது. வெற்றிலைக்கேணி கட்டடைக்காட்டுப் பகுதியிலிருந்து கடல்வழியாக ஒரு கடற்படை அரணை உடைத்துக் கொண்டு, மாமுனையில் தரையிறங்கி, அங்கிருந்த சிறிலங்காப் படைத்தளத்தை அழித்து, பின்னர் மேற்காகக் கண்டற்காட்டுப் பகுதியை ஊடறுத்து, இத்தாவில் - முகமாலைப் பகுதியில் கண்டிவீதியைக் கைப்பற்றி இயற்கை அரண்களற்ற அந்தப் பகுதியில் 53 டிவிசனின் அமெரிக்கப் பயிற்சிபெற்ற சிறப்புப் படைகளின் தாக்குதல்களையும், வகைதொகையற்ற செறிந்த பீரங்கி வீச்சுக்களையும் சமாளித்துக் கொண்டு, வழங்கல் வழிகள் ஏதுமற்ற நிலையில் பெரும்பலம் பொருந்திய தாழையடிச் சிறிலங்காப் படைத்தளம் வீழும் வரை A9 சாலையில் நின்று பிடித்த பால்ராஜும் அவரது படைத்துணைவர்களும் ஈட்டிய வெற்றி உலகப் படை நகர்த்தற் சண்டைகளில் தனித்துவமானது என மேற்கு நாடொன்றின் மூத்த படையதிகாரி ஒருவர் அண்மையில் என்னுடன் பேசுகையில் ஒப்புக்கொண்டார்.

வழமையாக மரபுவழிப்போர்களில் இவ்வகையான பின்புற நகர்த்தல்கள் வான்வழி வழங்கலை நம்பியே செய்யப்படும். எதிரியின் பின்புறம் தரையிறக்கப்படும் அணிகளுக்கு வேண்டிய உணவு மற்றும் தோட்டாக்கள் வான்வழியாகத் தொடர்ச்சியாக அனுப்பமுடியுமெனில் மட்டுமே மேற்கண்ட வகைப் படைநகர்த்தலில் மரபுவழி இராணுவத் தலைமைகள் ஈடுபடும். ஏனவேதான் பால்ராஜின் தலைமையில் நடைபெற்ற நகர்வு தனித்துவமானது என்கிறேன். இப்படியாக இந்த நகர்த்தல் ஆனையிறவின் இரண்டாவது வழங்கற் பாதையான கண்டிவீதியை A9 வெட்டியது. மூன்றாவது படைநகர்த்தல் பரந்தனில் இருந்த சிறிலங்காப் படைகளின் பெரு நன்நீர்க்கிணறுகளை அழித்தன. மூன்றாவது நகர்வு கிளாலி - புலோப்பளை - பளை ஊடாக திறக்கப்பட்ட வழங்கற்பாதையை புதுக்காட்டுச் சந்திப்பகுதியில் துண்டாடிற்று. நான்காவதும் இறுதியுமான நகர்வு சிறிலங்காப் படையினரிடம் கடைசியாக எஞ்சியிருந்த நன்நீர்க்கிணறுகளை இயக்கச்சியில் அழித்தது. ஆனையிறவு வீழ்ந்தது. நான் மேற்கூறிய படைநகர்த்தல்களுக்கு இன்றியமையாத பல உப படைநகர்வுகளையும் புலிகள் ஆனையிறவு போரின் போது மேற்கொண்டனர். அவற்றினை இங்கு விரிவஞ்சி விடுகின்றேன்.

படைநகர்த்தற் சண்டை எனில் யாது என்பது பற்றி சற்று நீண்டு விட்ட இப்பீடிகையுடன் இனித் தற்போது தென்மராட்சிப் பகுதியில் தொடங்கப்பட்டுள்ள ஓயாத அலைகள் நான்கு எப்படி உள்ளது எனப் பார்ப்போம்.

செறிந்த மரபுவழிப் போர்களில் ஈடுபடும் படைத்தளங்களுக்கு வழங்கல் இன்றியமையாதது. இது ஏன் என்பது உலோகத்தாலான ஒரு சிறு 7.2 அ.அ. தோட்டாப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு சற்றுத் தூரம் நடந்து பார்த்தால் உங்களுக்குப் புரியும். இதைவிட எடைகூடிய ஆயிரக்கணக்கான பெட்டிகளையும் ஏனைய பொருட்களையும் எரிபொருளையும் தங்குதடையின்றி ஒரு களமுனைக்கு அனுப்பவும் காயம்பட்டோரை வெளியெடுக்கவும் வழங்கற்பாதைகள் அவசியம். அதிலும் களமுனைக்கும் பின்தளப்பகுதிக்கும் இடையில் ஆகக்குறைந்த தூரத்திலான செறிவான படை ஊர்திப் போக்குவரத்திற்கு ஏற்ற வழங்கற் பாதைகளே முக்கியம்.

ஆனையிறவும் பளையும் புலிகளிடம் வீழ்ந்த பின்னர் தென்மராட்சியில் சிறிலங்காப் படையினரின் தற்காப்புத் திட்டம் இரு தட்டுக்களாக அமைக்கப்பட்டிருந்தது.

முதல் தட்டு - 1. எழுதுமட்டுவாள் படைத்தளம்


2. மூன்று கிலோ மீட்டர் நீளமான அதன் முன்னரங்கப் பாதுகாப்பு வலையம்

3. கொடிகாமத்திலிருந்து எழுதுமட்டுவாளுக்கான வழங்கற்பாதை

4. எழுதுமட்டுவாள் - மிருசுவிலிலிருந்து கிளாலிக்கான உப வழங்கற் பாதை,

5. எழுதுமட்டுவாளிலிருந்து கிழக்காக நாகர் கோயிலுக்கான உபவழங்கற்பாதை.

கொடிகாமத்திற்கும் எழுதுமட்டுவாளுக்கும் இடையில் கண்டி வீதி (A9) தற்செயலாகப் புலிகளால் துண்டிக்கப்பட்டால் வெளியேற அல்லது வழங்கலை (supply) மேற்கொள்ள வசதியாக 52 - 3 பிரிகேட்டின் எழுதுமட்டுவாள் தளமும், கிளாலித்தளமும் கடற்படையின் Special Boat Squadron தளமும் A9 க்கு கிழக்காகக் கடல்நீரேரியையும் அதையண்டிய கச்சாய், கொடிகாமப் பாதையையும் இலகுவாக எட்டக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன. தென்மராட்சியில் உள்ள சிறிலங்காப் படையினரின் இரண்டாவது பின்புலப் பாதுகாப்புத்தட்டு கொடிகாமத் தளத்தையும், அதன் உப படைநிலைகளையும், கொடிகாமத்திலிருந்து வறணியூடாக நெல்லியடி செல்லும் பிரதான வழங்கற் பாதையையும் உள்ளடக்கியது.




இங்கு பிரச்சினை என்னவெனில் தென்மராட்சியிலுள்ள சிறிலங்காப் படையினரின் பாதுகாப்பிற்கு உயிர்நாடியான கொடிகாமம் - வறணி - நெல்லியடிச்சாலை பலாலியிலிருந்து தூரம் கூடிய, தலையைச் சுற்றி மூக்கைத்தொடும் வகையில் அமைந்த வழங்கற் பாதையாகும் என்பதே.

பலாலிக்கும் தென்மராட்சிக்கும் இடையில் மிகக் குறுகிய தூரத்தைக் கொண்ட வழங்கற்பாதை புத்தூர் - சரசாலை வீதியாகும். இதைப் புலிகள் ஓயாத அலைகள் மூன்றின் இறுதிக்கட்டத்தில் துண்டித்து விட்டனர். அடுத்தது யாழ்நகர் - சாவகச்சேரியூடான கண்டிவீதி (A9). இதையும் புலிகள் அப்போது துண்டித்து விட்டனர்.

தென்மராட்சியில் தன்பிடியைத் தளரவிடாது வைத்திருக்க வேண்டுமாயின் எப்படியாவது புத்தூர் - சரசாலைப் பாதையைக் கைப்பற்ற வேண்டும் எனச் சரியாகவே கணிப்பீடு செய்து ரிவிகிரண நடவடிக்கையைத் தொடங்கிப் படுதோல்வி கண்டது சிறிலங்காப் படைத்தலைமை. ஆனால் இப்பின்னடைவுக்கிடையிலும் புத்தூர் - சரசாலை வீதியில்லாவிட்டால் தென்மராட்சியில் மூளக்கூடிய பெருஞ்சண்டைகளுக்குத் தேவையான வழங்கலையும், காயம்பட்டோர் வெளியெடுப்பையும் எதிரியை விடத்துரிதமாக செய்ய முடியாது போய்விடும். அப்படியானால் களமுனையில் புலிகளின் கை ஓங்குவதை தடுக்க முடியாது என்பதை உணர்ந்த சிறிலங்காப்படையினர் மீண்டும் க ா ன ா ஹ ° ர எனும் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டு அப்பாதையை இருவாரங்களுக்கு முன்னர் கைப்பற்றினர். ஆனால் அதன் சுற்றுப்புறங்களில் இருந்து புலிகளை முற்றாக அகற்ற முடியாமல் போனதால் புத்தூர்-சரசாலை வீதி இன்னும் தென்மராட்சிக்கான பிரதான வழங்கற் பாதையாகச் (Main Supply Route) இயங்க முடியாதுள்ளது.

இந்நிலையில் புலிகள் தென்மராட்சியிலுள்ள படையினரின் பாதுகாப்புக் கட்டமைப்பின் முதல் தட்டிலுள்ள இரு உறுப்புக்களை கைப்பற்றியுள்ளனர். ஒன்று எழுதுமட்டுவாள் தளத்தின் முற்காவல் வலையம், இரண்டாவது எழுதுமட்டுவாள் நாகர்கோவில் பாதை. இத்துடன் கண்டிவீதியில் எழுதுமட்டுவாள் சந்தியிலிருந்து கிளாலி செல்லும் உபவழங்கற் பாதையையும் புலிகள் துண்டித்துள்ளனர். (ஆனால் மிருசுவில் ஊடாக ஒரு மாற்று வழியை சிறிலங்காப் படையினர் திறந்துள்ளனர்.)

இதனிடையில் புலிகள் எழுதுமட்டுவாள் - நாகர்கோயிற் பாதையை கைப்பற்றி அதை ஊடறுத்து கண்டற்காட்டுப்பகுதியூடாக வடமேற்காக வறணிப்பக்கம் நகர்ந்துள்ளனர். புலிகளின் இப்படை நகர்த்தல் தென்மராட்சிக்கான ஒரே ஒரு பிரதான வழங்கற்பாதையை நேரடியாக அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. கொடிகாமம்-நெல்லியடிப் பாதை துண்டாடப்பட்டால் தென்மராட்சி தப்புவது கடினம் என்பதை உணர்ந்து சிறிலங்காப்படையினர் வறணியையும் இவ்வீதியிலுள்ள ஏனைய படைநிலைகளையும் பலப்படுத்துகின்றனர். புத்தூர்-சரசாலைப் பாதையை திறக்கவும் அவர்கள் கடும் முயற்சி எடுக்கின்றனர். புலிகளின் அடுத்த படை நகர்த்தல் சிறிலங்காப் படையிரின் மேற்படி எதிர்பார்ப்பின் அடிப்படையில் அமையுமா? அல்லது எதிர்பாராத முனையில் கிளம்புமா? என்பதுதான் ஓயாத அலைகள் நான்கு இன்று எழுப்பியுள்ள கேள்வி. குடாநாட்டுப போர்ச் சதுரங்கத்தின் காய் நகர்த்தலுக்கான வாய்ப்பும் வசதிகளும் புலிகள் பக்கம் அதிகரித்துச் செல்கின்றன என்பதும் அதைத்தடுக்க சிறிலங்காப்படைத்தலைமை அடுத்து என்ன செய்யப் போகிறது என்பதிலுந்தான் ஈழப்போரின் எதிர்காலப்போக்கு தங்கியுள்ளது.

- டி.சிவராம்

# அஷ்ரஃப்பிலிருந்து அடுத்த கட்டத்திற்கு...!

அஷ்ரஃப்பினுடைய திடீர் மரணம் ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து எல்லோரும் படிப்படியாக விடுபடத் தொடங்கியிருக்கிறார்கள். அஷ்ரஃப் இல்லாத முஸ்லிம் அரசியல் எதிர் கொள்ளவிருக்கும் பிரச்சினைகள் பற்றிய விவாதம் பொதுத்தளத்தில் முனைப்புப் பெற்றிருக்கிறது. அஷ்ரஃப் இனி மீண்டும் வரப்போவதில்லை என்ற யதார்த்தம், முஸ்லிம் அரசியலின் எதிர்காலம் குறித்த மிகத் தீர்க்கமான கேள்விகளை எழுப்பியுள்ளது. மிக இருண்ட அரசியல் எதிர்காலம் பற்றிய அச்சம் சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு முஸ்லிம் தனிமனிதனிலும் கடுமையாக உறைத்திருக்கும் இந்தச் சூழ்நிலையில் நமது பணிகளும் பொறுப்புகளும் மேலும் அதிகரித்துள்ளன.

கடந்த கால முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அஷ்ரஃப் என்ற தனி மனிதரைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டிருந்தது. அவருக்கு வெளியிலான ஒரு அரசியல் குறித்துச் சிந்திப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் மிகச் சொற்ப அளவிலேனும் தன்னைத் தயார்படுத்தியிருக்கவில்லை. எதிர்காலம் குறித்த தொலைநோக்கின்மைக்கு இன்று அது கொடுக்க வேண்டியிருக்கும் விலை மிக அதிகமாகும். மு.கா.வின் இரண்டாம் கட்டத் தலைமையில் ஏற்பட்ட இந்த வெறுமைக்கு அஷ்ரஃபும் காரணமாய் அமைந்தார். இன்று ஏற்பட்டது போன்ற ஒரு சூழ்நிலை ஏற்படாமல் தவிர்த்திருக்க அவர்களுக்கு எல்லா வாய்ப்புகளும் இருந்தன. இவ்வாறான ஒரு சூழ்நிலையைத் தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ளுமாறு கடந்த காலங்களில் மு.கா.வுக்குச் சொல்லப்பட்டே வந்தது. பத்திரிகை விமர்சனங்களும் பொறுப்புணர்வோடு சிந்திப்பவர்களின் கருத்துகளும் இதைத் திரும்பத் திரும்ப சொல்லியே வந்தன. ஆனால், இதை அவர்கள் மிகுந்த அலட்சியமாகவே எடுத்துக் கொண்டார்கள். சிலவேளைகளில் அஷ்ரஃப் ஆண்டாண்டு காலமாய் தம்மோடு இருப்பார் என்ற பாமரத்தனமான கனவுகள் அவர்களுக்கு இருந்திருக்கக் கூடும். வரலாற்றில் தாம் இழைக்கும் ஒவ்வொரு பெரும் தவறுக்கும் கொடுக்க வேண்டிய விலையின் கனதியை அவர்கள் இன்று அனுபவபூர்வமாக உணர்ந்திருப்பர்.

றவூப் ஹக்கீமின் தலைமைக்கு எதிராகத் தற்போது நிறைய விரல்கள் நீட்டப்படுகின்றன. கிழக்கிற்கு வெளியிலுள்ள ஒருவர் எவ்வாறு முழுக்க முழுக்க கிழக்கு மாகாணத்தையே தனது ஆதரவுத் தளமாகக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் தலைமையைக் கையேற்க முடியும் என்ற வாதம் கிழக்கு முழுவதும் வலுவடைந்து வருவதைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. கிழக்கு மாகாண மக்களது குறிப்பான பிரச்சினை பற்றிய தெளிவுகள் இல்லாத ஒருவர் எப்படி இம்மக்களது பிரச்சினைகளுக்காகக் குரலெழுப்புவார் என்றும் கேட்கப்படுகிறது. பாரம்பரியமாகத் தென்னிலங்கை முஸ்லிம்கள், கிழக்கு முஸ்லிம்கள் பற்றிக் கொண்டிருக்கும் தாழ்வான அபிப்பிராயத்தை றவூப் ஹக்கீமின் தலைமை உடைக்குமா அல்லது ஆழப்படுத்துமா என்பன போன்ற கேள்விகளும் மேற்கிளம்புகின்றன. இந்தக் கேள்விகளுக்குப் பின்னாலுள்ள பிராந்தியவாத அரசியல் போக்கு மு.கா.வின் நடத்தையில் எவ்வாறான எதிர்வினைகளை ஏற்படுத்தும் அல்லது ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கிறது என ஆராய்வது மிக முக்கியமானதாகும்.

அஷ்ரஃப் மரணித்த மறுநாள் கூடிய கட்சியின் அரசியல் பீடம் தலைமையைத் தேர்ந்தெடுப்பதில் பிளவுபட்டு நின்றதாகத் தெரியவருகிறது. முதலில் ஃபேரியல் அஷ்ரஃப்பின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. பின்னர் மற்றொரு அணியினர் றவூப் ஹக்கீமின் பெயரைப் பிரேரித்துள்ளனர். வேறுசிலரது பெயர்களும் அடிபட்டிருக்கிறது. இறுதியாக இந்த உள் முரண்பாடு கூட்டுத்தலைமை என்ற பெயரில் தற்காலிகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது. புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் குழப்பம் நிலவுவதால் தற்போது தேர்தலுக்கான ஒரு செயலணியே தெரிவு செய்யப்படும், தலைமை பின்னர்தான் தேர்ந்தெடுக்கப்படும் என்று கூட எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஹிஸ்புல்லாஹ், மருதூர்க்கனி போன்றோரின் நடவடிக்கைகள் தலைமைப் பதவியைக் குறி வைத்தே இயங்குகின்றன என்பதை நிலைமையை நுணுக்கமாக அவதானிக்கும் எவரும் அவதானித்திருப்பர். கிழக்கிலிருந்தே தலைமை அமைய வேண்டும் என்ற அபிப்பிராயத்தை தமது சொந்த இலாபங்களுக்காக கட்சிக்குள்ளிருந்தே ஒரு சிலர் தூண்டி விடுகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



கிழக்கிலிருந்தே முஸ்லிம் காங்கிரஸின் அடுத்த தலைமைத்துவம் அமைய வேண்டும் என்ற வாதத்தை முன்வைப்போர் பின்வரும் காரணங்களைக் காட்டுகின்றனர்.

1. முஸ்லிம் காங்கிரஸ் 1988 இலிருந்து பலமான அரசியற் கட்சியாக ஸ்தாபிதமடைவதற்கு கிழக்கு முஸ்லிம்களது உறுதியான ஆதரவே முதன்மைக் காரணம். தென்னிலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் மு.கா.பலவீனமான ஆதரவையே கொண்டுள்ளது. தென்னிலங்கை முஸ்லிம்களுள் கணிசமானோர் இன்றும் ஐ.தே.க ஆதரவாளர்களே.
2. அஷ்ரஃப்பையும் மு.கா.வையும் உருவாக்கியதில் எண்பதுகளின் பிற்கூறில் நிலவிய சூழ்நிலையின் பாத்திரத்தை மறுதலிக்க முடியாது. கொலையும் இரத்தமும் மலிந்திருந்த அந்தச் சூழ்நிலையின் எல்லாப் பரிமாணங்களையும் அதன் உள்ளும் புறமுமாய் வாழ்ந்த ஒருவரால் தான் மிகச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். அதற்கு வெளியே இருந்து பார்க்கின்ற ஒருவர் அதன் ஆழ அகலங்களைப் புரிந்து கொள்வாரா என்பது சந்தேகமே.
3. தென்னிலங்கை முஸ்லிம்கள் சிங்களவர்கள் மத்தியில் வாழ்கின்றவர்கள். ஆனால், வடகிழக்கு முஸ்லிம்கள் தமிழர்கள் மத்தியில் வாழ்பவர்கள். இந்தச் சமூகவியல் கட்டமைப்பு ஏற்படுத்தும் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் வேறுவேறு பரிமாணங்களை உடையவை. இந்த யதார்த்தத்தை எரியும் இனப்பிரச்சினையின் மையமான வடகிழக்கில் வாழும் ஒருவரால் தான் சரியாகப் புரிந்து கொள்ள முடியும். தென்னிலங்கையில் வாழும் ஒருவர் சிங்கள மக்களோடு வாழ்வது பற்றிய பிரச்சினைகளையே முதன்மைப்படுத்துவார்.
4. மிக நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த வடகிழக்குப் பிராந்தியம் அஷ்ரஃப்பின் வருகைக்குப் பின்னர் தான் நிறைய அபிவிருத்திகளைக் கண்டது. வடகிழக்கிற்கு வெளியிலுள்ள ஒருவரால் இது எந்தளவு தூரத்திற்கு முனைப்பாகக் கொண்டு செல்லப்படும் என்பது கேள்வியே.

மு.கா.வின் ஆதரவு தளத்திலிருந்து மேலெழும் இந்த வாதங்கள் முற்றாகப் புறந்தள்ள முடியாத நிலையே ஏற்படும். அப்போது கட்சியின் அடுத்த தலைமையை யார் பொறுப்பேற்பது என்ற கேள்வி எழும். அதைத் தொடர்ந்து உள் முரண்பாடுகள் வலுப்பெறும் வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறான ஒரு சூழ்நிலை தோன்றுமாயின் மு.கா.வின் கட்டுக்கோப்பில் விரிசல்கள் விழுந்து கட்சி சிதைந்து சின்னாபின்னமாகும் சாத்தியங்களே உள்ளன. பொறுப்புணர்வோடு சிந்திக்கும் எவரும் தேசிய அரசியலில் முஸ்லிம்களுக்கு இருக்கும் ஒரேயொரு அரசியல் ஸ்தாபனமான மு.கா.வின் இந்த வீழ்ச்சியை விரும்ப மாட்டார்கள். ஆனால் யதார்த்தங்களை மறுதலிக்க முடியாத இக்கட்டான சூழ்நிலையையே நாம் எதிர் கொண்டுள்ளோம். முஸ்லிம் காங்கிரஸ் தனது அக முரண்பாடுகளை எந்தளவு தூரத்திற்கு தனது கட்டுக்கோப்பைச் சிதைக்காது தீர்த்துக் கொள்ளப் போகிறது என்ற அச்சமும் சந்தேகமும் நாளுக்கு நாள் வலுவடைந்து கொண்டே வருகிறது. எதிர்வரும் நவம்பரில் நிகழவுள்ள கட்சியின் வருடாந்த மாநாட்டிலேயே முறைப்படி புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. போதாததற்கு அமைச்சர் பதவிகள், தேசியப் பட்டியலில் யாரைப் பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பது என்பன போன்ற விடயங்களும் மிக விரைவில் பூதாகரமாக வெடிக்கலாம்.

இது இவ்வாறிருக்க, அமைச்சர் அஷ்ரஃப் பிரதிநிதித்துவப்படுத்திய கல்முனைத் தொகுதிக்கு, அவரது மரணத்தின் பின்னர் ஃபேரியல் அஷ்ரஃப்பை வேட்பாளராக நியமித்திருப்பதை அப்பிரதேச மு.கா ஆதரவாளர்கள் எதிர்க்கின்றனர். கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்தவரும் அஷ்ரஃப்பின் உறவினருமான நிஸாம் காரியப்பரை அந்த இடத்திற்கு நியமிக்க வேண்டுமென்று அவர்கள் கோரி வருகின்றனர். முஸ்லிம்களிடையே நன்கு வேரூன்றிப் போயுள்ள பிரதேச அரசியலைப் புரிந்து கொண்ட எவரும் இதை அலட்சியம் செய்ய முடியாது. அரசியற் களத்தில் முன் அனுபவமுள்ள மு.கா. இதைக் கவனத்தில் எடுக்காமை, அதற்குப் பாதகமான எதிர்விளைவைத் தரும் சாத்தியத்தையும் நிராகரிக்க முடியாது. குறைந்தபட்சம் தேசியப் பட்டியல் எம்.பியையாவது அவர்களுக்குத் தருவதாக உத்தரவாதம் அளித்திருக்கலாம் என்ற அபிப்பிராயங்களும் அங்கு நிலவுகின்றன. மிகச் சிக்கலான அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக கட்சியின் புதிய தலைமை எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இந்தச் சூழ்நிலைகள் ஒரு முக்கியமான விடயத்தை நோக்கி நமது கவனத்தை ஈர்க்கின்றன. ஒரு காலத்தில் வடகிழக்கு முஸ்லிம்களின் ஏகோபித்த குரலாக அமைந்து, ஒட்டுமொத்த முஸ்லிம்களது தேசிய அரசியல் விடுதலை இயக்கமாகப் பரிணமித்த முஸ்லிம் காங்கிரஸ் தனது மைய நோக்கங்களிலிருந்து படிப்படியாக விலகிச் சென்று இன்று எங்கு நிற்கிறது என்பதையே, அதன் எதிர்காலம் குறித்து எழுப்பப்படும் அச்சங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

ஏற்கெனவே வடிவமைக்கப்பட்ட அரசியல் போக்கொன்றை இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொள்ள வேண்டியிருப்பது ஒரு தற்செயல் நிகழ்வா? அல்லது அதுவே நன்கு ஸ்தாபிதமடைந்த ஒரு யதார்த்தமா? முஸ்லிம் அரசியல், ஒரு நீண்ட மாற்று வேலைத்திட்டத்திற்கான எதிர்பார்ப்புகளோடு உள்ள ஒரு காலகட்டத்தில் நாம் உள்ளோம்.


முஸ்லிம் காங்கிரஸுக்கு கடந்த காலங்களில் அளிக்கப்பட்ட ஆணை வெறுமனே ஒரு தலைமைத்துவக் கையளிப்பு மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் அரசியல் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான அங்கீகாரமுமாகும். அந்தத் தேவை இன்னமும் மாறாமல் இருக்கிறது. சரியாகச் சொன்னால் அது மேலும் அதிகரித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் ஒரு பலமான மாற்று அரசியல் வேலைத்திட்டம் பற்றி எமது கவனத்தைக் குவிமையப்படுத்துவது மிக அவசியமானதாகும். மீண்டும் ஒரு சூழ்நிலையின் தேவை தான் நம்மை வழிநடத்த வேண்டுமா அல்லது தூரநோக்குடையதும் நன்கு திட்டமிட்டதுமான அரசியல் வேலைத்திட்டமா நமது தேவை? இதில் ஒரு தெளிவான நிலைப்பாட்டை நாம் எடுத்தாக வேண்டிய தருணம் வந்து விட்டது.

> முஸ்லிம் காங்கிரஸுக்கு கடந்த காலங்களில் அளிக்கப்பட்ட ஆணை வெறுமனே ஒரு தலைமைத்துவக் கையளிப்பு மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் அரசியல் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான அங்கீகாரமுமாகும். அந்தத் தேவை இன்னமும் மாறாமல் இருக்கிறது. சரியாகச் சொன்னால் அது மேலும் அதிகரித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் ஒரு பலமான மாற்று அரசியல் வேலைத்திட்டம் பற்றி எமது கவனத்தைக் குவிமையப்படுத்துவது மிக அவசியமானதாகும். மீண்டும் ஒரு சூழ்நிலையின் தேவை தான் நம்மை வழிநடத்த வேண்டுமா

-ஸிராஜ் மஷ்ஹூர்

## அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

கடந்த வாரத்துச் சிங்களப் பத்திரிகைச் செய்திகள் குறித்த ஒரு அலசல்



கே.சி.ஜே.ரட்ணாயக்க

"சமூக விரோதிகளை மதகுருமார்கள் போல் உருமாற்றி வாக்குச் சாவடிகளுக்கு அனுப்ப சதி"

*- முத்தட்டுவே ஆனந்த தேரர் கூறுகிறார்.*

ஒக்டோபர் 01ம் திகதி "ஞாயிறு லக்பிம" பத்திரிகையின் பிரதான தலைப்புச் செய்தி மேற்கூறியவாறு காணப்பட்டது. தேசிய சங்க சபையும், தாய்நாட்டை பாதுகாக்கும் அமைப்பும் செயற்படுத்தவுள்ள தேர்தல் சாவடிகளை பாதுகாக்கும் குழுக்களை அமைக்கும் வேலைத்திட்டத்தை குழப்ப, அமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவரினால் இரகசிய வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தவுள்ளதாக இச் செய்தியில் கூறப்படுகின்றது.

"அரசியல்வாதிகள் சிலர் வன்முறைகளை தூண்டுகிறார்கள் என பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது"

**"பாதாள உலகத்தை பயன்படுத்தி தேர்தல் வன்முறைக்கு திட்டம்"**

திவயின ஞாயிறு பத்திரிகையின் பிரதான தலைப்புச் செய்தியில் "தங்களுக்கு வாக்களிக்காத வாக்காளர்களை வாக்குச் சாவடிகளுக்கு செல்ல விடாது தடுக்க பாதாள உலகக் கோஷ்டிகளைப் பயன்படுத்தி வன்முறையை பிரயோகிக்க திட்டமிட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**"வாக்குகளை கொள்ளையடிக்க இராணுவ நடவடிக்கை"- ராவய**

இரணுவச் சேவையில் இருந்த விலகிய மற்றும் தப்பியோடிய சிப்பாய்கள், பாதாள உலகத்தினர் ஆகியோர் கண்டி மாவட்டத்தில் பரந்தளவில் தேர்தல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாக ராவய தனது தலைப்புச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

**"தேர்தல் வேட்பாளர்கள் மத்தியில் தபால் குண்டு பீதி"**

வேட்பாளர்களை படுகொலை செய்ய புலிகள் இயக்கத்தினால் பார்சல் குண்டுகளை பயன்படுத்திக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதனால் வேட்பாளர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டுமென பொலிஸ் அறிவுறுத்தியுள்ளதாகவும் லங்காதீப பத்திரிகை தனது தலைப்புச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

திவயின-ராவய-லங்காதீப மற்றும் லக்பிம ஆகிய வார இறுதிப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் அனைத்திலும் நடைபெறவுள்ள தேர்தல், வன்முறைகள் நிறைந்ததாகவும், துஷ்பிரயோகங்கள் நடைபெறக் கூடியதாகவும் இருக்கும் என்ற ஐயப்பாட்டைத் தெரிவித்துள்ளன.

இப்பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளில் தென்னிலங்கை வாக்காளர்கள் மத்தியில் நிலவும் சந்தேகத் தன்மை குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளன. எனினும் அரசாங்கத்தின் சார்பில் இத் தேர்தல் வன்முறைகள் குறித்து நிலவும் ஐயப்பாடு தொடர்பாக வெளிப்படுத்தப்படும் எதிர்வினைகளை ஆராய்ந்தால், சில தொடர்பூடகங்கள் சிறு சம்பவங்களை பூதாகரமாக பெரிதுபடுத்தி வெளியிடுகின்றன என்ற குற்றச்சாட்டைக் காணக் கூடியதாகவுள்ளது. அதேபோல், வன்முறைகள் குறித்து செய்திகளை வெளியிடுவதன் மூலம் அரசாங்கத்தை தேசிய, சர்வதேசிய ரீதியாக நெருக்கடிக்குள்ளாக்குவது இவற்றின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பலதரப்பட்ட பிரதேசங்களில் குறிப்பாக கண்டி, ஆனமடுவை, குருணாகலை, அனுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் தேர்தல் வன்முறைகள் அதிகம் இடம்பெற்றுள்ளன என்பது உண்மையாகும். எனினும் பத்திரிகைகளில் தேர்தல் வன்முறைகள் அறிக்கையிடப்பட்டுள்ள முறைமை சிக்கலானது என்பதும் உண்மையாகும். வாக்காளர்கள் மத்தியில் முழு நாடும் வன்முறைகளினால் நிறைந்துள்ளது என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதை தவிர இவ்வன்முறைகளை குறைக்க தென்னிலங்கை சிங்கள தொடர்பூடகங்கள் முயல்கின்றமையை காணக் கிடைக்கவில்லை. தெற்கில் கம்புறுபிட்டிய பிரதேசத்தில் தேர்தல் வன்முறைகளை குறைத்து விட அரசியல் கட்சிகள் எடுத்துள்ள திடசங்கற்பத்தை பற்றி சிங்களப் பத்திரிகைகள் போதியளவு அவதானத்தை செலுத்தவில்லை. இவ்விடயம் குறித்து அரசாங்கத்தின் சார்பில் வெளியிடப்படும் எதிர்வினைகளும் மகிழ்ச்சியான தாக இல்லை. தேர்தல் வன்முறைகளைத் தடுக்க வழங்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தையும், பொறுப்பையும் கிரமமாக நிறைவேற்றாமையும் உண்மையாகும். இச் சூழ்நிலையில் சுதந்திரமான மனோபாவத்துடன் வாக்காளர்கள் ஒக்டோபர் 10ம் திகதி தமது வாக்குகளைப் பிரயோகிக்கக் கூடிய சூழல் உள்ளதா என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். சுதந்திரமானதும் நீதி-

19

## தென்னிலங்கை யுத்தவாத அரசியலுக்கு புலிகளும் பங்களித்துள்ளனர்!

## கைநிறைய பணமிருந்தால் பா.உ. ஆகிவிடலாம்!

- சுரேஸ்



**இந்தத் தேர்தலில் பங்குபற்றுவதற்குக் குறிப்பான காரணம் எதுவுமுண்டா ?**

ஓர் ஜனநாயகக் கட்சி என்ற முறையில் ஜனநாயகத் தளங்களைப் பாவித்துக் கொள்ள வேண்டுமென்பது முதலாவது காரணமாகும். அதேசமயம் இத்தேர்தலினூடாகக் குறைந்த பட்சம் பெரும்பான்மையான வகையிலாவது சரியான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என விரும்புகின்றோம்.

கடந்த காலங்களில் ஒரு சில வாக்குகளுடன் பாராளுமன்றம் சென்றோர், தாம் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என வேடமிட்டு, முழுத் தமிழ் மக்களையும் வியாபாரம் செய்யும் வேலைகளிலேயே ஈடுபட்டார்கள். இருபது வருடகால எமது மக்களின் தியாகம், துன்பங்கள், அழிவுகளை மூலதனமாக்கி, எமது நியாயமான கோரிக்கைகளை விலைபேசுகின்றார்கள். இந்நிலையில் தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கைகளை வெளியிடக்கூடிய, இராணுவ அழுத்தங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசியல் அழுத்தங்களை உருவாக்கக்கூடிய யுத்தத்தை நிறுத்திச் சமாதானப் பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு ஆக்கபூர்வமான பங்களிப்புச் செய்யக்கூடிய பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட வேண்டுமென விரும்புகின்றோம். இவைதான் தேர்தலில் பங்குபற்றுவதற்கான முக்கிய காரணிகளாகும்.

**இம்முறை முன்னொருபோதும் இல்லாதவாறு பெருந்தொகையான வேட்பாளர்கள் வன்னித் தொகுதியில் போட்டியிடுவது பற்றி..?**

ஒரு பக்கத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் அமைப்புக்கள் சிதறுப்பட்டு நின்றாலும் முதன் முதலாக பல்வேறுபட்ட சிங்கள இனவாத குழுக்களும் வடகிழக்கு மாகாணத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றன. இது வடகிழக்கு என்பது தமிழரின் பாரம்பரிய பிரதேசம் இல்லை என்பதை காட்டவும் தமக்கும் அதில் பங்கு உண்டு என்பதை தமிழருக்கு உணர்த்துவதுமே இவர்களது எண்ணமாக இருக்கும்.

அதேசமயம் பாராளுமன்றத்தில் அழுத்தம் கொடுக்கக்கூடிய சிறிய குழுவாக இரந்தால் தீர்வுத்திட்டம் எதுவானாலும் எதுவாக இருக்குமென்பது இன்னொரு விடயம். இவைதவிர பாராளுமன்றம் என்பது பொதுவாகவே ஒரு வகையில் பல சலுகைகளைக் கொண்ட சமூகத்தில் ஓர் அந்தஸ்தைக் கொடுக்குமிடமாகவும் பரவலாக மக்களால் நம்பப்படுகின்றது. எனவெ கொள்கை, சமூகமுன்னேற்றம் தமது தாய் நாட்டின் முன்னேற்றம், என்பதையெல்லாம் மறந்து பாராளுமன்றம் ஒரு வகையில் சுலபமான பணத்தை சம்பாதிக்கும் இடமாகவும் கருதப்படுகின்றது. குறைந்த பட்சமக்கள் ஆதரவும் கைநிறைய பணமுமிருந்தால் பாராளுமன்ற உறுப்பினராகி விடலாம் என்று பலர் நம்புகின்றனர். அப்படி வந்துவிட்டால் போட்ட முதலிலுாவிட கூட உழைத்துவிடலாம் என்றும் சிந்திக்கின்றனர். கட்சியில் தேர்தல் நியமனம் கிடைக்காதவர்களும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டோரும் சுயேட்சையாக தேர்தலில் நிற்பது இதனையே காட்டுகிறது.

**இவ்வாறு பல குழுக்கள் போட்டியிடுவது தமிழ் மக்களிடையே அடிப்படையில் ஒற்றுமை இல்லை என்பதை அப்பட்டமாக காட்டுகிறது அல்லவா? இது பற்றி தங்களின் கருத்து?**

தமிழ்க்கட்சிகள் இயக்கங்களைப் பொறுத்தவரையில் அவர்களிடம் ஒற்றுமையில்லை என்பது உலகறிந்த விடயம். தமிழீழ விடுதலையென்பது புறப்பட்ட பல இயக்கங்கள் கடந்தகாலங்களிலும் இன்றும் தமது இருப்புக்களை காப்பாற்றிக்கொள்ள அரசுடனும் இராணுவத்துடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள் என்பது நாடறிந்த விடயம். இதற்கு விதிவிலக்காக ஒரு சில கட்சிகள் இருக்கின்றன என்பதும் உண்மையே. ஆனாலும் கூட தமக்கே உரித்தான சில பசப்பு காரணங்களை முன்வைத்து இவர்கள் ஒன்றுபட தயங்குகின்றார்கள். எம்மை பொறுத்தவரையில் தமிழ் இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமையை உருவாக்க பல முன் முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனால், ஏனைய தமிழ்க்கட்சிகள் அமைப்புக்களிடமிருந்து அதற்குச் சரியான ஆதரவு கிடைக்கவில்லை.

**வரதருக்கு தேசியப்பட்டியல் பதவி வழங்கப்பட்டுள்ளதற்கான காரணமாக எதை கருதுகிறீர்கள்?**

அரசாங்கம் நடத்தும் அழிவு யுத்தம் அரைகுறை தீர்வுத்திட்டம் இவற்றை தமிழர் மத்தியில் நியாயப்படுத்தி பிரச்சாரம் செய்ய சரியான ஓர் 'தமிழன்' தேவை. இதனை சர்வதேச ரீதியில் பிரச்சாரப்படுத்த தமிழ்த் தெரியாத தமிழனை அரசு ஏற்கெனவே தன் வசம் வைத்துள்ளது. இன்று தமிழர் மத்தியில் பிரச்சாரம் செய்ய தமிழ்த்தெரிந்த தமிழன் தேவை. அதுவே வரதராகும். அரசுக்கு இவர் தேவைப்பட்டது போல இவருக்கு தனது இருப்பைத்தக்கவைத்துக்கொள்ள ஆயுதம், பணம், பாதுகாப்பு முதலியன தேவை. இவற்றை அவரிடம் இருந்துதாபன் பெற்றுக் கொள்ளலாம். எனவே அரசின் உதவிக்கு ஒரு கைமாறு என்று வைத்து கொள்ளலாம்.

**யாழ்ப்பாணத்தில் அங்கு யுத்தம் மீள வலுப்பெற்ற இச்சூழலில் ஒரு நியாயமான தேர்தலை நடாத்த முடியும் என்று கருதுகிறீர்களா?**

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் பாரிய யுத்தம் நடைபெறுகிறது. நாளாந்தம் மக்கள் அகதிகளாகின்றனர். பல தீவுப்பகுதிகள் அரச துணைப்படையான ஈ.பி.டி.பியிடம் உள்ளது. இந்நிலையில் அங்கு எவ்வாறு தேர்தல் நடத்த முடியும். வடக கிழக்கின் ஏனைய பிரதேசங்களில் பாரிய நிலப்பரப்புக்களை புலிகள் தம் வசம் வைத்துள்ளனர். இப்பிரதேச மக்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பங்கள் இது இருக்குமென கூறமுடியாது. இருந்தபோதும் கூட அரசு தேர்தலை வைப்பதில் திடமாக உள்ளது. மக்கள் தேர்தலில் ஆவலற்று இருந்தாலும் கூட ஒரு பகுதி மக்கள் அளிக்கும் வாக்குகளிலாவது யாரோ ஒருவர் தெரிவு செய்யப்படத்தான் போகின்றார்கள். அவர்கள் சரியான ஆட்களாக இருக்க வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கை.

**இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் தமிழ்க்கட்சிகளால் உருப்படியான எதுவும் சாதிக்கப்படவில்லை. இனியும் சாத்தியப்படும் என்று நினைக்கின்றீர்களா?**

எல்லா இயக்கங்களும் ஒன்றுபட்டால் அரசின் மீது பல அழுத்தங்களைக் கொண்டு வரலாம். ஒன்று படுமா என்பது தான் இன்றுள்ள கேள்வி.



# பெருவிரல் நகங்களைப் பிடுங்கினர்! அலவாங்கில் ஏற்றினர்!!

## வவுனியாவில் பொலிஸ் விசாரணையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட இளைஞர் சொல்கிறார்

**அலுமினிய குடத்தினால் தலையில் அடித்தால் காயமேற்பட்டுள்ளது. இரும்பு கம்பியால் அடித்ததனால் தனது உடம்பில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். பொலித்தீன் பையில் மிளகாய்த்தூளையும் பெற்றோலையும் விட்டு அதைக் கண்ணில் போட்டுக் கட்டினார். கையையும் காலையும் கட்டிவிட்டு தண்ணீர் தொட்டியில் போட்டனர். இரு கால்களிலும் உள்ள பெருவிரல் நகங்களை பிடுங்கி எடுத்தனர். அந்தக் காயத்தில் ஊசியால் குத்தினார்கள். கூரிய அலவாங்கை நிலத்தில் புதைத்துவிட்டு கூரான நுனியில் இருக்குமாறு பணித்தனர். அதனால் மலவாசலில் அலவாங்கு கூர் குத்தி மலவாசல் காயமடைந்திருக்கிறது. இதனால் தினமும் இரத்தம் வெளியேறிக் கொண்டிருக்கிறது.**

அவசரகாலத் தடைச்சட்ட விதிகளின் கீழ் குற்றம்சாட்டப்பட்டிருந்த இராமச்சந்திரன் யோகராசா என்ற இளைஞரிடமிருந்து பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சித்திரவதை செய்யப்பட்டே பெறப்பட்டதாக மன்றில் நிரூபிக்கப்பட்டதால் சட்டப்பிரமாணங்கள் பின்பற்றப்படவில்லை எனக் கூறி வழக்கைத் தள்ளுபடி செய்த வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். சிறிஸ்கந்தராசா எதிரியை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்கத்தைச்சேர்ந்த இராமச்சந்திரன் யோகராசா (24வயது) என்ற இளைஞர் மூன்று வருடங்களுக்கு முன், 11.1.97 அன்று மட்டக்களப்பு நகரில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். இவர் மட்டக்களப்பு பற்பொடி கம்பனி இராணுவ புலனாய்வு பிரிவு முகாமில் மூன்று நாட்களும், கல்லடி இராணுவு முகாமில் மூன்று நாட்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் 16.1.97 அன்று மட்டக்களப்பு நாசகாரக்குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் ஒப்படைக்கப்பட்டார். ஒரு மாதத்தின் பின்னர் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட இவர் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

இவர் மீது 1989ம் ஆண்டு அவசரகால சட்டவிதியின் 24,1 பிரிவின் கீழ் 1993.11.10ம் திகதி அன்றும் அதற்கு முன்னராகவும் எல்.ரி.ரி.ஈ இயக்கத்தில் ஆயுதப்பயிற்சி பெற்று வட மாகாணத்தில் உள்ள பூநகரி இராணுவ முகாமைத் தாக்கி இராணுவத்தினருக்கு உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டு வட மாகாணத்திற்கு உட்பட்ட வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குற்றஒப்புதல் வாக்குமூலமே இவ்வழக்கின் பிரதான சான்றுப்பொருளாக சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கின் அரச தரப்புச் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த, ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்த சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஈ.ஏ.குணதிலக , உப பொலிஸ் சேவையைச்சேர்ந்த மொழிபெயர்ப்பாளர் அல்பேட், சிங்கள தட்டெழுத்தாளர் பத்மசிறி, ஆகியோர் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சாட்சியமளித்தனர்.

எதிரி தரப்பில் தோன்றிய சட்டத்தரணி பேரின்பம் பிரேம்நாத் எதிரியை விசாரணைசெய்தார். மட்டக்களப்பு பற்பொடி கம்பனி இராணுவ புலனாய்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தினங்களும் தான் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாக எதிரியாகிய இராமச்சந்திரன் யோகராசா நீதிமன்றத்தில் தெரிவித்தார். மட்டக்களப்பு கிளர்ச்சித் தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் 16.1.97 அன்று ஒப்படைக்கப்பட்ட பின்னர் அங்கும் தான் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பின்னர் இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் தான் கடுமையாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதனால், தன்னுடைய உடம்பில் பல இடங்களில் காயத்தழும்புகள் காணப்படுவதாகவும் சிறுநீருடன் இரத்தம் வெளியேறிக்கொண்டிருப்பதாகவும் மலவாசல் குதத்திலிருந்தும் இரத்தம் அடிக்கடி வெளியேறிக் கொண்டிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்ட யோகராசா தெரிவித்தார். சித்திரவதையினால் தமது உடம்பில் ஏற்பட்டிருந்த காயத்தழும்புகளையும் நீதிபதியிடம் அவர் காட்டினார்.

அலுமினிய குடத்தினால் தலையில் அடித்தால் காயமேற்பட்டுள்ளது. இரும்பு கம்பியால் அடித்ததனால் தனது உடம்பில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். பொலித்தீன் பையில் மிளகாய்த்தூளையும் பெற்றோலையும் விட்டு அதைக் கண்ணில் போட்டுக் கட்டினார். கையையும் காலையும் கட்டிவிட்டு தண்ணீர் தொட்டியில் போட்டனர். இரு கால்களிலும் உள்ள பெருவிரல் நகங்களை பிடுங்கி எடுத்தனர். அந்தக் காயத்தில் ஊசியால் குத்தினார்கள். கூரிய அலவாங்கை நிலத்தில் புதைத்துவிட்டு கூரான நுனியில் இருக்குமாறு பணித்தனர். அதனால் மலவாசலில் அலவாங்கு கூர் குத்தி மலவாசல் காயமடைந்திருக்கிறது. இதனால் தினமும் இரத்தம் வெளியேறிக்கொண்டிருக்கிறது.

பயங்கரவாதச் சம்வங்களுடன் தனக்கு தொடர்பு இல்லையென்றும் சித்திரவதையினால் வேதனையில் இருந்த போது ஒருநாள் சிங்களத்தில் தட்டச்சு



செய்யப்பட்ட ஒரு பத்திரத்தில் தன்னிடம் கையொப்பம் வாங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். கையொப்பம் வைக்கமறுத்தால் இதைவிட அதிகமான சித்திரவதைகளை அனுபவிக்கவேண்டும் என்ற பயத்தினாலேயே என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி கேட்காமல் அந்தப் பத்திரத்தில் தான் கையொப்பம் இட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த இளைஞரை வைத்தியபரிசோதனைக்குட்படுத்திய மட்டக்களப்பு மாவட்ட சட்டவைத்தியஅதிகாரி எஸ். சந்திரபாலன் சமர்ப்பித்த வைத்தியஅறிக்கையையும் சட்டத்தரணி பிரேம்நாத் சுட்டிக் காட்டினார்.

இரும்புக்கம்பியினால் அடிக்கப்பட்ட காயத்தழும்புகள் உடலில் பல இடங்களில் இருக்கின்றன.

கைகால் விரல் நகங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. ஆண் உறுப்பில் மின்சாரம் பாய்ச்சப்பட்டபின் கம்பியினால் குத்தப்பட்டுள்ளது. இதனால் சிறுநீருடன் இரத்தம் வெளியேறுகிறது. விதைப்பையிலிருந்தும் இரத்தம் வெளியேறுகிறது. கைகால்களில் பிளேட்டினால் வெட்டிய காயங்களும் காணப்படுகின்றன. இவரின் உடலில் சிறிய காயங்கள் தவிர 16 பெரியகாயங்கள் காணப்படுவதாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியஅறிக்கையின் படியும், எதிரியின் சாட்சியின் படியும் சித்திரவதை செய்யப்பட்டே குற்றஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

குற்றஒப்புதல் வாக்குமூலம் எந்த வற்புறுத்தலும் நிர்ப்பந்தமும் இன்றி சுயமாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் தரத்திற்குக் குறையாத ஒருவர் முன்னிலையில் வழங்கப்பட வேண்டும்.

ஆனால் இந்த வழக்கில்- சட்டப்பிரமாணங்களுக்கு அமைவாக குற்றஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை எனக்குறிப்பிட்டு இவ்வழக்கைத் தள்ளுபடி செய்து இவரை விடுதலை செய்வதாக மேல் நீதிமன்ற நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

சந்தேக நபர் சார்பில் வழக்கின் இறுதி நாளன்று சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகமும், அரச தரப்பில் சட்டத்தரணி சசிமகேந்திரனும் ஆஜராகியிருந்தார்கள்.

இதேவேளையில், விடுதலைப் புலிகளிடம் ஆயுதப்பயிற்சி பெற்று ஆனையிறவு, பூநகரி ஆகிய இராணுவ முகாம்களைத் தாக்கி இராணுவத்தினருக்கு உயிரிழப்புக்களை ஏற்படுத்தினார்கள் என்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட வேறு இரண்டு இளைஞர்கள் வழங்கியதாகக் கூறி வவுனியா மேல் நீதிமன்றத்தில் சான்றுப்பொருளாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களும் சித்திரவதை செய்து பெறப்பட்டன என்பதற்கு ஆதாரமாக சந்தேக நபர்களின் உடல்களில் காயத் தழும்புகள் இருந்தமையினாலும், சித்திரவதை செய்யப்பட்டதனாலேயே அந்தக் காயங்கள் ஏற்பட்டன என்று சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையின் சாட்சியத்தில் தெளிவுபடுத்தப்பட்டதனாலும், அந்த இளைஞர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து,

சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு வவுனியா மேல் நீதிமன்ற நீதிவான் எஸ்.சிறிஸ்கந்தராஜா உத்தரவிட்டார்.

இடம்பெயர்ந்து வந்து வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தஞ்சமடைந்திருந்த வேளையில், 1997 டிசம்பர் மாதம் 12ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட எந்திரராசா யோகேந்திரராசா (23) என்ற இளைஞர், விடுதலைப் புலிகளிடம் ஆயுதப்பயிற்சி பெற்றிருந்தார் என்றும், அந்தப் பயிற்சியைப் பயன்படுத்தி 1991 ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கி, இராணுவத்தினருக்கு உயிரிழப்புக்களை ஏற்படுத்தினார் என்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

எந்திரராசா யோகேந்திரராசா (23) என்ற இளைஞர் ஆனையிறவு இராணுவ முகாமைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் அவர் எவ்வாறு எத்தகைய ஆயதத்தைப் பயன்படுத்தி அந்தக் குற்றத்தைப் புரிந்தார் என்பது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் தெளிவாக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, வவுனியா மேல் நீதிமன்ற நீதவான் எஸ்.சிறிஸ்கந்தராஜா சந்தேக நபரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகளிடம் ஆயதப்பயிற்சி பெற்றார் என்ற குற்றச்சாட்டில் இவர் குற்றவாளியாகக் காணப்பட்டபோதிலும், இரண்டு வருடங்களுக்கு மேலாக அவர் சிறை வைக்கப்பட்டிருந்ததைக் கவனத்திற் கொண்டு அவரை நீதிவான் விடுதலை செய்தார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்ட ரவீந்திரநாத் தினேஸ்குமார் (21) என்ற, பண்டத்தரிப்பைச் சேர்ந்த இளைஞரிடமிருந்து தமிழ் தெரியாத அசோக் என்பவரின் உதவியோடு பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் வவுனியா மேல் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது,

தமிழராகிய சந்தேக நபர் மீதான விசாரணைகளின் பின்னர் அவரிடமிருந்து தமிழ் தெரியாத ஒருவரின் மூலம் விசாரணைக்கான கேள்விகள் மொழிபெயர்க்கப்பட்டு ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்பது ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருப்பதனால், அந்த ஒப்பதல் வாக்குமூலத்தை மேல் நீதிமன்ற நீதிவான் எஸ்.சிறிஸ்கந்தராஜா நிராகரித்து சந்தேக நபரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகமும், அரச தரப்பில் சட்டத்தரணி சசிமகேந்திரனும் ஆஜராகியிருந்தார்கள்.

- தர்மன்

# அஷ்ரஃப் இல்லாத இலங்கை அரசியல்

## – ஒரு புறவயப்பார்வை


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும் பின்னாளில் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக மாறியவரும் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சராகச் செயற்பட்டவருமான எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் எதிபாராத விதமாக இறந்து விட்டார். ஏற்பதற்குக் கடினமாக இருந்தாலும் அவர் இறந்து விட்டார் என்பது நிரந்தர உண்மையாகிவிட்டது. இலங்கையின் அரசியல் ஒரு தீர்க்கமான காலகட்டத்தில் வந்து நிற்கையில் இந்த மரணம் சம்பவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் மறைந்து விட்டார் என்பதைவிட ஏனைய விதத்திலும் முக்கியமானதொரு காலகட்டத்தில் மறைந்து விட்டார் என்பதையும் மனங் கொள்ள வேண்டும். இலங்கையினுடைய எதிர்காலம் மிகவிரைவில் தீர்மானிக்கப்படும் விதத்திலேயே சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் இலங்கையின் எதிர்காலம் இக்கட்டான ஒரு கட்டத்தில் வந்து நிற்கின்றது. இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அஷ்ரஃப் போன்ற ஆளுமையுள்ள ஒரு தலைவரின் பிரசன்னம் மிக இன்றியமையாததாகும். அந்தளவிலும் அன்னாரின் மறைவு துரதிர்ஸ்டமானதேயாகும்.

ஆனால் அன்னாரின் மறைவுக்குப் பிந்திய அலசல் என்பதால் அவரின் அரசியல் பங்களிப்புகளை ஆகா-ஓகோ என்று புகழ வேண்டும் என்ற அவசியத்தை ஓர் ஆய்வாளர் மீது திணிப்பது நியாயப்படுத்தப்பட முடியாததாகும். அஷ்ரஃப் அரசியல் ஆய்வுக்கும் அலசலுக்கும் உட்படுத்தப்படும் போது கசப்பான சில உண்மைகளும் வெளிவரவே செய்யும். ஆனால் பதிலளிக்க முடியாத நிலையிலுள்ள ஒருவர் மீது ஒருப்புடையான (Unilateral) விதத்தில் குற்றச்சாட்டுக்களை அடுக்குவதும் நியாமாகாது. இவற்றைக் கவனத்தில் கொண்டே எனது பின்னைய பந்திகள் அமைந்திருக்கும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றைப் பொறுத்தளவில் தேசிய அரசியலிலிருந்து விடுபட்டு தேசியவாதப் பின்னணி அரசியலில் ஈடுபட்ட சிறுபான்மையினர் என்றளவில் சுதந்திரத்துக்கு முன்னரே அதற்கான அறிகுறிகள் தெரிந்திருந்த போதிலும், தமிழர் அரசியல் வலுவான அடித்தளத்தை இட்டிருந்தது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், டொக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் போன்றோர் அவதானமான முறையில் "தமிழ் பேசும் மக்கள்" என்ற அடையாளத்தை முன்னிறுத்திப் போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆனால் அவர்களால் அதில் முற்றாக வெற்றி பெற முடியவில்லை என்பதையும் ஒப்புக் கொள்வோம்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் கிழக்கு மாகாணத்தில் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்ற முஸ்லீம்கள் யாவரும் வெற்றியின் பின்னர் கட்சியை விட்டுக் கழன்று கொண்டனர். தேசியக் கட்சிகளில் இரண்டில் ஒன்றில் அவர்கள் சங்கமிக்கும் போது அமைச்சர் பதவியோ அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட நலன்வழங்கு பதவியோ காத்திருந்தது. இதனால் கட்சித் தலைமை ஒரு இக்கட்டான நிலையை எதிர்கொண்டது. முஸ்லீம்களை வேட்பாளர்களாக நிறுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு ஒருபுறம். அப்படி நிறுத்தும் போது அவர்கள் கட்சிதாவும் படலம் ஒருபுறம். ஆக, தமிழரக்கட்சித் தலைமை ஒருவித விரக்திக்கு இவ்விடயத்தில் தள்ளப்பட்டது. தானே எல்லா மக்களது விடயங்களையும் கவனிக்க வேண்டிய நிலைமைக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள் தன்னைத் தள்ளிவிட்டிருப்பதாக அமிர்தலிங்கம் பல தடைவைகளில் குறைப்பட்டுக் கொண்டார். இதனைத் துணிந்து அவரால் கூறமுடிந்தது என்றால் அதற்குக் காரணம் அவரின் தலைமையில் செயற்பட முஸ்லீம் வாலிபர்கள் பலர் அப்போதும் தயாராகவே இருந்தனர் என்பதே. இத்தகையோரில் ஒருவராகவே அன்றைய அஷ்ரஃப் அரசியலுக்கு அறிமுகமானார்.



தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

அவருடைய அரசியல் பிரவேசம் என்பது பேரினவாதத்துக்கு எதிரானதாகவும் அதே வேளை தமிழ்-முஸ்லீம் ஒன்றுபட்ட அடையாளத்தின் கீழ் சிறுபான்மையினர் உரிமைகளை வலியுறுத்துவதாகவுமே அன்றிருந்தது. தேசியத் தலைமைகளின் கீழ் முஸ்லீம்களுக்கு விமோசனமில்லை என்பதில் கருத்தொருமித்த அஷ்ரஃப் தமிழ் மக்களுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் போராட்டம் என்பதில் ஆரம்பத்தில் நம்பிக்கை வைத்திருந்தார் என்பதை எவருமே மறுக்க முடியாது. ஆனால்

> **அஷ்ரஃப்பின் ஆளுமை மீது செல்வாக்குச் செலுத்திய முக்கிய அரசியல் தலைவர் அமிர்தலிங்கம் தான். மிகத் தீவிர அரசியல்வாதியாக ஆரம்பித்து பின்னர் மிதவாத அரசியலிலிருந்த போதிலும் ஒரு வகை வீச்சுக் குணங்கொண்ட தலைவராக அமிர்தலிங்கம் அன்று பிரகாசித்தார்.**

அந்த நிலைப்பாட்டிலிருந்து அவர் நாளடைவில் விலகிக் கொண்டார். அதற்குக் காரணம் அவரைப் பொறுத்தளவில் அந்த அவரது அரசியல் எதிர்காலம் பற்றிய கனவாக இருந்திருக்கலாம். ஆனால் பின்னைய நிகழ்வுகள் அவர் எடுத்திருந்த நிலைப்பாடு நியாயமானதே என்றும் என்றோ ஒருநாள் இத்தகைய நிலைப்பாடொன்றை இந்நாட்டின் முஸ்லீம் தலைமை எடுத்தே இருக்கும் என்பதையும் நிரூபித்தன.

அஷ்ரஃப்பின் ஆளுமை மீது செல்வாக்குச் செலுத்திய முக்கிய அரசியல் தலைவர் அமிர்தலிங்கம் தான். மிகத் தீவிர அரசியல்வாதியாக ஆரம்பித்து பின்னர் மிதவாத அரசியலிலிருந்த போதிலும் ஒரு வகை வீச்சுக் குணங்கொண்ட தலைவராக அமிர்தலிங்கம் அன்று பிரகாசித்தார். அதுவும் எதிர்கட்சித் தலைவராக வந்த பின்பு அமிர்தலிங்கத்தின் ஆளுமை பல பரிமாணங்களில் வெளிப்படத் தொடங்கியது. அவரது அரசியல் நிலைப்பாடு அடிசறுக்கத் தொடங்கியிருந்த போதிலும் அவரது தனிப்பட்ட திறமையை எவருமே குறைத்து மதிப்பிடத் துணியவில்லை. இது அவரை ஓர் உதாரண புருசராகக் கொளவதற்கு அஷ்ரஃப் போன்றவர்களுக்கு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தது.

ஆனால் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளும் போது 1949 இல் தந்தை செல்வா எடுத்த அரசியல் நிலைப்பாட்டை அஷ்ரஃப் பின்பற்றியது அவரது அரசியல் அறிவுக் கூர்மைக்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும். எங்கே இடைவெளியுள்ளது என்பதை அடையாளங்கண்டு அதை உரிய நேரத்தில் உரியவாறு நிரப்புவதில் அவர் வெற்றி பெற்றார் என்பதில் எள்ளவும் சந்தேகமேயில்லை. தேசியத் தலைமைகளின் பின்னால் அலையும் அவசியத்தை முஸ்லீம்களுக்கு இல்லாமல் செய்வதில் அஷ்ரஃப் பூரண வெற்றி கண்டார் என்பது வரலாற்றுப் பதிவுக்குரியது.

ஆனாலும் ஓர் அரசியல் பாதையில் ஒரே கோஷத்துடன் எவ்வளவு துாரம் செல்லமுடியும் என்ற வரையறையில் த.வி.கூ. விட்ட தவறையும் அஷ்ரஃப் மறந்திருக்கவில்லை. அதாவது இனத்துவ தேசியவாதத்தின் இறுதி இலக்கு எதுவாக இருக்க முடியும்? அது பற்றிய பெரும் எதிர்பார்ப்புக்களை தொடர்ந்தும் உருவாக்கிக் கொண்டே போகவேண்டியது தானா? என்பது அஷ்ரஃப்புக்கு முன்னால் கூட்டணியின் கசப்பான அனுபவமாக விரிந்து கிடந்தது.


- சிசைரோ

(மீதி அடுத்த இதழில்)

---

எனது பத்திரிகை உலக அனுபவங்கள் - 4

# சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!



"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்ற தலைப்பில் ஈழநாடு பத்திரிகையில் ஒரு தலையங்கம் எழுதியிருந்தேன். இது 1965ம் ஆண்டு என்று நினைவு.

இந்தத் தலையங்கம் வெளிவந்த மறு நாள் காலை தொலைபேசி அழைப்பபு ஒன்று வந்தது.

அந்த அழைப்பை எடுத்தவர் நிர்வாக ஆசிரியர் ஹரன் இருக்கிறாரா என்று கேட்டு அவருடன் தான் பேச வேண்டுமென்று சொன்னார்.

ஹரன் கொழும்புக்குப் போயிருக்கிறாரென்றும் இன்னும் வரவில்லையென்றும் சொன்னேன். அவர் அழைப்பைத் துண்டித்துக் கொண்டார். அந்த அழைப்பை எடுத்தவரின் குரல் நன்கு பரிச்சயமானது. என்னுடன் மிக நட்புடன் பழகுபவர். என் மீது மிகப்பிரியமானவர். அவரும் என் குரலை நன்கு அறிவார். அவர் என்னுடன் பேச விரும்பவில்லை. நான்கைந்து நாட்களுக்கு முன்னர் தான் அவரை செங்கலடியில் நடந்த தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் சந்தித்தேன்.

வெளியே துாரத்தில் நின்ற என்னை அவர் தான் கூப்பிட்டுப் பேசினார். செயற் குழுக் கூட்டத்தில் முக்கியமான கொள்கைப் பிரச்சினை பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட இருப்பதாக அறிந்து ஈழநாடு பத்திரிகையில் வெளியிட வேண்டாமா? என்று கேட்டேன். "நீ விடுவியா என்ன, ஆனால் அப்படி ஒன்றும் பெரிய விசயம் எதுவும் இங்கே நடக்கவில்லையடாப்பா. நீ வீணாக வந்து காய்ந்து அலைகிறாய்" என்று சொன்ன அவர், "நீ சாப்பிடவில்லைப் போல வா வா வந்து சாப்பிடு" என்று என் கையைப் பிடித்து இழுத்துச் சாப்பாடு மேசைக்குக் கூட்டிச் சென்றார். கட்சிக்காரர்கள், தலைவர்கள் சிலர் சாப்பிட்டு முடித்திருந்தனர். மற்றும் இரண்டொருவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். என்னை இருத்தி வைத்த அவர் தனது கையாலேயே எனக்குச் சாப்பாடு பரிமாறினார். அவர் சுத்த சைவம். எனக்கு மீன் குழம்புக் கறி எடுத்துப் பரிமாறினார்.

ஆனால், செயற்குழுக் கூட்ட முடிவு பற்றி எதுவும் சொல்ல வாய் திறக்கவில்லை. சிங்கள மாணவர்கள் தமிழையும் தமிழ் மாணவர்கள் சிங்களத்தையும் விரும்பிப் படிக்கலாமென்றும் இருதரப்பினரும் ஆங்கிலத்தையும் கற்கலாம் என்றும் டட்லியின் தேசிய அரசு கொண்டு வருவதற்கு உத்தேசித்திருந்தது.

இதை ஆதரிப்பதென்று தமிழரசுக் கட்சியின் செயற்குழு முடிவு செய்ததாகக் காதில் விழுந்தது. சாப்பிட்டு முடிந்ததன் பின் நான் மட்டக்களப்புக்கு திரும்பி நண்பர்கள் சிலரை சந்தித்த பின் மாலையிலேயே யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டேன்.

அதற்கு மறுநாள் செனட்சபையில் அரசின் மும் மொழித் திட்டத்தை ஆதரித்து செனட்டர் (பொட்டர்) நடராசா நன்றாகப் பேசியிருந்தார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளி வந்திருந்தது. நாங்களும் ஈழநாடு பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம்.

மறு நாள் தான் நான் "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என்ற தலைப்பில் ஆசிரியத் தலையங்கம் எழுதியிருந்தேன்.

சிங்களவர் தமிழையும் தமிழர் சிங்களத்தையும் கட்டாய பாடமாகப் படிக்க வேண்டுமென்று அரசு சட்டம் கொண்டு வந்தால் அதில் அர்த்தமிருக்கும், பயனுமிருக்கும். விரும்பிய பாடமாகப் படிக்கலாம் என்றால் சிங்களவர் தமிழ் மொழியைப் படிக்க மாட்டார்கள்.

தமிழ் மாணவர்கள் தான் சிங்களத்தைப் படிப்பார்கள். இதனால் தமிழ் மக்களுக்குப் பயனில்லை பயங்கரமானதாகவே முடியுமென்று தலையங்கம் எழுதியிருந்தேன்.

இதைப் பார்த்த பின் தான் தொலை பேசியில் அவர் பேசினார். பேசியவர் செனட்டர் நடராசா தான். மல்லாகம் புறக்டர் என்பது மட்டுமல்ல, பொட்டர் என்றால் எல்லோருக்கும் நன்கு தெரியும். அடுத்த நாள் மீண்டும் செனட்டர் நடராசா தொலை பேசியில் தொடர்பு கொண்டு நிர்வாக ஆசிரியர் ஹரன் அவர்களுடன் நீண்ட நேரம் பேசினார். பேசி முடித்ததும் ஆசிரியர் ஹரன் பத்திரிகையை எடுத்து தலையங்கத்தைப் படித்தார்.

அதன் பின் என்னைக் கூப்பிட்டு நீங்கள் எழுதிய தலையங்கம் நன்றாகத்தான் இருக்கு உங்கள் வாதமும் கருத்தும் சரிதான். ஆனால் அவர் (நடராசா)செனட் சபையில் பேசிய போது நானும் அங்கிருந்து பார்த்தேன்,கேட்டேன்.

அவர் பேசி முடிந்ததும் போய் அவரைப் பாராட்டினேன்.

அவர் தந்த சோடாவையும் குடித்தேன். இங்க வந்தா நீங்க இப்படி எழுதியிருக்கிறீங்க.

இப்ப அவர் தான் என்னோடு பேசினார் என்று கவலையோடு சொன்னார்.

"நீங்க அவரிட்ட சோடா தானே குடிச்சீங்க. எனக்கு அவர் சாப்பாடே போட்டாரே என்று பதில் சொல்லி விட்டு சம்பவத்தை விளக்கமாகச் சொன்னேன். சாப்பாடு வேறு, நட்பு வேறு.

நமது பத்திரிகையின் கடமை தனி என்றேன். நிர்வாக ஆசிரியரும் ஏற்றுக் கொண்டார்.

சில மாதங்களின் பின் மீண்டும் நானும் பொட்டரும் பழையபடி நட்புடன் பழகினோம்!


# தேர்தல் திருவிழாவாக நடந்த மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா

– நேசன்

மமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்திடுவீர்" என்ற பாரதியின் சுலோகத்துடன் - மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - இந்து கலாசார அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

செப்டெம்பர் 23, 24ம் திகதிகளில் அட்டன் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் நடை-பெற்ற இவ்விழாவின் சிறப்பம்-சங்களாக,

பாடசாலை மாணவரின் ஊர்வலம், 23ம் திகதிய தொழிலாளர் தின ஊர்வலம், குரும்பசிட்டி கனகரத்தினத்தின் ஆவண கண்காட்சியும், நூல் கண்காட்சியும், சாலமன் பாப்பையா குழுவினரின் பட்டிமன்றங்கள், ஆய்வரங்கம், விருது வழங்கும் வைபவம்,



இராதாகிருஸ்ணன்

பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்களின் மலையக பாரம்பரிய நிகழ்ச்சிகள் அரங்கேற்-றப்பட்டமை, அவற்றை நெறியாள்கை செய்தவர்கள் கௌரவிக்கப்பட்டமை என்பனவற்றைப் பட்டியலிடலாம்.

இலங்கையின் அரச சாகித்திய விழாக்கள் எப்பொழுதும் அரசியல் திருவிழாக்களாகவே நடத்தப்-பட்டுள்ளன. இவ்விழாக்களில் தப்பித்தவறி ஓரிரு மக்கள் கலைஞர்கள் பாராட்டப்பட்டாலும் கூட இவற்றின் அடிப்படை நோக்கம் ஆளும் அரசையும் அதன் அமைச்சர்களையும் அவற்றுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ, முட்டுக் கொடுக்கின்ற கும்பல்களை பாராட்டியும் கௌரவித்தும், போற்றிப் புகழ்வதுமாகத் தான் இந்நிகழ்வுகள் அமைகின்றன.

இவற்றுக்கு எதிராக மக்கள் கலைஞர்கள் அமைப்பு ரீதியாக பல்வேறு நிலைகளில் அணிதிரண்ட போதும் அரச நிதியும், அதிகாரபூர்வ தொடர்பூடகங்களின் ஆதரவும் பண பலமும் இல்லாததால் அவை பெரிதும் சோபிப்பதில்லை.

இ.தொ.காவில் அடுத்தடுத்து ஏற்பட்ட சரிவுகளும், அச்சிவு-களின் மலையக மக்களுக்கு எதிரான துரோக ஒப்பந்தமும், தொழிலாளரை ஏமாற்றும் வேலை நிறுத்தமும் மாற்றுக் குழுவினரின் பிரச்சாரமும் சேர்ந்து ஆட்டம் காண வைத்துள்ள தமது செல்வாக்கை தூக்கி நிறுத்த இந்த சாகித்திய விழா பயன்படுத்தப்-பட்டுள்ளது.

அமைச்சரின் உத்தரவை தலைமேல் கொண்ட கல்வி அதிகாரிகள் பாடசாலைகள் தோறும் கொடிகளும், பதாகைகளும் தாங்கிக் கொண்டு ஆசிரியர்களும், 50க்கும் குறையாத மாணவர்களும் ஊர்வலத்தில் அணிவகுக்க வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதிகாரி-களும், அதிபர்களும், நூற்றுக்-கணக்கான ஆசிரியர்களும், அமைச்சரின் கடைக்கண் பார்வைகள் தம்மீது படவேண்டும் என்பதற்காக பரிதாபமாக நிற்ககூட இடமற்ற கூட்டத்தினிடையே கல்வி அமைச்சரை சுற்றி சுற்றி வந்தார்கள். அவரை திருப்திப்படுத்தாவிட்டால், தம் பதவிகளை காப்பாற்றிக் கொள்ள முடியாது என்ற தொடைநடுக்கம் அப்பட்டமாகப் பிரதிபலித்தது.

விழாவைச் சிறப்பிக்கவென கால்கடுக்க இரண்டு மணிநேரம் ஊர்வலம் வந்த மாணவர்களும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களும், விழா மண்டபத்தில் நுழைய முடியாமல் பரிதவித்தார்கள்.

ஒவ்வொரு பாடசாலை-யிலிருந்தும் இரண்டு மாணவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பெரும் தொகையான அப்பாவி மாணவர்கள், தாம் எதற்காக ஊர்வலம் வருகிறோம், எதற்காக வீதிநெடுகிலும் காவடி எடுக்-கிறோம், கும்மியடிக்கிறோம் என்றே தெரியாமல் வீட்டுக்கு விரட்டப்பட்டார்கள்.

முதல் இரண்டு நாள் அமர்வுகளிலும் பாரிய மனித நெருக்கடி ஏற்பட்டது. மேட்டுக்குடி, நடுத்தட்டு கனவான்கள் மண்டபத்தின் முன் வரிசைகளை ஆக்கிரமிக்க 5,10 வயது சிறுவர்களும் விசேட பாஸ் அனுமதியுடன் ஆசனங்களில் அமர்ந்திருக்க தொழிலாளர்களும், மாணவர்களும் பின்புறம் தொங்கிக் கொண்டும் அடுத்த சிறுமண்டபத்தில் டி.வி. திரையிலும் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்தனர்.

இரண்டாம் நாள் விழாவில் அரங்கேற்றப்பட்ட பாரம்பரிய கலைகள், அதன் இயல்பான அம்சத்தில் அருவருப்புக் கொண்ட கல்லூரி மாணவர்கள் ஆசிரிய பயிலுனர்கள், இளசுகள் அடங்கியவர்களால் ஒரு கோணத்தில் இருந்து தொடர்ச்சியாக ஊ-அடிக்கப்பட்டும் கைதட்டப்பட்டும் அவமானப்-படுத்தப்பட்டன. கலைஞர் கௌர-விப்பு என்று அறிவிக்கப்பட்ட-போதெல்லாம் சூரியன் எவ்.எம். வானொலி அறிவிப்பாளர் அபர்ணா சுதன் அடித் தொண்டையில் கைதட்டுங்கள், கைதட்டுங்கள் என்று இறைஞ்ச வேண்டியிருந்தது. இந்நிலையை தப்பு, காவடி, காமன்கூத்து அரங்கேற்றங்களில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இன்றைய தலைமுறையின் சிந்தனையை சிதைக்கின்ற சமூக நோயாக பரிணமித்துள்ள தனியார் ஒலி, ஒளி நிறுவனங்கள் எத்தகைய பங்கை ஆற்றியுள்ளன என்பதற்கு இவ்விழா ஒரு அப்பட்டமான சான்றாக அமைந்திருந்தது.

மேட்டுக்குடி நடனங்களும், நாகரீகங்களும் அரங்கேற்றப்பட்ட போது பிரபுத்துவ சமூகத்தை மீளுருவாக்கும் காட்சிகள் அரங்-கேறின. அப்படியான தருணங்-களில் எல்லாம் சபையோர் காட்டிய ஆர்வம் சமூகம் எங்கே போகிறது என்பதற்கு இன்னொரு சான்றாக உள்ளது.

புத்திரசிகாமணி மலையக தமிழாராய்ச்சி மாநாடு என்ற பெயரில் ஐ.தே.க திருவிழாக்கள் நடத்தினார் என்றால், ராதா-கிருஷ்ணன் மத்திய மாகாண சாகித்திய விழா என்ற பெயரில் இ.தொ.காவின் களியாட்ட விழாவாக இதனை மாற்றியுள்ளார். இதற்கு வக்காலத்து வாங்க மலையகப் பேராசிரியர்கள், தமிழகப் பேராசிரியர்களையும் தம்மோடு கூட்டுச் சேர்த்துக் கொண்டிருந்தனர். தமது அமைச்சு அதிகாரத்தைப் பயன்படுத்தி பரிதாபத்திற்குரிய கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களையும் மட்டுமல்லாமல் வாழ்வின் அந்தத்தில் வாழத்துடிக்கும் அப்பாவிக் கலைஞர்களையும் வேறுவழியின்றி சேர்த்திருந்தார்கள். வர்த்தகர்களும் நடுத்தரவர்க்கமும் தம் அனைத்து வளங்களையும் வழங்கியிருந்தது.

புத்திரசிகாமணி மலையக தமிழாராய்ச்சி மாநாடு என்ற பெயரில் ஐ.தே.க திருவிழாக்கள் நடத்தினார் என்றால், ராதாகிருஷ்ணன் மத்திய மாகாண சாகித்திய விழா என்ற பெயரில் இ.தொ.காவின் களியாட்ட விழாவாக இதனை மாற்றியுள்ளார். இதற்கு வக்காலத்து வாங்க மலையக பேராசிரியர்கள், தமிழக பேராசிரியர்களையும் தம்மோடு கூட்டு சேர்த்துக் கொண்டிருந்தார்.

ஆய்வரங்கம் என்ற பெயரில் வெறும் 30 நிமிடங்களில் 21ம் நூற்றாண்டில் மலையகம் குறித்து பேச வந்த பேராசிரியர்கள் சோ.சந்திரசேகரன், மா.செ.மூக்கையா, அம்பலவாணர் சிவராசா, மா. சின்னத்தம்பி ஸ்ரீபாதக் கல்லூரி முதல்வர் சு. முரளிதரன் தேசியக்கல்வி நிறுவகத்தின் தனராஜ், ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆகியோர் தமது ஆய்வுச் சுருக்கங்களை கூறியபோது மலையகத் தமிழரின் இன அழிப்புக்கான ஒரு ஆயுதமாக அரச பயன்படுத்தும் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தின் சமூக, பொருளாதார, அரசியல் விளைவுகள், மலையக ஆசிரிய கல்வியின் நிலை இன்னும் 20 ஆண்டுகளுக்கு மலையக ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப தேவைப்படும் என்பதோடு ஆசிரியர்களிடையேயான வர்க்க முரண்பாட்டை கையாள்வதிலுள்ள சவால்கள், உலகமயமாதலுக்கு தயார்படுத்த வேண்டியதன் அவசியம், மலையகத்தில் கலாசார நிலையம், வருடாந்த கல்வி மாநாடு, பல்கலைக்கழகம் போன்றவற்றின் அவசியம் என்பன கவனத்தை ஈர்ப்பவையாக இருந்தன.

ஆனால், நடைமுறை சாத்தியமான அரசியல் பண்பாட்டு சூழலை உருவாக்கத் தடையாகவுள்ள மக்கள் விரோத கும்பலுக்கு தாம் இவற்றை விலைபோகவிட்டதையும் நவ காலனியத்தின் பிரதிநிதிகளாக, பூகோளமயமாதல் என்ற வல்லாதிக்க சதியின் பேச்சாளர்களாக பெரும்பாலான பேராசிரியர்கள் தங்களை அம்பல-மாக்கிக் கொண்டார்கள். மேலும் தொண்டமானின் புகழ்பாட மட்டுமல்ல ஒரு படி மேலேபோய் அம்பலவாணர் சிவராசா, ஆய்வரங்கை கட்சி பிரச்சார மேடையாக மாற்றினார். இப்பேராசிரியர்கள் தமது அரசியல் நலன்களுக்காக நன்றாக துதிபாடக்கூடியவர்கள் என்ற அற்புதமான தேர்வை செய்த இராதாகிருஷ்ணன் பாராட்டப்பட வேண்டியவர் தான்.

தொண்டமான் அரங்கில் அரச அதிகாரிகள், அமைச்சு ஊழியர்கள், கட்சித் தொண்டர்கள் நிரம்பியிருந்தார்கள். பாராட்டு விழா மேடை இ.தொ.கா. தலைவர்களின் கனவுகளை அற்புதமாகப் பிரதிபலித்தது. அமைச்சர் ஆறுமுகம் தொண்-டமான், இராதாகிருஷ்ணன், ஆகிய இருவரையும் புடைசூழ அழகிய இளம்பெண்கள் அலங்கரிக்க, மல்லிகை மலர்கள் சொரிய, சாமரம் வீச மலையகத்தின் முடிசூடிக் கொள்ள என எல்லா ஏற்பாடுகளும் அமர்க்களம். ஆறுமுகம் தொண்டமானை மகிழ்விக்கவென்றே அமைச்சர் இராதாகிருஷ்ணனால் இவை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இறுதிக் கட்டமாக அமைச்சரும் அமைச்சு அதிகாரிகளும் உதவியாளர்களும், தமக்கு தாமே பொன்னாடை போர்த்திக் கொண்டு தங்கப்பதக்கம் அணிந்து கொண்டு விருதுகள் வாங்கிக் கொண்ட காட்சி, அரசியல் வங்குரோத்துத் தனத்தின் கடைசி அந்தமாய் இருந்தது என்றால் மிகையாகாது.

இந்து மகாசபையின் இசை கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தும் இறுதி நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்ட மேளவித்துவான் மூடப்பட்ட திரையை விலத்தி தட்டுத் தடுமாறி உள்ளேபுக முயன்ற காட்சி மனதை கசியச் செய்தது. ஏனெனில், உண்மையான கலைஞர்கள் இப்படித் தான் வஞ்சிக்கப்பட்டார்கள்.

சாலமன் பாப்பையா குழுவின் பட்டிமன்ற கில்லாடித்தனம் 15 இலட்சம் மலையகத் தமிழர்களின் உணர்வுகளை மோதி மிதிக்கும் ஒரு உப்பற்ற கூத்தாக இருந்தது. தங்களது மேதாவித் தனங்கள் எத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைக்கு துணை போகிறது என்ற பிரக்ஞையே இல்லாமல் மாணவர்கள் கல்வியை பாதிப்பது பாடசாலைச் சூழலா? குடும்பச் சூழலா? என்றும் மனித வாழ்வைத் தீர்மானிப்பது விதியா? மதியா? என்றும் கதியற்ற பட்டிமன்றம் அரங்கேற்றப்பட்டது. மலையகப் பாடசாலைகள் லயன்களாகவும், லயன்களே பள்ளிக்கூடமாகவும் இருக்கிற அவலத்தையும் மக்களின் அரசியல் எழுச்சிகளை இளைஞர் குழுக்களை நசுக்கி தேக்கமுற்ற அரசியல் சமூகமாக மலையக சமூகத்தை முடக்கி வைத்திருப்-போருக்கு துணை போகிறார்கள் என்பதை உணர்ந்தவர்களாய் இல்லை.

மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தப்பட்டு தேர்தலுக்கு தேர்தல் விரட்டப்பட்டு வரும் நிலையில் அரசியல் தகிடுதத்தங்கள் மூலம் தம்மை தக்கவைக்கும் முயற்சியாக தேர்தலுக்கு முன்னர் மக்கள் சிந்திக்கத் தொடங்கி விடக்கூடாது என்பதற்காக 400 ரூபா சம்பளவுயர்வு என்ற பெயரில் தொடங்கப்பட்ட வேலைநிறுத்தம் பகிரங்க காடைத்தனங்கள் மூலமே நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தொழிலாளருக்கு எதிராக அவர்களின் வாழ்நிலையை பயன்படுத்தி செய்யப்பட்ட ஒரு உளவியல் போராகும். இந்த சாகித்திய விழா பிரமாண்ட அரசியல் மூலம் இளைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்களை சிந்திக்கவிடாமல் செய்வதற்கான திட்டமிட்ட நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை.

ஆம் வெட்கக்கேட்டுக்கு வேறென்ன பெயர் வைக்க முடியும்? சறுக்கி விழுவதை பிடித்து நிறுத்த சாலமன் பாப்பையாக்கள், பண்பலை வானொலிகள், பரவசமூட்டும் கிறுகிறு நடனங்கள், பட்டுத்துண்டுகள், பரிதாபத்துக்குரிய மலையக கலைஞர்களிற்கு மகுடமிடல் என்ற பெயரில் மறைமுக சேவகம் வேண்டிநிற்கும் அவமதிப்பு, புத்திஜீவிகள், அரச அதிகாரிகளின் சலவை செய்யப்பட்ட மூளைகள் தேவைப்படும்.

1940களில் 50களில் காந்தியும், நேருவும் கடவுளர்களாக உருவகிக்கப்பட்டு, பண்ணையாளர் காங்கிரஸ் பாட்டாளிகளை உள்வாங்கியது. 80களில் தமிழக சினிமா சிங்காரி-களின் கச்சேரி வைத்து குதூகலப்-படுத்தி வாக்கு வங்கியை காத்தார்-கள். இப்போது ஒரு தலைமுறை எழுந்து கொண்டிருக்கிறதே அவர்களுக்கு ஐஸ் வைக்க சாலமன் பாப்பையாக்கள் தேவைப்படுகிறார்கள். கதை கேட்க ஒரு கூட்டம் காத்துக் கிடக்கும்வரை கடைவிரிக்கும் மக்கள் விரோதிகள் சிம்மாசனத்தில் தான் இருப்பார்கள்.

பெரும் கூட்டம் சேர்த்து ஒரு கட்சித் திருவிழாவை நடத்திக்-காட்டியமைக்கவும் வீதியொன்றை செப்பனிட முடிந்தமைக்காகவும், கலாசார வரட்சிமிக்க நகரில் ஒரு விழா நடந்தமைக்காவும் அட்டன் நகர குடிமக்கள் மார்தட்டிக்-கொள்ளலாம்.

# வெட்கம் கெட்டவர்க்கு வாக்குப் போட்டு வீழ்ந்து தான் போவோமா?

ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள், தேசிய இனங்கள் என்பவற்றின் உரிமைப் போராட்டங்களை அடக்கி வெற்றி கொள்வதற்கு பல நவீன பல்பரிமாணம் கொண்ட போர் முறைகளை அமெரிக்க, பிரிட்டிஷ் மற்றும் இந்திய அரசுகள் உருவாக்கி செம்மைப்படுத்தி வந்துள்ளன. இப்போர் முறைகளை மேற்கத்திய போரியலாளர் பொதுவாக எதிர் கரில்லா இயல் (Counter Insurgency) என்பர்.

மூன்றாம் உலகநாடுகள் பெரும்பாலானவற்றில் வர்க்கப் போராட்டங்களையும் இன உரிமைப் போராட்டங்களையும் மிக வெற்றிகரமாக அடக்குவதற்கு மேற்கத்திய எதிர்கரில்லா இயல் பெரிதும் உதவியுள்ளது அமெரிக்க படைத் துறையின் 'எதிர்கரில்லா இயல் தத்துவமும் நடைமுறையும்' பற்றிய கைநூல்களிற் கூறப்படும் பல விடயங்களின் அடிப்படையில் எங்ஙனம் கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா படையினர் தமது திட்டங்களை வகுத்துச் செயற்பட்டனர் என்பது பற்றி கடந்த நவம்பர் மாதம் நியூசிலாந்தின் பாமாஸ்டன் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையில் விரிவாகவும் அண்மையில் கனடா ஈழமுரசுக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் சுருக்கமாகவும் ஆராய்ந்திருந்தேன். அவற்றில் முன்வைத்த மையமான ஒரு கருத்தை இங்கு மீள்பரிசீலனை செய்கிறேன்.


வடக்கிலும் கிழக்கிலும் ஸ்ரீலங்காவின் 11வது நாடாளுமன்றிற்காக நடைபெற்று வரும் தேர்தல் நாடகங்களை நோக்கி வருகையிலேயே இம்மீள்பரிசீலனை அவசியமெனத் தோன்றலாயிற்று.

ஒரு உரிமைப் போராட்டத்தின் நிலைக்களனாகக் கருதப்படும் ஒருமக்கள் கூட்டத்தினரிடையில் அல்லது வர்க்கத்தினரிடையில் போர்க் களைப்பை ஏற்படுத்தல் (inducing war fatigue) என்பது மேற்கத்திய - இந்திய எதிர்கரில்லா இயலின் ஒரு முக்கியமான அங்கமாகும். எதிர்கரில்லா இயல் கூறும் நீண்டகால அணுகுமுறைகளில் இப்போர்க் களைப்பை - சலிப்பை - ஒருமக்கட் தொகுதியில் எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பதற்கான பல வழிமுறைகள் அமெரிக்க படைத்துறைப் பயிற்சிக் கையேடுகளில் விரிவாகக் கூறப்படுகின்றன. ஒரு போராட்டத்தின் நிலைக்களனாக உள்ள ஒரு மக்கட் தொகுதியினரை தொடர்ச்சியாக துன்பத்திற்கும், பொருளாதார நெருக்கடிக்கும், உயிர் பற்றிய பயங்கரத்திற்கும் உள்ளாக்குவதன் மூலம் அவர்கள் பிச்சை வேண்டாம் நாயைப்பிடி எனும் நிலைக்குத் தள்ளப்பட்டு, தமது பொதுவான உரிமைகள் அல்ல, அற்ப சலுகைகளே முக்கியமென நம்பி வாழத் தலைப்படுவதையே பெருவெற்றி என எதிர்கரில்லா இயலாளர் கருதுவர்.

இந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் 1984- 87 காலப்பகுதியிலும் 1990- 94 காலப்பகுதியிலும் ஸ்ரீலங்கா படைத்துறை மேற்கொண்ட எதிர்கரில்லா போரியல் நடைமுறைகள் மேற்படி போர்க்களைப்பை ஏற்படுத்துவதில் முழுமையாக வெற்றியடையவில்லை என்பதே நான் முன்னர் எடுத்துரைத்த கருத்தாக இருந்தது. இதற்கான சில புள்ளிவிபர ஆதாரங்களையும் தமிழர்களின் சில வரலாற்று -கலாசார பண்புகளையும் சற்று ஆராய்ந்து எழுதியிருந்தேன். உலகில் சில இனங்களிடையில் எதிர்கரில்லா போரியலின் மேற்குறிப்பிட்ட உத்தி எடுபடுவதில்லை எனவும் இதற்கு அவ்வினங்களுடைய சமூக வரலாறும் கலாசாரமுமே பிரதான காரணிகள் எனவும் அண்மைக் காலங்களில் சில மேற்கத்திய படைத்துறை வல்லுநர்கள் கூறத்தலைப்பட்டுள்ளனர். ஆயினும் அதைத் தற்போது மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். இது ஏன் என்பதை இனிப் பார்ப்போம்.

தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்கையில் மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பல தரப்பட்டவர்களிடமும் அரசியல் பற்றிப் பேசும் போது இன்னாருக்கு வாக்களித்தால் அவர் எனக்கு வேலை பெற்றுத்தருவார் என்ற வகையிலேயே கிட்டத்தட்ட அனைவரின் கருத்துக்களும் காணப் பட்டன. யாழ்பாணத்தில் ஈ.பி.டி.பியினருக்கும், மட்டக்களப்பில் காளான்கள் போல் கிளம்பி வாக்குவேட்டையில் இறங்கியிருக்கும் கட்சிகள் தொடக்கம் தமிழர் விடுதலைக்கூட்டணி வரை அனைவருக்கும் இன்று தமிழ் மக்கள் அளிக்கும் ஆதரவு என்பது பெரும்பாலும் வேலைவாய்ப்பு, தத்தமது ஊர்களின் முன்னேற்றம், சாதி, நட்பு, அவரவர் சார்ந்துள்ள நிறுவனங்கள் என இன்னோரன்னவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

இக்கட்டுரையை எழுதுவதற்குச் சற்று முன்னர் மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறைச் சேர்ந்த முன்னாள் கூட்டணி ஆதரவு இளைஞர் ஒருவருடன் தேர்தல் நிலவரங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது முஸ்லீம் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் தபால்துறை பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவிற்கே தான் முழுமையாக ஆதரவளிப்பதாகக் கூறினார். மட்டக்களப்பின் பல தமிழ் கிராமங்களில் 1990ம் ஆண்டு நூற்றுக்கணக்கான படுகொலைகள், பாலியல்-வல்லுறவுகள், சித்திரவதைகள், தீவைப்புக்கள் எனப் பலவற்றில் சம்பந்தப்பட்டதாக மனித உரிமை ஆணைக்குழுக்களினால் விபரிக்கப்பட்ட ஊர்காவல் படையாட்களுக்கு ஹிஸ்புல்லாவே போஷகராக இருந்தார், இன்றும் இருந்து வருகிறார் என தேர்தலில் நிற்கும் வேறுசில கட்சிக்காரர்கள் குற்றம் சாட்டுகிறார்களே என அவரிடம் கேட்டேன். "ஓம். ஆனால் அதெல்லாம் பழையகதை . இப்ப நம்மட சனத்துக்கு என்ன தேவை? வேலை. அத தமிழ்மானம் ,மசிர் எண்டு கதைக்கிற கூட்டணிக்காரன் காச வேண்டிப் போட்டுக் குடுக்கிறான் , ஆனா ஹிஸ்புல்லா அப்பிடியில்ல" என விளக்கினார். அவரைப் போலவே யாழ்ப்பாணத்திலிருந்து அண்மையில் வந்த ஒருவரும் அங்கு ஈ.பி.டி.பிக்கு வாக்குப் போட்டால் தான் வேலை வாய்ப்புக் கிடைக்கும் அத்துடன் சில-பல சலுகைகளை அக்கட்சி மூலம் ஸ்ரீலங்கா அரசிடமிருந்தும் படையினரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் வாதிட்டார். இதில் முக்கியமானது என்னவெனில், கோட்டைக்கல்லாற்று இளைஞர் ஹிஸ்புல்லாவிற்கு



**டி-சி**

ஆதரவு வழங்குவதற்கு நேரடிக்காரணம் அவர் தொழில் பார்க்கும் நிறுவனத்திற்கு ஒரு கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தார் என்பதும், இவ்வாரம் அங்கு சென்ற பொழுது மேற்படி இளைஞருடன் அன்பாகவும் பண்பாகவும் பழகினார் என்பதுவுமே ஆகும். இதேபோல யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஈ.பி.டி.பி ஆதரவாளர் சுற்றி வளைத்து தன்னுடைய தங்கைக்கும் நெருங்கிய உறவினர் ஒருவருக்கும் அக்கட்சி சிற்றூழியர் தரத்திலான வேலை போட்டு கொடுத்ததாலேயே அதன் சார்பாக தான் வேலை செய்வதாகவும் கூறினார்.

இவர்களைப் போல இதுவரை நூற்றுக் கணக்கானவர்களை இத்தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து நான் சந்தித்து வருகிறேன். ஸ்ரீலங்கா அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் தமிழரின் அரசியற்பிரக்ஞை என்பது இன்று பின்வருவனவற்றைச் சுற்றியே பின்னிக்கிடக்கின்றது என மேற்படி சந்திப்புக்களையும் அவற்றிற்கிடைத்த கருத்துக்களையும் வகுத்துத் தொகுத்துப் பார்க்கும் போது எண்ணத் தோன்றுகிறது.

1. வேலைவாய்ப்பு
2. சிறுஅளவிலான ஊர் அபிவிருத்தித் திட்டங்கள்
3. உறவுமுறை, தனிப்பட்ட நட்பு, சாதி
4. பணக்கொடுப்பனவுகள்

இவை இதற்கு முன்னர் தமிழர் தம் அரசியலில் சம்பந்தப்படாதவை என நான் இங்கு கூறவரவில்லை. ஆனால் இவை முன்னர் பெரும்பாலான தமிழருடைய அரசியல் எண்ணங்களை இந்த அளவிற்கு ஆக்கிரமித்து இருக்கவில்லை என்பதே நாம் இங்கு நோக்க வேண்டியதாகும். அத்துடன் ஹிஸ்புல்லாவுக்கு வாக்களிப்பதோ , அல்லது ஈ.பி.டி.பி க்கு ஆதரவு அளிப்பதோ அல்ல இங்கு பிரச்சினை. அது அவரவருடைய, எவ்வகையிலும் யாராலும் மறுக்கப்பட முடியாத சுதந்திரம். ஆனால் உரிமை என்ற பேச்சே வேண்டாம் சிறுசலுகைகளே எமது அரசியலைத் தீர்மானிக்கும் என்ற கருத்து தமிழரிடையே தோன்றிப் பரவி வருவதையும் அதைப் பெரும்பாலான கட்சிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதுமே இங்கு நோக்கப்படவேண்டிய விடயங்களாகும். இது எதிர்கரில்லாப் போர் முறைகளால் ஸ்ரீலங்கா அரசிற்கு கிடைத்து வரும் வெற்றியையே காட்டுகின்றது என்பதே எனது கூற்று. முதலாவதாக தமிழரின் தேர்தல் கால அரசியலின் மைய நிர்ணயக் கருத்தாக இன்று விளங்கும் வேலை வாய்ப்பு என்பதை எடுத்துக் கொள்வோம். இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளை விட வடகிழக்கின் தமிழர் வாழ் இடங்களில் வேலை வாய்ப்பின்மை ஏன் அதிகமாக உள்ளது? 1980களிலிருந்து வடகிழக்கின் பொருளாதாரத்தை திட்டமிட்டு அழித்ததாலும், ஆயிரக்கணக்கான உழைப்பாளிகள் ஸ்ரீலங்கா படையினரால் கொலை செய்யப்பட்டு அவர்களது குடும்பங்கள் அநாதரவாக்கப்பட்டதாலும் இலட்சக் கணக்கான ஏக்கர் பயிர்நிலங்களில் விவசாயம் தடைசெய்யப்பட்டதாலும், அரச வேலை வாய்ப்புக் கொள்கையில் இடையில் சில வருடங்கள் கடைப்பிடிக்கப்பட்ட இனவிகிதாசாரமுறை சந்திரிக்கா அரசினால் தூக்கி வீசப்பட்டதாலும் ஸ்ரீலங்காப் படையினரின் சில கண்மூடித்தனமான கட்டுப்பாடுகளினால் இருந்த கைத்தொழில்கள் மூடப்பட்டதாலும் புதியவற்றை ஆரம்பிக்க முடியாமல் இருப்பதாலும் ... என அடுக்கிக் கொண்டே போகக்கூடிய காரணங்களாலேயே வடக்கு கிழக்கு தமிழர்களிடையே இன்று வேலை இல்லாத் திண்டாட்டம் என்பது ஒரு பூதாகரமான சிக்கலாகத் தலையெடுத்துள்ளது. மேற்கூறிய காரணங்களை ஆராய்வோமேயானால் அவற்றில் முக்கால்வாசி எதிர்கரில்லா போரியல் கூறும் வழிமுறைகளோடு சம்பந்தப்பட்டவை என்பதைத் தெளிவாகக் காண்போம். ஏனையவை ஸ்ரீலங்கா அரசின் இனவாதக் கொள்கையோடு தொடர்புபட்டவை என்பதை நான் உங்களுக்குக் கூறத் தேவையில்லை. ஆக, வேலையில்லாமை பொருளாதார அழிவு , சமூக சீர்குலைவு என்பற்றின் நேரடிக்காரணியான சிங்கள இனவாத ஒடுக்குமுறை, எம்மீது மிக அநீதியாகத் தொடுக்கப்படும் போரை , தமிழ் இனத்தைக் குறிவைத்து வரையப்பட்ட சட்டங்களை - என பலவற்றை பற்றிய பிரக்ஞையின் (உணர்வின்) அடிப்படையில் அமைந்த அரசியல் என்பது இன்று பெரும்பாலான தமிழர் மத்தியில் செல்லாக் காசாகிக் கிடக்கின்றது என்பதே இத்தேர்தல் கூறும் உண்மை. இது எதைக் காட்டுகின்றது? ஸ்ரீலங்கா அரசு பின்பற்றிய எதிர்கரில்லா போரியலில் ஒரு முக்கிய வழிமுறை வெற்றி பெற்று வருவதையே மேற்கூறியவை எடுத்து இயம்புகின்றன.

தென்அமெரிக்காவில் அமெரிக்கப் படைத்துறையின் மேற்படி எதிர்கரில்லாப் போரியல் முறையானது பெரு நாட்டின் அந்தீஸ் பழங்குடி மக்களிடையில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பின்வருமாறு ஒரு ஆய்வாளர் விபரிக்கிறார். "தொடர்ச்சியாகவும் கொடூரமாகவும் தன்னைச் சித்திரவதை செய்யும் ஒருவனுடன் சில கைதிகளுக்கு ஒரு பிணைப்பு - தங்கு நிலை ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் பற்றி உளவியலாளர் கூறுவர். அதுபோல இந்த அந்தீஸ் குடியினரும் தமது போராட்டத்தையும் பறிக்கப்பட்ட தமது அடிப்படை உரிமை பற்றிய பிரக்ஞையையும் அறவே இழந்து , தம்மை யார் கொடூரமாக ஒடுக்கி அழித்தார்களோ அவர்கள் போடும் சில அற்ப றொட்டித் துண்டுகளே கிடைத்தற்கரிய பேறு என எண்ணி அவர்களிடமும் அவர்களைச் சார்ந்தவர்களிடமும் ஒரு வகையான தங்கி வாழும் இழிநிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளனர். இதையே பயங்கரவாதத்திற்கு எதிரான தன் நவீன எதிர்கரில்லா போரியலின் வெற்றி எனப் பெண்டகன் (அமெரிக்க படைத்துறைத் தலைமையகம் ) பறை சாற்றுகிறது." இது தமிழரின் இன்றைய அரசியலுக்கு எவ்வளவு பொருத்தமான கூற்று என்பதைக் கூர்ந்து நோக்குங்கள். அப்பாவித் தமிழர்களை ஆயிரக்கணக்கில் மிருக்கத்தனமாகச் சித்திரவதை செய்து கொன்றவர்கள், அதற்கு நேரடியாக துணை போனவர்கள், இன அழிப்பிற்கும், ஒடுக்குமுறைக்கும் அடித்தளமாக உள்ள சட்டங்களுக்கு அப்பட்டமாக ஆதரவு வழங்குபவர்கள் , அவற்றை எதிர்ப்பதாக வெட்கம் கெட்ட அரசியல் நாடகம்

19

# "தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருப்பதாக முதலில் சொன்னவர் ஜனாதிபதியே!"

**பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அவர்களை அவரது கொம்பனிவீதி அலுவலகத்தில் சந்திக்கிறோம். தேர்தல் வேலைகளில் அலுவலகம் படு பிஸியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. நிதானமான ஒரு செவ்விக்கு அவருக்கு நேரமிருக்கவில்லை. முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட கேள்விகளில் அவர் தெரிவுசெய்து பதில் அளித்த கேள்விகளும் பதில்களும் இவை:**

**? இன்று நாட்டில் பெரும் யுத்தம் ஒன்று நடந்துகொண்டிருக்கும் சூழலில் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒரு கைவிடப்பட்ட கதையாக மாறிவிட்ட நிலையில். இவற்றால் நேரடியாகப் பாதிக்கப்படுகின்ற மக்கள் என்ற முறையில் தமிழ் முஸ்லிம் மலையக மக்கள் ஏன் பொ.ஐ.முவுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?**

பொ.ஐ.முவுக்கு சிறுபான்மையினர் வாக்களிப்பதற்கு தெளிவான வாய்ப்புகள் உள்ளன. சிறுபான்மை மக்களுக்கு அரசியல் ரீதியாக பிரச்சினைகள் உள்ளன என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட முதலாவது அரசியல் தலைவர் ஜனாதிபதி அவர்களே! அத்துடன் இப்பிரச்சினைகளைத் தீர்த்துவிட அரசியல்தீர்வு வேண்டும் என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

எமது அரசாங்கம், யுத்தம் பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு வழிமுறை என்றாலும், இதனால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை எனத் தெளிவாகக் கூறியுள்ளது.


அதனால் அரசியல் ரீதியான ஒரு தீர்வு உறுதியாகத் தேவை - இவ்வாறு தெளிவாக பகிரங்கமாக ஏற்றுக்கொண்டது மட்டுமன்றி ஒரு முழுமையான வேலைத்திட்டமும் அதற்கென நீண்டகால இலக்கு வைத்து முழு அரசியல் கட்சிகளையும் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. உண்மையில் எமது தீர்வு யோசனைகள் 94 இறுதிப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

அதன்பின் பாராளுமன்றத் தெரிவுக்குழு 3 வருட காலப்பகுதியில் கூட்டங்களை நடாத்தியது. இதில் அனைத்து அரசியல் கட்சிகளும் கலந்துகொண்டன.

அதன் பின் ஜனாதிபதி தனது நேரடி பொறுப்பில் இவற்றை ஏற்றுக் கொண்டார். அலரி மாளிகையில் ஒவ்வொரு அரசியல் கட்சித்தலைவர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஐ.தே.கவுடன் மூன்று மாதங்கள் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. அதற்கு முன் தமிழ்க்கட்சிகள் இச்செயற்பாடுகளில் எம்முடன் இணைந்து பணியாற்றின. மிகவும் நேர்மையாக அனைத்து கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தீர்வுயோசனைகளை உருவாக்க முயற்சித்தோம்.

நாம் அனைவருக்கும் நினைவில் இருக்கும், ஒகஸ்ட். 3ம் திகதி ஜனாதிபதி தீர்வை மசோதாவாக பாராளுமன்றத்தில் சமர்பித்தபோது என்ன நடந்தது என்று அங்கு மிக மோசமான நடத்தையும், பிரச்சினை குறித்து அவதானிக்கும் மனப்பான்மை இல்லாமையையும் காணக்கூடியதாகவிருந்தது. இதனை நாம் எதிர்க்கட்சியின் ஒரு பொறுப்பற்ற செயல் என்றே கருதுகின்றோம். உண்மையில், நாம் இனப்பிரச்சினை குறித்து நேர்மையாகவும், தியாகத்தன்மையுடனும் செயலாற்றியுள்ளோம் என்றே கூறவேண்டியுள்ளது. இவை நீண்டகால வேலைத்திட்டங்களாகும். அதேநேரம் சிறுபான்மையினரின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தும், தீர்வு காணல் அவசியம் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். கொழும்பையும், கொழும்பை அண்டியப் பிரதேசங்களிலும் வாழும் சிறுபான்மையினர் நாளாந்தம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குறிப்பாக சோதனைச் சாவடிகள் கெடுபிடிகள், சிறைச்சாலைகள் என்பவற்றைக் கூறிக்கொள்ளலாம். ஜனாதிபதி இவற்றையெல்லாம் உணர்ந்து லக்ஷ்மன் ஜயக்கொடி அவர்களின்



தலைமையில் இந்நெருக்கடிகளைத் தீர்க்க ஒரு குழுவை அமைத்தார். அக்குழுவின் ஒரு உறுப்பினராக நானும் கடமையாற்றினேன். இக்கூட்டம் ஒவ்வொரு செவ்வாயும் கூட்டப்பட்டு, பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், சட்ட அதிகாரிகள் ஆகியோர் அழைக்கப்பட்டு பிரச்சினைகளில் 90சதவீதமானவை தீர்த்துவைக்கப்பட்டன.

அடுத்ததாக பிரச்சினைகள் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வருகை தரும் மக்கள் யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் (குடும்ப விவகாரங்கள் குறித்து) செல்லும்போது அதற்கு தேவையான கடிதங்களைப் பெற்றுக்கொள்ள அதிக காலம் செலவாகியது. இதனால் நாம் 21 அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து இரண்டு மணித்தியாலங்களுக்குள் இப்பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தோம். இவ்வாறான சேவைகளை பல பிரதேசங்களில் செய்து முடித்தோம். வெள்ளவத்தை, வடகொழும்பு, சிலாபம், ஹட்டன், பதுளை ஆகிய பிரதேங்களில் இவற்றை நடத்தி முடித்தோம்.

இவ்வாறு நீண்டகால குறுகிய கால அடிப்படையில் அன்றாட பிரச்சினைகளுக்கு இலகுவான துரிதமான தீர்வுகளை பெற்றுக்கொடுத்தோம். எமது அரசாங்கத்திற்கு இனமத வேறுபாடின்றி அனைவரும் ஒரே அடையாளத்தின் கீழ் வாழ வேண்டும் என்ற ஆர்வம் இருக்கின்றது. இதுமிகவும் கடினமானதொரு செயற்பாடு. இதனால் பல விமர்சனங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க நேர்ந்தது.

இதனால் தான் சிறுபான்மையினர் பொ.ஐ.முவுக்கு வாக்களிப்பது நீதியானது எனக் கருதுகின்றேன்.

**? அண்மையில் தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு நீங்கள் வழங்கிய பேட்டி ஒன்றில் தமிழ் மக்களின் வாக்குறுதிகளிலேயே உங்கள் வெற்றி தங்கியிருப்பதாகக் கூறியுள்ளீர்கள். சிங்கள மக்கள் உங்களது செயற்பாடு காரணமாக அதிருப்தி அடைந்திருப்பதாக கூறியுள்ளீர்கள். ஆனால். உங்கள் முயற்சியின் பயனான தீர்வுப்பொதி குறித்து தமிழ் மக்களிடையேயும் ஆதரவான கருத்து இல்லையே. இது பற்றி...?**

இவ்வாறானதொரு அறிக்கையை நான் வெளியிடவில்லை. ஒரு குறிப்பிட்ட நபரின் வெற்றி ஒரு பகுதி மக்களின் வாக்குகளால் நிர்ணயிக்கப்பட்ட வேண்டும் என நான் ஒரு போதும் கூறவில்லை. எமது தேவை தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதாகும்.

முகாம்களாகப் பிரிந்து சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் எனப் பிரித்து வாக்குகளைப்பெற வேண்டிய அவசியம் எமக்கில்லை. இது எமது தத்துவங்களுக்கு முரணானது. இந்த நாட்டின் பிரச்சினையை தமிழ் மக்களின் பங்களிப்பின்றி தீர்க்க முடியாது என்றே நான் கருதுகின்றேன்.

தமிழ் மக்கள் வரலாற்றை மறக்க வேண்டும் என்றில்லை. சிலர் கூறுகின்றனர் எமது சமூகம் தொடர்பான விமர்சனத்தின்போது நாடு குறித்தும் சமூகம் குறித்தும் எமக்கு குறுகிய மனப்பதிவுகளே உண்டென கூறுகின்றனர்.

நான் தமிழ் மக்களுக்கு கூற விரும்புகிறேன். நேர்மையான முறையில் ஐ.தே.க ஆட்சியின் கீழ் அவர்களது நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கும்படி ஐ.தே.கவின் கறுப்பு ஜூலையில் சிற்சிலர் சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

அரசின் ஆதரவில் தான் அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றது என்பதை அனைவரும் அறிவர். எனவே எமது அரசின் காலப்பகுதியுடன் இவற்றை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்.

எமது அரசாங்கம் ஒருபோதும் எமக்குத் தமிழ் வாக்குத்தான் வேண்டும். சிங்கள வாக்குத்தான் வேண்டும் என ஒரு போதும் கூறியதில்லை. நாம் அனைவரையும் எமது பிரஜைகள் என்றே கருதுகின்றோம். நாம் ஒருபோதும் உங்களது பாதுகாப்பை நீங்களே உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள் எனக் கூறியதில்லை. கடந்த அரசாங்கம் அவ்வாறு கூறியிருந்தது. எமது கடமை அனைவரையும் பேணி பாதுகாப்பது தான்.

எனவே இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் புத்திசாதுரியமான தீர்வையே எடுத்தல் வேண்டும்.

**? வடக்கு கிழக்கு மாகாணசபை தேர்தல் கடந்த பத்தாண்டுகளாக நடாத்தப்படவில்லை. இதற்கு காரணம் அங்கு அது நடாத்தப்படுவதற்கான சூழல் இல்லையென்று அரசு கூறுகிறது. ஆனால். உங்கள் அரசு இதே சூழலில் இதே பிரதேசத்தில் நடத்துகிற மூன்றாவது தேர்தல் இது. இதை எப்படி விளக்குவீர்கள்?**

இதுபற்றி எனது கருத்து சில சில சந்தர்ப்பங்களில் உள்ள சூழ்நிலையில் உள்ள நிலைமைகளுக்கிணங்க செயற்படுவது என்ற அடிப்படையில் தேர்தல் நடாத்த வேண்டியுள்ளது. இந்த யதார்த்தத்திற்கு முகம் கொடுத்துக்கொண்டு எல்லாப் பிரச்சினைகளும் தீரும்வரை காத்திருந்து தேர்தலை நடாத்த வேண்டும். எவராலும் தர்க்கம் செய்யமுடியாது ஜனநாயகத்தின் முக்கியமான அங்கம் இதன்படி பிரச்சினைகள் பல இருக்கலாம். சமாதானத்தை ஏற்படுத்த இயலாமல் போயிருக்கலாம் இவற்றை காரணம் காட்டி தேர்தலை பிற்போடுவது நியாயமானதல்ல. ஆகவே நாம் தேர்தலை நடாத்தி முடிப்பது சிறந்ததாகும்.

நாம் அதிகபட்சம் தேர்தலை சிறப்பான முறையில் நடாத்த முயற்சிக்க வேண்டும். தேர்தலை பிற்போடுவதற்கான காரணங்களை தெரிவிக்கப்போனால் அதில் பல சிக்கல்கள் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

இதனால் அனைவரும் ஏன் என கேள்வி எழுப்பத் தொடங்கிவிடுவார்கள். ஜனநாயக சமூகத்தில் இதற்கான வாய்ப்பில்லை எனலாம்.

எமது அறிக்கையையும், ஐ.தே.க அறிக்கையும் ஒப்பிட்டுப்பார்த்தல் வேண்டும். எமது உத்தேச அரசியலமைப்பின் யோசனைகளின் அடிப்படையாக இருந்த தத்துவம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறை அவர்களே தெரிவு செய்யும் உரிமையாகும். எமது உத்தேச தீர்வுத்திட்டத்தின் அடிப்படை அதுவே.

இது குறித்து எதிர்க்கட்சியின் நிலைப்பாடு, தீர்ப்பு என்பனவற்றை தமிழ் மக்கள் அறிவர். யாரிடம் இருந்து நீதியைப் பெறலாம் என்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும்.

**? முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் மந்திரிப் பதவி இன்னமும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்ட ஹக்கீம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அரசு அதை இழுத்தடிக்கிறது என்று கூறப்படுகிறதே?**

இதுபற்றி பதில் சொல்ல எனக்கு முடியாது. மந்திரிகளை நியமிப்பது என்னுடைய அதிகாரத்திற்குட்பட்டதல்ல.

# பாராளுமன்றத் தேர்தல்:
# பெண்களுக்காகக் கண்ணீர்!

10ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சார மேடைகளில் இப்போதெல்லாம் பெண்கள் முக்கிய பேசுபொருளாகி விடுகின்றனர். 'என் இனிய தாய்மார்களே', 'அம்மணிகளே', 'சகோதரிகளே' என விளிப்பது தொடக்கம் பெண்கள் உரிமைகளுக்காக அரசியல்வாதிகள் நீலிக்கண்ணீர் வடிப்பது வரை பெண்கள் அரசியல் மேடைகளில் முக்கிய பேசுபொருளாகி விட்டனர். ஆனால் நடைமுறையிலோ முற்றிலும் வேறுபாடான நிலைமையே காணப்படுகின்றது.

இந்த நிலைமையில் அரசியற்கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்கள் குறித்தும் அவர் தம் அபிவிருத்திகள் குறித்தும் அக்கறை செலுத்தியுள்ளதா என்பது பற்றி சற்று அவதானம் செலுத்துதல் கட்சிகளின் போலித்தன்மையைப் புரிந்து கொள்ள உதவும்.

தேர்தல் விஞ்ஞாபனம் அரசியற் கட்சிகளின் செயற்பாடுகள் பற்றிய மிக முக்கியமான ஆவணமாகும். நிறைவேற்றப்போகும் வாக்குறுதிகளை ஆவணப்படுத்தியுள்ள இந்த விஞ்ஞாபனங்களில் பெண்களுக்கென அரசியற் கட்சிகள் என்னவிதமான வாக்குறுதிகளை வழங்கியுள்ளன என்பதை சீர்தூக்கிப் பார்த்து அதற்கேற்ப அரசியலில் பெண்களின் இழிவான நிலைமைகளை அளவிடுவது சமூகப் பிரக்ஞையுள்ள வாக்காளர்களது கடமையாகும்.

பெண்கள் இன்னாருக்குத் தான் வாக்குப்போட வேண்டும் என ஆண்களே தீர்மானிக்கும், செல்வாக்குச் செலுத்தும் சமூகக் கட்டமைப்பில், அரசியற் கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளவை இவ்வளவு தான் என விளங்கிக் கொள்வது அதற்கேற்ப பெண்கள் தமது எதிர்ப்பை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த அவசியமானது.

இதன்படி பிரதான தேசியக் கட்சிகளான ஐ.தே.க., பொ.ஐ.மு. உட்பட ஜே.வி.பி., சிஹல உறுமய, பிரஜைகள் முன்னணி ஆகிய கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்கள் குறித்தும், பெண்கள் பிரச்சினைகள் குறித்தும் எவ்வாறான வாக்குறுதிகளை தந்துள்ளன என்பதை பின்வருமாறு அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

அத்துடன் "மதம் கலாசாரம் மற்றும் உரிமை" என்ற பொதுத் தலைப்பின் கீழ் பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவது குறித்தும், பெண்களுக்கு அகௌரவம் அளிப்பது குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட கட்சிகள், போரினால் பாதிக்கப்படுகின்ற பெண்கள், மலையகப் பெண்கள் ஆகியோர் குறித்து அக்கறை காட்டாத மனப்போக்கையும், அவ்வாறு அக்கறை காட்டியிருந்தாலும் அவற்றை தெளிவாக வரையறுக்காத தன்மையையும் கொண்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஐ.தே.க. பெண்கள் சாசனம் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்சிகளின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்கள் குறித்து எவ்வாறான அக்கறை காட்டப்பட்டுள்ளதென பிரபல பெண்ணிலைவாதியும், அரசியல் நடைமுறைகள் தொடர்பாக நிபுணத்துவம் கொண்டவருமான டன்சி த சில்வா அவர்களின் (இவர் முன்னாள் பிரதி அமைச்சரும், பா.உ.மான வை.பி.சில்வாவின் துணைவி) கருத்தை கேட்டறிந்த பொழுது பின்வருமாறு கூறினார்.

"ஐ.தே.கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நோக்கும் போது பெண்களுக்கு உரிமை வழங்கப்படும், பெண்களுக்கு கௌரவம் அளிக்கப்படும் என கூறியுள்ளமையை அவதானிக்கக் கூடியதாவுள்ளது. ஆனால், ஐ.தே.கவின் 17 வருட ஆட்சிக்காலத்தில் பெண்கள் இரவில் நித்திரைக்குச் சென்றால் காலையில் கண்விழிப்போம் என்ற நம்பிக்கையின்றி, பீதியுற்று, வாய்திறக்க முடியாமல் இருந்த சூழலை நாம் மறந்துவிடக் கூடாது.

இங்கு இன்னொரு விடயத்தைக் கூற வேண்டும். ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ராஜித சேனாரத்ன அவர்கள் தான் தேர்தலில் வெற்றிபெற்றால், சந்திரிகாவின் வீட்டில் தண்ணீர், மின்சாரம் என்பனவற்றைத் துண்டித்து விடுவதாகக் கூறியுள்ளார். ஒரு ஜனாதிபதிக்கே இந்த நிலைமை என்றால்,

19


### பொதுஜன ஐக்கிய முன்னணி



மகளிர் மற்றும் சிறுவர் உரிமைகள்

1. முதன்முறையாக எமது அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களைப் பலப்படுத்துவதற்காக நாடு முழுவதிலும் சிறுபிள்ளைகளுக்கான பகற்கால பராமரிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கும், மூன்றாம் உலக நாடுகளில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட "சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை" பலமுடையதாகவும், விரிவானதாகவும் நடைமுறைப்படுத்தல். முதியோர் இல்லங்களை அமைப்பதற்கும் எமது அரசாங்கம் அடுத்து வரும் ஐந்து வருட காலத்தில் செயற்படவுள்ளது.
2. இலங்கைப் பிரஜா உரிமையைக் கொண்ட ஆண் ஒருவர் வெளிநாட்டுப் பெண்ணொருவரை மணம் முடித்தால் பெண்ணுக்கும், அவருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் பிரஜா உரிமை வழங்கப்படும். எனினும், இலங்கைப் பெண்ணொருவர் வெளிநாட்டு ஆடவர் ஒருவரை மணம் முடிப்பதால் அவருக்கோ, அவரால் கிடைக்கப்பெறும் பிள்ளைகளுக்கோ இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படமாட்டாது. இந்த நிலைமையை மகளிர் மற்றும் சிறுவர் உரிமையைப் புறக்கணிக்கும் ஒரு செயலாக நாங்கள் கருதுகிறோம். எனவே, இந்தச் சட்டத்தை முழுதாக மாற்றியமைத்து இலங்கை ஆண்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் அவ்வாறே பெண்களுக்கும் வழங்குவதற்கான வழிவகைகளைச் செய்ய நடவடிக்கை எடுப்போம்.
3. 2000 ஆம் ஆண்டளவில் தொழிலில் ஈடுபடுத்தப்படும் சிறுவர் மற்றும் வீதிச்சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு பூரண தீர்வு காணப்படும்.

### ஐக்கிய தேசியக் கட்சி



- ✔ பெண்கள் உரிமையை பாதுகாக்கும் பெண்கள் சாசனத்தை சட்டரீதியாக்குதல்.
- ✔ பெண்களின் விசேட தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு அரச கொள்கை தயாரிப்பில் முதலிடம் பெற்றுக்கொடுத்தல்.
- ✔ போரில் கணவனை இழக்கும் பெண்கள் மற்றும் மோதல் நடைபெறும் பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் தாய் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்கள், இடம்பெயரும் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் போன்ற அடிக்கடி சிக்கல்களுக்கு முகம் கொடுப்பவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்.
- ✔ பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகி உளவியல் ரீதியாக பாதிப்புற்றுள்ள பெண்களை பாதுகாக்க சிறப்பான முறைகளை அறிமுகப்படுத்தி மிகவும் திறமைவாய்ந்த சட்டபூர்வமானதொரு பின்னணியை தயாரிக்க நடவடிக்கை எடுப்போம். இவ்வாறான முறைப்பாடுகள் குறித்து செயற்பட விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட பெண் அதிகாரிகளை அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் நியமித்தல்.
- ✔ பெண்களுக்கு சமூகத்தில் அனைத்துத் துறைகளிலும் உரித்தான உரிமைகளை பெற்றுக்கொடுக்கவும், பீதியும் சந்தேகம் இன்றி வாழவும் சூழலை ஏற்படுத்துவோம்.
- ✔ பெண்கள் பீதியின்றி வீதியில் நடமாடக்கூடிய இலங்கையை உருவாக்குவோம்.
- ✔ தொழில் புரியும் பெண்களுக்கு தங்குமிட வசதிகளும், சிறுவர்களுக்கென பகற்கால சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் ஸ்தாபிக்கப்படும்.

### ஜே.வி.பி.



1. பெண்களைப் பாதிக்கும் சமூக அசமத்துவம், வேறுபாடுகள், தடைகள் என்பவற்றை மாற்றத்துக்குட்படுத்துவதுடன் அனைத்து துறைகளிலும் பெண்களுக்கு ஆண்களைப் போன்று சம உரிமைகளுக்கான உறுதிப்பாட்டை வழங்குதல்.
2. சட்டத்திலும், சம்பிரதாயங்களிலும், மற்றும் சமூகக் கருத்தியல்களிலும் பெண்களுக்கு கௌரவம் மற்றும் சம உரிமைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.
3. திருமண வாழ்வில் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அசமத்துவம் என்பவற்றை இல்லாதொழிக்க சீதன முறையை முழுமையாக தடைசெய்தல், குழந்தைகள் பெறுவது குறித்து முழுமையான உரிமையை பெண்களுக்கு உரித்தாக்குதல் மேற்கொள்ளப்படும்.
4. சமூக உழைப்பு நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொழில்புரியும் அனைத்து பெண்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கும் வேலைத்திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்தல். இதனை நிறைவேற்றும் முகமாக முதல் 5வருட காலப்பகுதியில் நாட்டில் உருவாகும் வேலைவாய்ப்புகளில் பெண்களை பயன்படுத்திக்கொள்ளக் கூடிய அனைத்து தொழில்களுக்கான வாய்ப்பை திறமையின் அடிப்படையில் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல்.
5. பெண்கள் தொழிலுக்கு செல்லும்போது குழந்தைகளை பாதுகாக்கும் நடவடிக்கைக்கு பகற்கால பராமரிப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படுவதுடன்; அதன் பொறுப்பை அரசு முழுவதுமாக ஏற்கும்.
6. உயிரியல் காரணங்களின் அடிப்படையில் பெண்களுக்கு பாதிப்பை தரக்கூடிய தொழில்களில் பெண்களை ஈடுபடுத்தலை சட்டபூர்வமாக முழுமையாகத் தடை செய்தல்.
7. பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்துவதினால் பல சமூக நெருக்கடிகள் ஏற்படுகின்றது என்பதுடன் பெண்கள் பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்றனர். இந்த நிலைமையை மாற்ற வெளிநாடுகளுக்கு செல்லும் பெண்களை பாதுகாப்பு மற்றும் உற்பத்திதுறை வேலைவாய்ப்புகளில் ஈடுபடுவதுடன் வீட்டு வேலைகளில் ஈடுபடுவதைத் தடுத்து நாட்டின் உற்பத்தித்துறைகளில் பெண்களுக்கு வேலை பெற்றுக்கொடுக்கப்படும். இதனை நிறைவேற்றும் வரையில் பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வார்களாயின் அவர்களை பயிற்றுவிப்பது, காப்புறுதி செய்வது மற்றும் அவர்களது பாதுகாப்பு குறித்தான பொறுப்புகளை அரசு நிறைவேற்றும். பெண்களை வேலைக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பும் தனியார் நிறுவனங்கள் கலைக்கப்படுவதுடன் அரசு இந்நடவடிக்கையை தமது பொறுப்பாகக் கொள்ளும்.
8. தொழில் புரியும் பெண்களுக்குப் பிள்ளைப்பேற்றின்போது ஊதியத்துடனான விருப்பு மற்றும் அனைத்து வசதிகள் உறுதிப்படுத்தப்படும்.
9. பெண்களின் அரசியல் பங்களிப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் அவர்கள் அரசியலில் ஈடுபடுத்தும் விசேட வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதுடன், அதன் ஆரம்பமாக, மக்கள் சார் நிறுவனங்களில் பெண்களின் பங்களிப்பை குறைந்தது 10சதவீதமாக நடைமுறைப்படுத்தல்.
10. பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அதில் தலையிடும் முகமாக முழு அதிகாரம் கொண்ட விசேட பெண்கள் அதிகாரப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படும். இப்பிரிவு சமூக ஊழியர்கள் மற்றும் நிபுணர்களைக் கொண்டதாக விளங்கும்.


### சிஹல உறுமய

- ✔ வயதுமுதிர்ந்தோர், அங்கவீனர்கள், தொழில் புரியும் பெண்கள், அனாதைச் சிறுவர்கள் ஆகியோருக்கான சுகாதாரம், பாதுகாப்பு குறித்தான வேலைத்திட்டங்களை தயாரித்தல்.
- ✔ மத்தியகிழக்கு நாடுகளில் தொழில்புரியவுள்ள பெண்களுக்கு உகந்த ஆலோசனைகளை வழங்குதல்



மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குதலுக்காக கொழும்பு மற்றும் பிற மாவட்டங்களின் பிரதான நகரங்களில், தலா ஒரு அலுவலகம் என்ற வகையில், அம்மாவட்ட அதிபர் அலுவலகத்துடன் தொடர்புடையதாக அலுவலகங்கள் அமைக்கப்படும். மேலும் விசேடமாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் பெண்களின் நலன்கள், பிரச்சினைகள் குறித்து விசாரிக்க அவ்வவ் நாடுகளின் அனைத்து இலங்கை தூதுவராலயங்களிலும் அதிகாரிகள் சிலரைக் கொண்ட பிரிவை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தல்.

- ✔ பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்கள் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனை வழங்கக்கூடிய வகையில் சட்டங்களை அமுல்படுத்தல்.
- ✔ சிறுவர் உரிமைகளை பாதுகாக்க சிறுவர் சாசனத்தையும், பெண்களது கௌரவத்திற்கு இழிவை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்க சட்டதிட்டங்கள் அமுல் செய்யப்படும்.




# தலைமறைவு வாழ்க்கை

றெஜி சிறிவர்த்தன

## நினைவுக் குறிப்புகள் – 2

எனக்குப் பன்னிரண்டு வயதாக இருக்கும் போது இலங்கை தொலைத்தொடர்பு திணைக்களத்தில் தான் பார்த்து வந்த பிரதம லிகிதர் பதவியிலிருந்து தன்னுடைய உடல் நலக்குறைவு காரணமாக உரிய காலத்தக்கு முன்பே அப்பா ஓய்வெடுத்துக் கொண்டார். (நீரிழிவுநோய் அவரிடமிருந்து எனக்குக் கிடைத்த முக்கிய பிதுரார்ஜித சொத்துக்களுள் ஒன்று!) அவர் பெரும்பாலும் சுயகல்வி ஊடாக உருவான ஒருவர். ஆயினும், அவரிடம் ஒரு சிறிய புத்தகச் சேகரிப்பு இருந்தது. அவை பௌத்தமதம் தொடர்பான ஆங்கில மொழிபெயர்ப்புகள், 19ம் நூற்றாண்டின் பகுத்தறிவுவாத பிரித்தானிய அமெரிக்க எழுத்தாளர்களின் நூல்கள். மற்றும் ஜி.டபிள்யூ.எம்.றெனோல்ட்டின் நாவல்கள் (இலங்கை இந்தியா போன்ற நாடுகளின் காலனித்துவ கலாசாரம் குறித்த முக்கியமான சக்தியாக விளங்கிய) மக்குலே என்பாரின் கட்டுரைகள், அப்போட் என்ற பெயரைக் கொண்ட ஒரு குடியரசுவாதப் போக்குக்கொண்ட அமெரிக்கரால் எழுதப்பட்ட நெப்போலியனின் இச்சகத் தன்மை மிக்க சுயசரிதம் போன்ற பல்வேறு இந்திய மலிவுப் பதிப்பு நூல்களைக் கொண்டதாக அவரின் சேகரிப்பு இருந்தது. அவரைப் பொறுத்த வரையில் முதல் இரண்டு விடயங்களிலும் எந்த முரண்பாட்டையும் அவர் காணவில்லை. அவரது காலத்தில் வளர்ந்த பல இலங்கையர்களைப் போல அவருக்கும் பௌத்தம் ஏனைய மதங்களிலிருந்து வேறுபட்ட ஒரு பகுத்தறிவுத் தத்துவமாக இருந்தது.

பௌத்தமதச்சடங்குகளுடனோ மூட நம்பிக்கைகளுடனோ அவருக்கு எந்த உறவும் இருந்ததில்லை. நெப்போலியனை தனது 'ஹீரோ'வாகக் கருதுமளவுக்கு அவன் மீது அவருக்கு ஈடுபாடு இருந்ததாக நான் கருதுவதற்குக் காரணம் அவரது 'ஹீரோ'வைப் போலவே அவரும் கட்டையானவர் என்பது தான். என்றாலும் அவரது பிரித்தானிய எதிர்ப்பு அரசியலும், காரணம் எனலாம். நெப்போலியன் கீழ்மட்டத்தில் இருந்து எழுந்து வந்தவன். அவன் ஐரோப்பாவின் பல முடிக்குரிய தலைகளை வீழ்த்தியதன் மூலமாக பிரித்தானியருக்கு பலமான அடி கொடுத்திருந்தான்.

மக்குலேயின் எழுத்துக்களில் கூட அவரது விருப்பத்துக்குரிய கட்டுரையாக இருந்தது வாரன் ஹங்ரிங் பற்றிய கட்டுரையாகும். வாரன் ஹங்ரிங் இந்தியாவில் செய்தகொடுமைகட்கு எதிராக ஒரு ஒழுக்க வழுப்பிரேரணையை பூரிக் என்பவர் கொண்டு வந்திருந்தார். தோல்வியில் முடிந்த இந்தப் பிரேரணையின் முடிவுரையாக பூரிக் குறிப்பிட்ட விடயங்களைப் பற்றி மக்குலே எழுதிய கணீரென்ற வார்த்தைகள் இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கின்றன.

"பிறகு ஐரிஸ் நாட்டு ஓர்க்மரத்துக் கூடங்கள் எங்கும் எதிரொலிக்கும் விதத்தில் தனது குரலை உயர்த்தி, பேச்சாளர் தன் பேச்சை முடித்துக் கொண்டார்..."

இந்தப் புத்தகங்கள் எனக்கு எப்போது வேண்டுமானாலும் சுதந்திரமாக எடுத்துப் படிக்கக் கூடியதாக இருந்தன. இவற்றில் சிலவற்றை அவருக்காக உரத்து வாசிக்குமாறு நான் துாண்டப்பட்டதும் உண்டு. (இதுதான் பூர்க்கின் மேலே சொன்ன வசனம் இப்போதும் எனக்கு ஞாபகத்திலிருப்பதற்குக் காரணம்!) ஆனாலும் றெனோல்ட்டின் புத்தகங்கள் மிகவும் கவனமாக எனக்குப் படிக்க முடியாதபடி அகற்றப்பட்டிருந்தன. இன்று இந்த நாட்டில் இருப்பவர்களில் என்னைத் தவிர யாரும் ஜி.டபிள்யூ.எம்.றெனொல்ட் பற்றிக் கேள்விபட்டுக் கூட இருப்பார்களோ தெரியவில்லை. ஆனால், பின்னாளில் றெனொல்ட் ஒரு சுவாராஸ்யமான மனிதர் என்று நான் கண்டுபிடித்தேன். அவர் பல பிரபல்யமான 'லண்டன் நீதிமன்றங்களின் மர்மங்கள்' என்பது போன்ற நாவல்களை எழுதினார். அவரது நாவல்கள் அன்றைய பேரரசினதும் பிரபுக்களின் ஆட்சியினதும், அநீதிகளை பற்றி அம்லப்படுத்துகின்ற சமூகப் புரட்சிக் கருத்துக்களை மெல்லிய ஆபாசம் கலந்த மொழியில் எழுதப்பட்டிருந்தன. இதுதான், இந்தப் புத்தகங்கள் என்னிடமிருந்து விலக்கப்பட்டதற்கான காரணம்.

அப்பாவிடம் ஒரு பெறுமதி வாய்ந்த ஒட்டுப் புத்தகமும் இருந்தது, பத்திரிகைகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட நறுக்குகள் இப்புத்தகத்தில் ஒட்டப்பட்டிருந்தன. 1915ம் ஆண்டில் நிலவிய மார்ஷல் சட்டத்தின் போது பிரித்தானிய துருப்புக்கள் செய்த அட்டூழியங்கள் பற்றி சட்டசபையில் பொன்னம்பலம் ராமநாதன் ஆற்றிய உரை வெளியாகியிருந்த 'மோர்னிங்க லீடர்' பத்திரிகையின் நீண்ட முன்பக்கச் செய்தி அதில் இருந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் எனது பால்ய வயதை அடைய முதலே இது என் மீது சில பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்தச் செய்திக்கு எழுதப்பட்ட முன்னீடு (அனேகமாக இது ஆர்மன்ட் டி சொய்சாவால் எழுதப்பட்டிருக்க வேண்டும்) எனக்கு ஞாபகம் இருக்கிறது. அது சட்டசபையில் நடந்த அந்த நாடக பாணியிலமைந்த கணத்தை விபரித்தது. "சபையிலிருந்த மணிக்கூட்டில் சரியாக நள்ளிரவு பன்னிரண்டு மணி அடித்தது. ஆளுநர் பொன்னம்பலம் ராமநாதன் பக்கம் திரும்பிக் கேட்டார். "கலவரத்தின் காரணம் என்ன?" ராமநாதன் தனது குற்றச்சாட்டைத் தெரிவிக்க எழுந்து நின்றார்.

எனது அம்மா ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து, திருமணமாகும் வரை கிராமத்திலேயே வசித்து வந்தவர். அவர் ஒருபோதும் ஆங்கிலம் பேசியதோ எழுதியதோ கிடையாது. இதனால் நான் அம்மாவிடம் சிங்களத்திலும், அப்பாவிடம் ஆங்கிலத்திலும் பேசுவேன். அன்றைய கீழ் மத்திய தர வர்க்கத்தின் கலாசாரத்துக்கேற்றபடி நாங்கள் - பிள்ளைகள் - டடா, மம்மா என்றோ தாத்தா, அம்மா என்றோ எமது பெற்றோர்களைக் கூப்பிடாமல் பப்பா, மம்மா என்று கூப்பிட்டோம். (இதற்கான மூலம் போர்த்துக்கல் என்று நம்புகிறேன்.)

இது எமது சமூகத்தில் எமது இடத்தை வெளிப்படையாக காட்டுகிற ஒரு அடையாளம் எனலாம். கோட்பாட்டு ரீதியாக சொல்வதானால், இந்த பல்வேறு கலாசாரங்களுடனான தொடர்பு நிச்சயமாக வளமூட்டும் ஒன்றாக அமைந்திருக்க வேண்டும். ஆனால், காலனித்துவ காலத்தின் வர்க்க விழுமியங்கள் காரணமாக இது திரிபுபடுத்தப்பட்டு விட்டது. நான் அனுபவித்த ஒரு அவமான உணர்வை பின்னாளில் எழுதிய கவிதை ஒன்றில் (COLONIAL CAMEO) நினைவு கூருகிறேன். எனக்கு ஆறுவயதாக இருந்த போது பாடசாலைக்கு வந்த எனது அம்மா ஆசிரியருடன் சிங்களத்தில் பேசிய போது அது நடந்தது. அவள் போய்வருவதாக சொன்ன வார்த்தையை அதே மொழியில் திருப்பிச் சொல்லி மாணவர் கும்பல் ஒன்று அவளை நையாண்டி செய்தது.

> "நான் அனுபவித்த ஒரு அவமான உணர்வை பின்னாளில் எழுதிய கவிதை ஒன்றில் (COLONIAL CAMEO) நினைவு கூருகிறேன். எனக்கு ஆறுவயதாக இருந்தபோது பாடசாலைக்கு வந்த எனது அம்மா ஆசிரியருடன் சிங்களத்தில் பேசியபோது அது நடந்தது. அவள் போய்வருவதாக சொன்ன வார்த்தையை அதே மொழியில் திருப்பிச் சொல்லி மாணவர் கும்பல் ஒன்று அவளை நையாண்டி செய்தது."

(இன்னும் வரும்)

## கடிதப் பூச்சாண்டி!

அரசு எப்பொழுதும் புலிகள் இப்படித்தான். யுத்தம் செய்ய வேண்டும் என்பதுபோல் தம் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப யுத்தம் தொடங்கி தமக்கு சாதகமான சூழல் ஒன்றில் யுத்தத்திற்கு அழைப்பர். ஆனால், புலிகள் போக்கு காட்டியவாறு இருந்து கொண்டு திடீரென தமக்குரிய விதத்தில் போரின் திசைகளை தீர்மானித்து வலிந்து இழுத்த அரசையே தம் வழிக்கு இழுத்து போர் செய்வர். இதுதான் போரின் இயல்பாக இருந்தது.

இப்பொழுது தென்னிலங்கை அரசியலிலும் இதுதான் நடக்கின்றது போலும்.

ஜனாதிபதி அடிக்கடி பூச்சாண்டி காட்டும் பாட்டிமார் போல் முன்னர் பேச்சுவார்த்தை காலத்தில் அவரிற்கும் பிரபாகரனிற்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களை பற்றி கூறி "எடுத்து வெளியில் விட்டு விடுவேன் ஆனால், பாவம் பிரபாகரன்.." என்பது போல் பயம் காட்டுவார். ஆனால், இம்முறை குழந்தையே பாட்டிக்கு இதுதான் பூச்சாண்டி எனத் திருப்பி காட்டி பயமுறுத்துவது போல் சத்தம் சந்தடி இல்லாமல் லண்டனில் வைத்து முழு உலகிற்கு முன்னாலேயே வெளியிட்டு விட்டார்கள். அக்கடிதங்களை.

தேர்தல் நேரத்தில் எதிர்க்கட்சிகளிற்கு எல்லாம் வாய்ப்பாக போய்விடுமே எனும் பயத்தில் இன்று அரசு அதற்கு எதிராக கூச்சல் இடுக்கின்றது. யூ.என்.பி.யை வெல்ல வைக்கவே அவர்கள் வெளியிட்டுள்ளார்களாம் என கூக்குரல் இடுகின்றது. ரூபவாகினி, லேக் ஹவுஸ் பத்திரிகைகளில் எல்லாம் அழுது குழறுகின்றது.

ஈற்றில் எதனை வைத்து பயம் காட்ட முனைந்தனரோ அதனைப்பார்த்து அவர்களே அஞ்ச வேண்டிவந்துவிட்டது.

பாவம் இதுதான் (அரசியல்)விதி என்பது போலும்...!

## கண்கட்டி வித்தைக்காரர்!

ரணில் பற்றி கூறுபவர்கள் எல்லாம் அவரின் "இயலாமை" ஆளுமையைப் பற்றி கூறாமல் விடமாட்டார்கள். மனுஷனுக்கு அப்படி ஒரு தோற்றம். ஆனால், அவர் நல்ல கண்கட்டி வித்தைக்காரர் என்பது எத்தனைபேரிற்கு தெரியும்...?

எல்லா சிங்கள மக்களின் கண்களையும் கட்டிவிட்டு தமிழ் மக்களின் துயர்களை துடைக்க முயல்வார், அவர்களிற்கு நிவாரண உதவி வழங்குவார் எல்லாம் செய்வார். அதேபோல் எல்லா தமிழ் மக்களின் கண்களையம் கட்டிவிட்டு அவரின் யுத்த தளபதி ஜானக பெரேராவைக் கொண்டு சிங்கள இனத்தின் வெற்றிக்காக யுத்தம் செய்வார். தமிழர்கள் மீதே போர் புரிவார்.... ஏனெனில், அவரின் தேர்தல் பிரச்சாரங்களை பார்த்தாலே இவ் கண்கட்டி வித்தையை எவரும் புரிவார்.

ஒரே தொலைக்காட்சியிலே அல்லது ஒரே நிறுவனத்தை சார்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகளிலேயே தமிழ் மக்களின் துயர்துடைப்பதாக தமிழில் விளம்பரம் செய்துவிட்டு அதே விளம்பரத்தின் சிங்கள மொழி ஒளிபரப்பில் தமிழ் மக்களின் துயர்பற்றி வரும் இடத்தில் விவாசாயிகளின் துயர் பற்றி போட்டு தன்னை யார் என சரியாக இனம்காட்டிக்கொள்வார்.

இதற்கு நல்ல உதாரணம் சக்தி தொலைக்காட்சி, எம்.ரி.வி., சிரச ஆகியவற்றில் வரும் அவரின் பிரச்சார விளம்பரங்கள்.

பாவம் அவர் தன் இந்த அற்பதனமான விளம்பரத்தைக் கூட தமிழ் மக்கள் இனம் காண மாட்டார்கள் என கருதி விட்டார் போலும்.

...ஐயா ரணிலாரே... நாம் இதற்கு ஆறு ஆண்டுகளிற்கு முன்பே இதனைவிட நன்றாக இரட்டைவேடம் போட்டவரையே பார்த்துவிட்டோம்... நீங்கள் எம் மாத்திரம் உங்களின் பம்மாத்தை தமிழ் மக்கள் மட்டும் அல்ல, எந்த இன மக்களும் நம்ப மாட்டார்கள் என விரைவில் புரிந்துகொள்வீராக...

## இங்கிவரை யாம் பெறவே...!

இங்கிவர்களை மந்திரியாய் யாம் பெறவே என்ன தவம் செய்திட்டோம்? சுசந்திகா மீது நாட்டின் பெயரால் அதற்கு ஒரு பதக்கமாவது பெற்றுக்கொடுக்க முனைந்த பெண் மீது ஒரு மந்திரி தன் பாலியல் வக்கிரங்களை தீர்க்க முயல்கின்றார். இன்னொருவரோ, அதுவும் மந்திரிகளிற்கு எல்லாம் பிரதான மந்திரியாரோ அவர் போயும் போயும் மூன்றாவதாக வந்து விட்டாரே எனக் கேலி செய்கின்றார். ஆஹா இது அல்லவோ சபை பொருத்தம்.

ஒலிம்பிக் மீதும் அதன் அரசியல் மீதும் பல கேள்விகள் இருந்தாலும் அதில் வென்ற சுசந்திகாவின் வெற்றியை ஒரு விளையாட்டில் வெற்றியடைந்த சாதாரண பெண்ணின் வெற்றியாக கொள்ள முடிகிறது இல்லை. ஒரு பெண்ணாக இருந்ததால் ஆணதிக்க சமூகத்தால் அவளின் வெற்றி அடைதலை சகிக்க முடியாது போன தன்மையும் அவ் ஆணாதிகார முறைக்கு அரசியல் பலமும் கிடைத்துவிட்டதால் அது அப் பெண்ணின் முன்னேற்றத்தை தடுக்க முனைந்த முறைக்கும் எதிராக கிடைத்த வெற்றியாகவே கொள்ள முடிகின்றது. அசுரப்பலம் கொண்ட அடக்குமுறைக்கு எதிராக ஒரு தனி மனித முயற்சிபெற்ற சிறுவெற்றியாகவே கொள்ளலாம்.

இதில் இன்னொரு விடயமும் உண்டு. நீதியானதும் சுதந்திரமானதுமான ஒரு தேர்தலை அவாவி நிற்பதற்கான ஒரு குறியீடாகவே மஞ்சள் பட்டி அணிதல் நடைபெற்று வருகின்றது. சுசந்திகா அதனை அணிந்ததை அரசின் உத்தம மந்திரிகளாலும் அதன் டெயிலி நியூஸ் போன்ற ஊதுகுழல்களாலும் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.

ஒரு நீதியான தேர்தலைத்தான் அரசாலும் அதன் ஊதுகுழல்களாலும் தாங்கிக்கொள்ள முடிகின்றது இல்லை என்பதும் மட்டும் அல்ல அவ்வாறான ஒரு தேர்தலை அவாவும் மக்களைக்கூட அதனால் பொறுத்துக்கொள்ள முடிகின்றது இல்லை. இது தான் சந்திரிக்கா வளர்த்தெடுத்த ஜனநாயக பாரம்பரியம் போலும்....

– கா.சூ.த்ரன்

**தமிழ் இனி 2000**

மாநாட்டின் போது இடம்பெற்ற மைய நிகழ்வுகளோடு சமாந்தரமாக இடம்பெற்ற ஓர நிகழ்வுகள் இன்னும் சுவையானவை. இது பல்வகைப்பட்ட மன ஓட்டங்களையும், அதன் நிறப்பிரிகைகளையும் காட்டுவனவாக அமைந்தன. எனது பார்வைக்கு அகப்பட்டவற்றின் பதிவே இது. - மு.பொ.

அனுபவங்கள் - I




# தமிழினிக்கு எதிராக "மார்க்ஸ் கூட்டம் போடுவாரா?"

நாம் ஒகஸ்ட் 27ம் திகதி மாலை 5.30 மணியளவில் சென்னை விமான நிலையத்திற்கு வெளியே வந்த போது, வரவேற்கவும் நாம் தங்கும் இடமும் மாநாடு நிகழும் இடமுமான ஹொட்டல் அத்திலாந்திக்கு எம்மை அழைத்தச் செல்லவும் இருவர் நின்றிருந்தனர். காலச்சுவடு கண்ணன், அவர்களை அனுப்பி வைத்திருந்தார்.

நாங்கள் ஹோட்டலுக்கு வந்து சிலமணி நேரத்திற்குப் பின்னர் வெளியே சிலரின் குரல்கள் கேட்டன. எங்களைப் பார்க்கச் சிலர் வந்திருப்பது தெரிந்தது. நாங்கள் வெளியே போனபோது 'ஹ ஹா ஹா ' என்ற பெருஞ்சிரிப்போடு எமது நண்பரொருவர் - இலங்கையிலிருந்து போய் தற்போது சென்னையில் வசிப்பவர் - எங்களை வரவேற்றார்.

அவரது சிரிப்பையும், வரவேற்பையும் யாரும் பொருட்படுத்துவதாய் இல்லை. மாறாக, "நீ என்ன, (தமிழ் இனி அமர்வில்) கட்டுரை வாசிக்கப் போகிறாயா இல்லையா?" என்று வந்ததும் வராததுமாய் சரிநிகர் சிவா அவரை எந்தவித சுற்றிவளைப்புமின்றி நேரடியாகவே கேட்டான்.

நண்பர் தனக்கே உரிய பாணியில் இழுத்து இழுத்து பதிலளித்தார்: "இல்லை. நான் கட்டுரை வாசிப்பன் வாசிப்பன்.." அவர் பதில் இழுவுண்டது.

"என்ன வாசிப்பன் கீசிப்பன் உரமாய் சொல்லோய்" நான் பகிடியாக அதட்டினேன்.

"இல்ல மாஸ்ரர் நான் வாசிப்பன்" அவர் மீண்டும் அதே சுரத்துக்கெட்டபாணியில் கூறினார்.

எனக்கு சிரிப்பு வந்தது. நண்பர் நிறப்பிரிகைக்குழுவினர் பக்கம் சாய்வுடையவர் என்பது எனக்குத் தெரியும். தமிழினி 2000ல் இவர் கட்டுரை படிக்கப் போய் இவரது நண்பர்களான அ.மார்க்ஸ் கூட்டத்தினர் இவர் மேல் வைத்திருக்கும் நல்லபிப்பிராயத்திற்கு ஊறு விளைவிக்கலாமா என்பன போன்ற கேள்விகளால் அவர் மனம் அல்லாடுவது தெரிந்தது.

நான் அதற்குமேல் அவரது அசௌகரியத்தில் தூண்டில் போட விரும்பவில்லை. ஆனால், ஒன்று மட்டும் புரிந்தது. நான் ஏலவே நினைத்ததுபோல் தமிழினி 2000க்கு வேறொரு கருத்துநிலை நின்று எதிர்ப்பவர்கள் வெளிவருவார்கள் என்று. அதாவது 'பிராமணிய ஆதிக்கத்துக்கு முண்டு கொடுக்கும் தமிழினி 2000க்கு நாம் ஆதரவு தரப்போவதில்லை' என்கிற ஒரு கூட்டம்.

எங்கு போனாலும் இந்த இரண்டு பட்டு நிற்கும் போக்கு. இதுதான் இயங்கியலா?

ஈழத்தில் 'முற்போக்கு, நற்போக்கு' என்று அடிபட்டது போல் தமிழ் நாட்டிலும் இத்தகைய இரு கூறுபட்ட போக்குகளா? இல்லை, இரு கூறுபட்ட போக்குத் தான் என்றால் எவ்வளவோ ஆறுதலாய் இருக்கும். ஆனால், அங்கே பல்கூறுபட்ட போக்குகளும் பல்வகைக் குழுவாதங்களும் நிறப்பிரிகை அ.மார்க்ஸ் ஆகியோர் ஒரு குழு, பிரேம் ரமேஷ் இன்னொரு குழு, அவர்களோடு முரண்பட்ட சாருநிவேதிதா ஒரு குழு, எஸ்.வி.ஆர்., கீதா போன்றவர்கள் ஒரு குழு. தலித்தியத்துள் ராஜ் கௌதமன், ரவிக்குமார், அரசு, மங்கை ஆகியோர் ஒரு குழு, இன்னும் அம்பை, கீதா போன்றோரின் பெண்ணியம் ஒரு குழு. இவர்களையும் விடத் தீவிரமான தலித்பெண்ணியம் இன்னொரு குழு. இப்படிப் பல்வகைக் குழுக்களும் அவர்களிடையே நிலவும் ஆளுமைப் போட்டிகளும்! எவ்வாறாயினும் இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எஞ்சுவது இரண்டென்று தான் கூறவேண்டும்.

அதாவது பிராமணிய மேலாதிக்கத்தை நிறுவமுயலும் அணியொன்று கண்ணுக்குப் புலப்படாது தெரியும் நிழல் அமைப்பொன்றும், அதை எதிர்த்து நிற்கும் பற்பல தர வித்தியாசங்களைக் கொண்ட தலித்திய இடதுசாரி அமைப்புகளும்!

இந்த இரண்டு போக்குகளின் குணாம்சங்களே இன்றைய தமிழ் நாட்டு கலை இலக்கியப் படைப்புகளில் இழையோடுவதைக் காணலாம்.

0 0 0

31.08.00 மாலையே தமிழினி 2000 கலை இலக்கிய மாநாடு களை கட்டத் தொடங்கிற்று. அதற்குக் காரணம், காலச்சுவடுப் பதிப்பகத்தால் அச்சிடப்பட்டு வெளிக்கொணரப்பட்ட நூல் வெளியீட்டு விழாவே. நூல் வெளியீடு மாலை 5.30 மணியளவில் எழும்பூர் மியூசிய வளவின் உள்ளரங்கில் நடைபெற்றது. இரா.வெங்கடாசலபதியால் தொகுக்கப்பட்ட புதுமைப்பித்தனின் முழு ஆக்கங்களும் அடங்கிய தொகுப்பு, சுந்தரராமசாமியின் 'காகங்கள்' சிறுகதைத் தொகுப்பு, சுந்தரராமசாமியால் மொழிபெயர்க்கப்பட்ட தகழியின் தோட்டியின் மகன் நாவல், சேரனின், நூறுகவிதைகள் அடங்கிய 'நீ இப்பொழுது இறங்கும் ஆறு' கவிதைத் தொகுப்பு, சல்மா என்னும் முஸ்லிம் பெண் கவிஞரின் ஒரு மாலையும் இன்னொரு மாலையும்' கவிதைத் தொகுப்பு. ஆகிய நூல்கள் அங்கே வெளியிடப்பட்டன.

சுந்தரராமசாமியின் நூலை விமர்சித்த எஸ்.வி.ஆரின் விமர்சனமும், சேரனின் கவிதைகளை விமர்சித்த சுந்தரராமசாமியின் விமர்சனமும் நேர்த்தியாய் அமைந்திருந்தன.

சுந்தரராமசாமியின் கதைகளில் சமூகப் பார்வை பின்தள்ளப்பட்டு அழகியலுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டிருப்பதாக எஸ்.வி.ஆர். கூறிய போதும் சுந்தரராமசாமியின் படைப்பாற்றல் ஆளுமையை அவர் சந்தேகிக்கவில்லை. சமூக வரலாற்றுப் பார்வையை முன்வைத்து சுந்தரராசாமசாமி எழுதிய ஒரு புளியமரத்தின் கதையை எஸ்.வி.ஆர். ஏன் மறந்தார் என்ற கேள்வி எனக்குள் அப்போது எழுந்தது. ஆயினும், விமர்சனம் என்றால் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு அவரது பேச்சு ஒரு உதாரணமாக இருந்தது. மிகுந்த நடுநிலையான விமர்சனம் அது. சேரனின் கவிதைகள் பற்றி விமர்சித்த சுந்தரராமசாமி அவரின் ஆற்றலைப் பாராட்டினார். ஆயினும், இன்னும் சிலவற்றை அவர் கடக்க வேண்டும் என்று கூறினார். அவரின் கருத்துப்படி "ஒரு கலைஞன் பூரணமாக பழையவற்றை மறந்தால் தான் புதியவற்றைக் கண்டு பிடிக்கலாம். "ஒன்றின் இழப்பில் தான் புதியதொன்று தோன்றுகிறது" என்பதாகும். இது இங்கே வாசகரின் சிந்தனைக்கு விடப்படுகிறது.

புத்தக வெளியீட்டு அரங்கின் உள்ளேயும் வெளியேயும் கணிசமான அளவு கூட்டம் காணப்பட்டது. வெளியே காலச்சுவடு பதிப்பக நூல்களும், சஞ்சிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டு விற்பனையாகிக் கொண்டிருந்தன. எழுத்தாள நண்பர்கள் இருவர் மூவராகக் கூடி வெளியே கதைத்துக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கை நண்பர் மது அறிமுகப் படுத்திய பாண்டிச்சேரி இளைஞரான கண்ணன் என்பவரோடு கதைத்துக் கொண்டிருந்தேன். அவர் பிரெஞ்சு அறிஞர்களோடு சேர்ந்து தமிழ் இலக்கிய ஆக்கங்களை பிரெஞ்சுக்கு மொழி பெயர்ப்பவர். அப்போது அவரிடம் "ஈழத்து சமகாலப் படைப்புகளையும் நீங்கள் மொழிபெயர்த்தால் என்ன?" என்று கேட்டேன்.

"எனக்கும் அப்படிச் செய்ய ஆசை தான். ஆனால், எங்கே தொடங்குவது என்று தான் தெரியவில்லை. அப்படியான வேலைகளுக்கு வழிகாட்டுவதுபோல் நூல் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை" என்று அவர் கூறியதற்கு நான் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்த போது அங்கே ஒரு சலசலப்பு ஏற்பட்டது. இளைஞர் ஒருவர் துண்டுப்பிரசுரம் ஒன்றை விநியோகித்துக் கொண்டு வந்தார். எனக்கும் ஒன்று கிடைத்தது. அதைப் படித்தேன். "தமிழ் இனி 2000 என்கிற கும்மேளா" என்கிற தலைப்பில், தமிழ் இனிக்கு எதிராக நிறப்பிரிகை அ.மார்க்ஸ் கூட்டத்தினர் வெளியிட்டிருந்த அறிக்கை அது.

நான் அதை மேலோட்டமாகப் பார்த்துக் கொண்டிருந்த போது எனக்கு எதிரே நின்று இருவர் பின்வருமாறு கதைத்தனர்.

"நாளைக்கு மார்க்சும் ஒரு கூட்டம் ஒன்றை எழும்பூரில் வைக்கப் போவதாகக் கேள்வி"

"ஏன்?"

அவர் அப்படி வைத்தால் 'தமிழ் இனி 2000' க்கு வருவோரெல்லாம் அங்க தான் போவார்கள். இதற்கெதிரான பிரச்சாரமாக அது அமையும். எனக்கு இதைக் கேட்க வியப்பாக இருந்தது. மார்க்ஸ் கூட்டம் போடுவாரா?" எனக்குள் இந்தக் கேள்வி எழுந்தது.

(இன்னும் வரும்)

---

யாழ்:

# இவர்கள் பாராளுமன்றம் போய் என்ன பயன்?

யாழ்ப்பாணத்தில் இம்முறை என்றுமில்லாதவாறு இருபது கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகின்றன. வழமையான காங்கிரஸ், கூட்டணி, இடதுசாரிகள், ஆகியோருடன் ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறிக்கொள்ளும் தமிழ் இயக்கங்கள் இவர்களுடன் தீவிர சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகளான சிஹல உறுமய போலவே தேசியக் கட்சிகளும் தேர்தல் களத்தில் குதித்துள்ளன.

தற்போது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருமே நியமனப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு சில தினங்களுக்கு முன்னர் தான் விமான மூலம் யாழ்ப்பாணம் வந்தார்கள். அது வரையும் இவர்களெவரும் யாழ்ப்பாணப் பக்கம் தலைவைத்தும் படுக்கவில்லை. குடாநாட்டின் பட்டி தொட்டிகள் யாவும் வழமைபோல் தேர்தல் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன. இந்தச் சுவரொட்டிகளில் சிஹல உறுமயவின் தேர்தல் சுவரொட்டியும், காணப்படுகிறது. சிஹல உறுமயவின் சுவரொட்டிகள் தனிச்சிங்களத்திலேயே காணப்படுகின்றன. ஈ.பி.டி.பியினரும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் யாழ். நூல் நிலையம் எரிந்து கொண்டிருக்கும் படம், 1983 ஜூலைக்கலவரப்படம் கொண்ட சுவரொட்டிகளையும் ஒட்டியுள்ளன.

இம்முறை தேர்தல் கூட்டங்களெதுவும் இடம்பெறவில்லை. ஆங்காங்கே கருத்தரங்குகள் மட்டும் நடைபெற்று வருகின்றன. இணுவிலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு ஒன்று முன்னறிவித்தலின்றி திடீரென நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்த பொது மக்களை விட பாதுகாப்புக்கு வந்த பொலிசாரின் எண்ணிக்கையே அதிகம்.

மினிபஸ்கள், டாக்சிகள் மூலம் ஒலிபெருக்கிப் பிரச்சாரம் நடைபெற்று வருகிறது. 'நமது வெற்றியை நாளைய சரித்திரம் சொல்லும்' போன்ற வீராவேசாப் பாடல்களுடனேயே ஒலி பெருக்கிப் பிரசாரம் நடைபெற்று வருகிறது. இவர்கள் ஒட்டும் சுவரொட்டிகளுக்கு கழிவு ஒயில் பூசும் வேலையும் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் திருமணத்திற்காக வர்ணம் பூசப்பட்ட மதில்களையெல்லாம் கறுப்பாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருபது கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டாலும் கூட்டணிக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் இடையே தான் கடும் போட்டி நிலவி வருகிறது. இருவரும் மாறி மாறி அறிக்கையைப் போரில் ஈடுபட்டு வருகின்றனர். போதாததற்கு மிரட்டல் போரிலும் ஈடுபடுவதுண்டு.

பலாலியிலிருந்து ஒலிப்பரப்பாகும் இலங்கை வானொலியின் யாழ் சேவை குடாநாட்டுச் செய்திகள் என்ற பெயரில் இரவு 9.10மணிக்கு செய்தி அறிக்கையொன்றை ஒலிபரப்பி வருகிறது. இந்த செய்தி அறிக்கை ஒலிபரப்பு கடந்த மாதம் தான் ஆரம்பிக்கப்பட்டது. இச்செய்தி அறிக்கையில் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் பிரச்சினை சம்பளப் பிரச்சினை குறித்து டக்ளஸ் தேவானந்தா அமைச்சருடன் பேச்சுவார்த்தை, கடற்றொழிலாளர்களின் பிரச்சினை குறித்து டக்ளஸ் தேவானந்தா படைத் தளபதியுடன் கலந்துரையாடல் போன்ற செய்திகளோ இடம்பெற்று வருகின்றன. இதை குநடாநாட்டுச் செய்திகள் என்று சொல்வதை விட டக்ளசின் அன்றாட நடவடிக்கைகள் குறித்த ஒரு வர்ணனை என்று குறிப்பிட்டால் நன்றாக இருக்கும் என யாழ் மாநாகர பிரதி முதல்வர் ரவிராஜ் கூறியுள்ளார். இதில் உண்மை இல்லாமல் இல்லை.

தினமும் 500 பேர் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தன்னிடம் வந்து போவதாக டக்ளஸ் தெரிவிக்கிறார்.

தீவுப்பகுதியை ஈ.பி.டி.பி. தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் தம்மால் அங்கு சென்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட முடியவில்லை என ஏனைய கட்சிகளனைத்தும் ஈ.பி.டி.பி. மீது குற்றம் சாட்டியுள்ளன. அதிலும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு சுயேற்சைக்குழுவினரிடமிருந்து ஜனாதிபதியின் சுவரொட்டிகளைப் பறித்து எரித்ததாக சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் தெரிவித்திருப்பது தான் வேடிக்கை.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் தேர்தல் பிரச்சாரத்திலீடுபட்டு வந்தாலும் மக்கள் தேர்தலில் பெரிதாக அக்கறை செலுத்தவில்லை. தென்மராட்சிப் பகுதியில் தினமும் மிக், சுப்பசோனிக் விமானங்கள் குண்டு வீசுகின்றன. அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் உலங்கு வானூர்தித் தாக்குதல் ஊரெழு, கோப்பாய், வல்லை, தெல்லிப்பழை போன்ற இடங்களிலிருந்து இடையறாது மல்ரிபரல் வீச்சு இவற்றுக்கு மத்தியில் தேர்தலுக்கு முன்னர் எங்கே அடுத்த தாக்குதல் ஆரம்பமாகிறதோ தெரியாது. எங்கே ஓடுவது என்ற நிலையில் மக்கள் தற்போது வரணி, கொடிகாமம் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏனைய வலிகாமம் பகுதி மக்களும் வலிகாமம் மேற்குப்பகுதியில் வீடுதேடுவதிலும் யாழ் நகரை அண்டிய பகுதிகளிலும் பருத்தித்துறை வீதியிலுமிருந்து பொருட்களை அப்புறப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் பாராளுமன்றம் போய் என்ன பயன் என்கிறார் சாவகச்சேரி வாசி ஒருவர். நாங்கள் சாவகச்சேரியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த போது படையினர் எம்மை வடமராட்சிக்குள் நுழையவிடாமல் கொளுத்தும் வெயிலில் தடுத்து வைத்திருந்த போது இவர்களெவரும் எட்டியும் பார்க்கவில்லை. அத்துடன் இவ்வாறு படையினர் செய்வதைத் தடுக்கவும் இவர்களால் முடியாது. இப்போது தேர்தலுக்காக வாக்குப் பொறுக்குவதற்காக கொடிகாமத்திலிருந்து வருபவர்களுக்கு பணிஸ் வழங்குகின்றனர் என்றார்.

தேர்தலைப் புலிகள் அல்லது சங்கிலியன் படையினர் குழப்புவார்களா? தேர்தலுக்கு முன்னர் குடாநாட்டில் பாரிய தாக்குதலைப் புலிகள் மேற்கொள்வார்களா? தேர்தல் ஒழுங்காக நடைபெறுமா என்பது யாரும் எதிர்வு கூற முடியாத கேள்விகள்.

- எழுவான்

இந்தியாவைச் சேர்ந்த எழுத்தாளரும். விமர்சகரும். பெண்நிலைவாதியுமான அம்பையின் ''காட்டில் ஒரு மான்' சிறுகதைத் தொகுதி காலச்சுவடு பதிப்பகத்தாரினால் அண்மையில் வெளியிடப்பட்டது.



அம்பை என்று அழைக்கப்படும் லக்ஷ்மி அறுபதுகளின் பிற்பகுதியில் இருந்து இயங்கிவரும் ஒரு படைப்பாளி. இவரது சிறகுகள் முறியும் (1976). வீட்டின் மூலையில் ஒரு சமையலறை (1988) ஆகிய சிறுகதைத் தொகுதிகள் ஏற்கெனவே வெளிவந்துள்ளன.

இவர் தமிழ் இலக்கியத்தில் பெண்கள் பற்றிய ஒரு ஆராய்ச்சி நூலையும் (Face Behind the Mask , 1984) எழுதியிருக்கிறார். அத்துடன் பெண்கள் பற்றிய ஆய்வுக்கான ஆவண மையத்தின் (Sound and Picture Archives for Research On Women) இயக்குனராகவும் உள்ளார்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் எழுதிய 17 சிறுகதைகளை உள்ளடக்கி இத்தொகுதி வெளிவந்துள்ளது. இவற்றுள் ஒரு சிறுகதையினைத் தவிர மற்றவை எல்லாமே பல்வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்தவையே.

அம்பையின் சிறுகதைகள் இந்தியச் தமிழ்ச் சூழலில் கலாபூ ர்வமானதாகவும். பெண்நிலை நோக்குக் கொண்ட சிறுகதைகளாகவும் உதாரணம் கொள்ளப்படுகின்றன. உணர்வோட்டத்திற்கும். பாத்திரங்களிற்கும் உயிர்ப்பைக் கொடுக்கக் கூடியது இவரது எழுத்து.

''காட்டில் ஒரு மான்' 'கதா' பரிசினைப் பெற்ற சிறுகதையாகும். இத்தொகுப்பிலிருந்து இச்சிறுகதை வாசகர்களுக்காக தரப்படுகின்றது.

# காட்டில் ஒரு மான்

அந்த இரவுகளை மறப்பது கடினம். கதை கேட்ட இரவுகள். தங்கம் அத்தை தான் கதை சொல்வாள். காக்கா - நரி, முயல் - ஆமை கதைகள் இல்லை. அவளே இட்டுக்கட்டியவை. கவிதைத்துண்டுகள் போல சில. முடிவில்லா பாட்டுகள் போல சில. ஆரம்பம், நடு, முடிவு என்றில்லாமல் பலவாறு விரியும் கதைகள். சில சமயம், இரவுகளில் பல தோற்றங்களை மனதில் உண்டாக்கி விடுவாள். அசுரர்கள், கடவுளர்கள் கூட அவள் கதைகளில் மாறி விடுவார்கள். மந்தரையைப் பற்றி உருக்கமாகச் சொல்வாள். சூர்ப்பனகை, தாடகை எல்லோரும் அரக்கிகளாக இல்லாமல், உணர்ச்சிகளும், உத்வேகங்களும் கொண்டவர்களாக உருமாறுவார்கள். காப்பியங்களின் பக்கங்களில் ஒண்டிக் கொண்டவர்களை வெளியே கொண்டு வருவாள். சிறகொடிந்த பறவையை வருடும் இதத்தோடு, அவர்களை வரைவாள் வார்த்தைகளில். இரவு நேரமா, அந்தப் பழைய வீட்டுக் கூடமா, கூடப்படுத்த சித்தி மாமா குழந்தைகளின் நெருக்கமா என்னவென்று தெரியவில்லை. அந்தக் கதைகள் வண்டின் ரீங்காரமாய் மனதின் ஒரு மூலையில் ஒலியுடன் சுழன்றவாறிருக்கின்றன. தங்கம் அத்தை அந்தப் பழைய தூண்களும் நடுக்கூடமும் உள்ள வீட்டில் பல பிம்பங்களில் தெரிகிறாள். பெரிய மரக்கதவின் மேல் சாய்ந்தவாறு அகல் விளக்கை புடவைத் தலைப்பால் மறைத்தபடி ஏந்தி வந்து புறையில் வைத்தபடி, தன் கணவன் ஏகாம்பரத்துக்குச் சோறிட்டவாறு, கிணற்றுச் சுவரில் ஒரு காலை வைத்து கயிற்றை இழுத்துக்கொண்டு செடிகளுக்கு உரமிட்டவாறு.

தங்கம் அத்தை அழகுக் கறுப்பு. நீவிவிட்டாற்போல் ஒரு சுருக்கமும் இல்லாத முகம். முடியில் நிறைய வெள்ளி. அத்தை வீட்டில் காலால் அழுத்தி இயக்கும் அந்த கால ஹார்மோனியம் உண்டு.

அத்தை தான் வாசிப்பாள். தேவாரப் பாடல்களிலிருந்து வதனமே சந்திர பிம்பமோ, வண்ணான் வந்தானே வரை மெல்லப் பாடியவாறு வாசிப்பாள். கறுப்பு அலகுகள் போல் நீள்விரல்கள் ஹார்மோனியக் கட்டைகளின் மேல் கறுத்தப்பட்டாம் பூச்சிகள் மாதிரிப் பறக்கும்.

தங்கம் அத்தையைச் சுற்றி



ஒரு மர்மஒடு இருந்தது. மற்றவர்கள் அவளைப் பார்க்கும் கனிவிலும், அவளைத் தடவித் தருவதிலும், ஈரம் கசியும் கண்களிலும் அனுதாபம் இருந்தது. ஏகாம்பர மாமாவுக்கு இன்னொரு மனைவியும் இருந்தாள். அத்தையை அவர் பூ மாதிரி அணுகுவார்.

அவர் அத்தையை 'டீ' போட்டு விளித்து யாரும் கேட்டதில்லை. 'தங்கம்மா' என்று கூப்பிடுவார்.

அப்படியும் அத்தை ஒரு புகைத்திரைக்குப்பின் தூர நிற்பவள் போல் தென்பட்டாள். முத்து மாமாவின் பெண் வள்ளி தான் இந்த மர்மத்தை உடைத்தாள். அவள் கண்டுபிடித்தது புரிந்தும் புரியாமலும் இருந்தது. வள்ளியின் அம்மாவின் கூற்றுப்படி அத்தை பூக்கவே இல்லையாம். "அப்படீன்னா?" என்று எங்களில் பலர் கேட்டோம்.

வள்ளி தாவணி போட்டவள், "அப்படீன்னா அவங்க பெரியவளே ஆகலை" என்றாள்.

"முடியெல்லாம் நெறய வெளுத்திருக்கே?"

"அது வேற"

அதன்பின் அத்தையின் உடம்பைஉற்றுக் கவனித்தோம்.'பூக்காத' உடம்பு எப்படி இருக்கும் என்று ஆராய்ந்தோம்.

அவள் உடம்பு எவ்வகையில் பூரணமடையவில்லை என்று தெரியவில்லை. ஈரத்துணியுடன் அத்தை குளித்துவிட்டு வரும்போது அவள் எல்லோரையும் போலத்தான் தெரிந்தாள்.

முடிச்சிட்டச் சிவப்பு ரவிக்கையும், பச்சைப் புடவையும் முடிந்த தலையுமாய் அவள் நிற்கும் போது அவள் தோற்றம் வித்தியாசமாகத் தெரியவில்லை.

வள்ளியின் அம்மா வள்ளியிடம், "அது வெறும் பொக்கை உடம்பு" என்றிருந்தாள். பொக்கை எங்கே என்று தெரியவில்லை. பறவையின் உடைந்த சிறகுபோல், அது வெளிப்படையாகத் தெரியாத பொக்கையா என்று புரியவில்லை.

ஒரு மாலை பட்டுப்போன ஒரு பெரிய மரத்தைத் தோட்டத்தில் வெட்டினார்கள். கோடாலியின் கடைசி வெட்டில் அது சரசரவென்று இலைகளின் ஒலியோடு மளுக்கென்று சாய்ந்தது.

குறுக்கே வெட்டிய போது உள்ளே வெறும் ஓட்டை. வள்ளி இடுப்பில் இடித்து, "அதுதான் பொக்கை" என்றாள். பிளவுபட்டு தன்னை முழுவதுமாய் வெளிப்படுத்திக் கொண்டு, உள்ளே ஒன்றுமில்லாமல் வான் நோக்கிக் கிடந்த மரத்துடன் அத்தையின் மினுக்கும் கரிய மேனியை ஒப்பிட முடியவில்லை. எந்த ரகசியத்தை அந்த மேனி ஒளித்திருந்தது? அவள் உடம்பு எவ்வகையில் வித்தியாசப்பட்டது? வெய்யில் காலத்தில் அத்தை மத்தியான வேளைகளில் ரவிக்கையைக் கழற்றி விட்டு , சாமான்கள் வைக்கும் அறையில் படுப்பாள். அவளருகில் போய்ப்படுத்து, ரவிக்கையின் இறுக்கத்தினின்றும், விடுபட்ட மார்பில் தலையை வைத்து ஒண்டிக் கொள்ளும் போது அவள் மென்மையாக அணைத்துக் கொள்வாள்.

மார்பு, இடை, கரங்களில் பத்திரப்பட்டுப் போகும் போது எது பொக்கை என்று புரியவில்லை. மிதமான சூட்டுடம்பு அவளுடையது. ரசங்கள் ஊறும் உடம்புடையவளாகப் பட்டாள். சாறு கனியும் பழத்தைப் போல் ஒரு ஜீவ ஊற்று ஓடியது அவள் உடம்பில். அதன் உயிர்ப்பிக்கும் துளிகள் எங்கள் மேனியில் பலமுறை சொட்டியது. தொடலில், வருடலில், எண்ணெய் தேய்க்கும் போது படும் அழுத்தத்தில் அவள் உடம்பிலிருந்து கரை புரண்டு வரும் ஆற்றைப் போல் உயிர்வேகம் தாக்கியது. அவள் கை பட்டால் தான் மாட்டுக்குப் பால் சுரந்தது. அவள் நட்ட விதைகள் முளைவிட்டன. அவளுடைய கை ராசியானது என்பாள் அம்மா. தங்கச்சி பிறந்த போது அத்தை வந்திருந்தாள்.

"அக்கா, என் பக்கத்துல இருக்கா. என்னைத் தொட்டுக்கிட்டே இரு. அப்பத்தான் எனக்கு வலி தெரியாது" என்று அம்மா முனகினாள். அறையை விட்டு நாங்கள் வெளியேற்றப்பட்ட போது கதவருகே வந்து திரும்பிப்பார்த்த போது தங்கம் அத்தை அம்மாவின் உப்பிய வயிற்றை மெல்ல வருடியபடி இருந்தாள்.

"ஒன்றும் ஆகாது பயப்படாதே" என்று மெல்லக் கூறினாள்.

"அடியக்கா, ஒனக்கொரு..." என்று முடிக்காமல் விம்மினாள் அம்மா.

"எனக்கென்ன? ராசாத்தியாட்டம். என் வீடெல்லாம் புள்ளைங்க" என்றாள் அத்தை. ஏகாம்பர மாமாவின் இளைய மனைவிக்கு ஏழு குழந்தைகள்.

"இப்படி ஒடம்பு திறக்காம..." என்று மேலும் விசும்பினாள் அம்மா.

"ஏன் என் ஒடம்புக்கு என்ன? வேளாவேளைக்குப் பசியில்லையா? தூக்கமில்லையா? எல்லா ஒடம்புக்கும் உள்ள சீரு இதுக்கும் இருக்குது. அடி பட்டா வலிக்குது. ரத்தம் கட்டுது. புண்ணு பழுத்தா சீ வடியுது. சோறு தின்னா செரிக்குது. வேற என்ன வேணும்?" என்றாள் அத்தை.

அம்மா அவள் கையைப் பற்றிக் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

"ஒன் ஒடம்பைப் போட்டு ரணகளமாக்கி..." என்று அந்தக் கையைப் பற்றியவாறு அரற்றினாள்.

அத்தையின் உடம்பில் ஏற்றாத மருந்தில்லை என்று வள்ளியின் அம்மா வள்ளியிடம் சொல்லியிருந்தாள். ஊரில் எந்தப் புது வைத்தியன் வந்தாலும் அவன் குழைத்த மருந்து அத்தைக்கு உண்டு. இங்கிலீஸ் வைத்தியமும் அத்தைக்குச் செய்தார்களாம். சில சமயம் மருந்துகளைச் சாப்பிட்டுவிட்டு அத்தை அப்படி ஒரு தூக்கம் தூங்குவாளாம். வேப்பிலையும், உடுக்குமாய் சில மாதங்கள் பூசைகள் செய்தார்களாம். திடீரென்று பயந்தால் ஏதாவது மாற்றம் நேரலாம் என்ற அவர்கள் திட்டப்படி ஒரு முன்னிரவு நேரம் அத்தை பின்பக்கம் போனபோது கரிய போர்வை போர்த்திய உருவம் ஒன்று அவள் மேல் பாய்ந்ததாம்.

வீரிட்ட அத்தை துணி துவைக்கும் கல்லில் தலை இடிக்க விழுந்து விட்டாளாம். அவள் நெற்றி முனையில் இன்னமும் அதன் வடு இருந்தது. அடுத்த வைத்தியன் வந்தபோது, "என்னை விட்டுடுங்க. என்னை விட்டுடுங்க" என்று கதறினாளாம் அத்தை. ஏகாம்பர மாமாவுக்கு வேறு பெண்பார்த்த போது அத்தை அன்றிரவு அரளி விதைகளை அரைத்துக் குடித்து விட்டாளாம். முறி மருந்து தந்து எப்படியோ பிழைக்க வைத்தார்களாம். "உன் மனசு நோக எனக்கெதுவும் வேண்டாம்" என்று மாமா கண் கலங்கினாராம்.

அதன்பின் அத்தையே அவருக்கு ஒரு பெண்ணைப் பார்த்தாள். அப்படித்தான் செங்கமலம் அந்த வீட்டுக்கு வந்தாள். எல்லாம் வள்ளி சேகரித்த தகவல்கள்.

அத்தை தன் கையை அம்மாவின் பிடியிலிருந்து விலக்காமல் இன்னொரு கையால் அம்மாவின் தலையை வருடினாள்.

"வுடு. வுடு எல்லாத்தையும் வுடு. புள்ள பொறக்கற நேரத்துல ஏன் என் கதையை எடுக்கற?" என்றாள். அன்றிரவு தான் தங்கச்சி பிறந்தாள். அதன்பின் ஊருக்கு

ஒரு முறை போனபோது தான் அத்தை அந்தக் கதையைச் சொன்னாள்.

மழைக்காலம். இரவு நேரம். கூடத்தின் ஒரு பக்கம் ஜமக்காளத்தை விரித்து எண்ணெய்த் தலை பட்டு, கறை படிந்த உறைகளோடு இருந்த சில தலையணைகளைப் போட்டாகி விட்டது. சில தலையணைகளுக்கு உறை இல்லை. அழுத்தமான வண்ணங்கள் கூடிய கெட்டித்துணியில் பஞ்சு அடைத்திருந்தது. அங்கங்கே பஞ்சு முடிச்சிட்டுக் கொண்டிருந்தது. அவை நிதம் உபயோகத்திலிருக்கும் தலையணைகள் அல்ல. விருந்தினர் வந்தால் குழந்தைகளுக்குத் தர அவை. நாள் முழுவதும் விளையாடிவிட்டு, வயிறு முட்டச் சாப்பிட்டுவிட்டுப் படுத்தவுடன் உறங்கிவிடும் குழந்தைகளுக்கு முடிச்சுக்கள் உறைக்காவா போகிறது? சமையலறை அலம்பிவிடும் ஓசை கேட்டது. சொம்பின் ணங்கென்ற சத்தமும், கதவின் கிரீச்சும், தென்னந்துடைப்பம் அதன் பின்னால் வைக்கப்படும் சொத்தென்ற ஒலியும் கேட்டது. தகர டப்பா கிரீச்சிட்டது. கோலப் பொடி



டப்பா அடுப்பில் கோலம் ஏறும். அதன் பின் சமையலறைக் கதவை அடைத்து விட்டுக் கூடத்தின் வழியாகத் தான் அத்தை வருவாள். யாரும் தூங்கவில்லை. காத்திருந்தனர்.

அத்தை அருகில் வந்ததும், சோமுதான் ஆரம்பித்தான். "அத்தே, கதை சொல்லேன்... அத்தே."

"தூங்கல நீங்கல்லாம்?"

நின்று பார்த்துவிட்டு அருகில் வந்து அமர்ந்தாள். காமாட்சியும் சோமுவும் மெல்ல ஊர்ந்து வந்து அவளின் இருதொடைகளிலும் தலை வைத்துப் படுத்து அண்ணாந்து அவளைப் பார்த்தனர். மற்றவர்கள் தலையணைகளில் கைகளை ஊன்றிக் கொண்டனர்.

அத்தை களைத்திருந்தாள். நெற்றியில் வியர்வை மின்னியது. கண்களை மூடிக்கொண்டு யோசித்தாள்.

"அது ஒரு பெரிய காடு..." என்று ஆரம்பித்தாள்.

"அந்தக் காட்டுல எல்லா மிருகங்களும் சந்தோசமா இருந்தது. காட்டுல பழ மரமெல்லாம் நெறய இருந்தது. ஒரு சின்ன ஆறு ஓடிச்சு ஒரு பக்கம். தாகம் எடுத்திச்சின்னா அங்க போய் எல்லாம் தண்ணி குடிக்கும். மிருகங்களுக்கு எல்லாம் என்னவெல்லாம் வேணுமோ எல்லாம் அந்தக் காட்டுல சரியா இருந்தது. அந்தக் காட்டுல வேடன் பயமே இல்லை. திடீர்னுட்டு அம்பு குத்துமோ, உசிரு போகுமோன்னு பயமே இல்லாம திரிஞ்சிச்சு அந்த மிருகங்க எல்லாம்.

எல்லாக் காடு மாதிரியும் அங்கயும் காட்டுத் தீ, வெளி மனுசங்க வந்து மரம் வெட்டறது, பழம் பறிக்கிறது, திடீர்னு ஒரு ஆளுவந்து பட்சிங்களே சுடறது, ஓடற பன்னியை அடிக்கறது அதெல்லாம் இல்லாம இல்ல. இருந்தாலும், அங்க இருந்த மிருகங்களுக்கும், பட்சிகளுக்கும் பழகிப்போன காடு அது. ஆந்தை எந்த மரத்துல உக்காரும், ராத்திரி சத்தமே இல்லாம காடு கெடக்கறபோது எப்படி அது சத்தும்,

எந்தக் கல்லு மேல உக்காந்துக்கிட்டுத் தவளை திடீர்னுட்டுக் களகளன்னு தண்ணி குடிக்கிற மாதிரி சத்தம் போடும். எந்த இடத்துல மயில் ஆடும் எல்லாம் தெரிஞ்சுப்போன காடு.

இப்படி இருக்கறப்போ ஒரு மான் கூட்டம் ஒரு நா தண்ணி குடிக்கப் போச்சுது. அதுல ஒரு மான் தண்ணி வழியா போனப்போ விலகிப் போயிடுச்சு. திடீர்னு அது வேற காட்டுல இருந்திச்சு.

பாதையெல்லாம் இல்லாத காடு. மரங்கள்லயெல்லாம் அம்பு பாய்ஞ்ச குறி இருந்தது. அந்தக் காட்டுல ஒரு அருவி ஜோன்னு கொட்டிச்சு. யாருமே இல்லாத காடு மாதிரி விறிச்சோன்னுட்டு இருந்தது. மானுக்கு ஒடம்பு வெடவெடன்னுட்டு நடுங்கிச்சு. இங்கயும் அங்கயும் அது ஓடிச்சு. அந்தப் பழகின காடு மாதிரி இது இல்லயேன்னுட்டு அலறிட்டே துள்ளித்துள்ளி காடெல்லாம் திரிஞ்சிச்சு. ராத்திரி ஆச்சுது.

மானுக்குப் பயம் தாங்கல. அருவிச் சத்தம் அதைப் பயமுறுத்திச்சு. தூரத்துல ஒரு வேடன் நெருப்பை மூட்டி அவன் அடிச்ச மிருகத்தைச் சுட்டுத் தின்னுட்டிருந்தான். அந்த நெருப்புப் பொறி மான் கண்ணுக்குப் பட்டுது. அது ஒளிஞ்சுக்கிட்டுது. தனியா காட்டைச் சுத்திச் சுத்தி வந்து களைச்சுப்போயி அது உக்காந்துகிட்டது.

இப்படி நெறய நாளு அது திரிஞ்சுது. ஒரு நா ராத்திரி பௌர்ணமி.

நெலா வெளிச்சம் காட்டுல அடிச்சுது. அருவி நெலா வெளிச்சத்தைப் பூசிக்கிட்டு வேற மாதிரி ரூபத்துல இருந்திச்சு. பயமுறுத்தாத ரூபம். நெலா வெளிச்சம் மொத்துமொத்துனுட்டு எல்லாத்தையும் தொட்டுது. திடீர்னுட்டு மந்திரக்கோல் பட்ட மாதிரி அந்த மானுக்குப் பயமெல்லாம் போயிடுச்சு.

அந்தக் காடு அதுக்குப் பிடிச்சுப் போயிடுச்சு. காட்டோட மூலைமுடுக்கெல்லாம் அதுக்குப் புரிஞ்சு போயிட்டுது. வேற காடா இருந்தாலும், இந்தக் காட்டுலயும் அருவி இருந்திச்சு. மரம் செடி எல்லாம் இருந்திச்சு. மொள்ள மொள்ள மிருகங்க, பட்சி எல்லாம் அது கண்ணுல பட்டுது. தேன் கூடு மரத்துல தொங்கறது தெரிஞ்சிச்சு. நல்ல பச்சப் பசேல்னுட்டு புல்லு தெரிஞ்சுச்சு. அந்தப்புதுக்காட்டோட ரகசியம் எல்லாம் அந்த மானுக்குப் புரிஞ்சிடுச்சு. அதுக்கப்புறமா, பயமில்லாம அந்த மானு அந்தக் காடெல்லாம் சுத்திச்சு. பயமெல்லாம் போயி சாந்தமா போயிடுச்சு."

கதையை முடித்தாள் அத்தை. கூடத்தின் மற்றப் பகுதிகள் இருண்டிருந்தன. இந்தப் பகுதியில் மட்டும்தான் வெளிச்சம். இருண்ட பகுதியைக் காடாய்க் கற்பனை செய்து, கதை கேட்ட குழந்தைகள், அந்த மானுடன் தோழமை பூண்டு முடிவில் சாந்தப்பட்டுப் போயினர். தலையணைகளை அணைத்து உறங்கிப் போயினர். நீலமும், மஞ்சளும், கறுப்பும் கலந்த முரட்டுத்துணித் தலையணையில் சாய்ந்து, ஒற்றைக் கண்ணைத் திறந்து, உறக்கக் கலக்கத்தில் பார்த்த போது எங்கள் நடுவே இரு கைகளையும் மார்பின் மேல் குறுக்காகப் போட்டுத் தன் தோள்களை அணைத்தவாறு முட்டியின்மேல் சாய்ந்து கொண்டு தங்கம் அத்தை உட்கார்ந்திருந்தாள்.

அம்பை

# வருகை!

அதோ வருகிறார்கள்
தங்கள்
கோவணங்களைக் கழட்டி
முகங்களை மூடி
கைகளை ஏந்தியபடி
அதோ வருகிறார்கள்
உற்றுப் பாருங்கள்
உந்தக் கைகளில் தான்
ஒடுகிறது
அவசரகாலச் சட்டத்தின்
ஆயுள் ரேகை

எங்கள்
மந்த புத்தியிலும்
மறதியிலும் தான்
எத்தனை நம்பிக்கை
உந்தக் கைகளிற்கு

எங்கள் வாக்குகளின்றியே
எங்கள் பிரதிநிதிகளாய்
இத்தனை காலமும்
ஏப்பம்விட விட்ட
நன்றியும் மறந்து

இறைச்சியைத் தின்றுவிட்டு
எலும்புகளை இப்போ
எமக்காய் எறிகின்றார்
அதுவும்,
மீண்டும் அவர்கள்
இறைச்சி தின்பதற்காக.

அங்காடி நாய்களாய்
நாங்கள் அலைகையில்
வளர்ப்பு நாய்களாய்
வாலை ஆட்டி
காலை நக்கி
அதரவு கொடுத்து விட்டு
இன்று
ஓநாய்களாய் அழுகிறார்
ஆடுகள் நாம் நனைகிறோமென்று.

விரல்களிற்கு விலங்கிட்டுவிட்டு
வீணைகொண்டு வருகின்றார்....
விமானக்குண்டு எறிகணைக்கு
இரையாகி போய்விட்ட
எம்மவரை எரிப்பதற்கு
விறகாக்கிக் கொள்வதற்கோ

எம் குலத்து மங்கையரின்
பொட்டுகளை அழித்துவிட்டு
பூக்கொண்டு வருகின்றார்...
என்ன
மலர்வளையம் வைப்பதற்கோ

சூரியோதயம் காட்டுவதாய்
சூளுரைத்து வருகின்றார்....
அஸ்தமித்த உயிர்களிற்கு
அந்தியேட்டி செய்வதற்கோ

கப்பலையே மூழ்கடித்து
நங்கூரமிட வருகின்றார்....
மண்ணிற்குள் புதையுண்ட
மனிதர்கள் எழுந்திடாமல்
நங்கூரமிடுவதற்கோ

விழிகளைப் பிடுங்கிவிட்டு
வெளிச்சவீடு காட்டுவதற்கு
விரைந்தே வருகின்றார்
இடம்பெயரும் எம்மவர்க்கு
இடம்காட்டி உதவுவதற்கோ

அமைதிப்படையுடன் கூடி
அட்டகாசம் பல புரிந்து
அஞ்ஞாத வாசம் சென்று
ஆண்டியாய் வந்து நிற்கும்
அரசனும் வருகிறான்.


பெரியபிள்ளை பிடிக்கின்ற
வாகனத்தில் வந்து
விரட்டி விரட்டி
வேண்டாத தொல்லைதந்து
நட்டநடு வீதிகளில்
துடிதுடிக்க
சுட்டுக் கொன்ற
அப்பாவி மனிதர்களின்
ஆவிகள் உலவுகின்ற
வீதிகளில் வருகிறான்.

வரட்டும்
எல்லோரும்
வரட்டும்
எங்கள் இதயங்களில்
மிதித்துச் சென்ற
அவர்களின்
பாதங்களின் சுவடுகள்
பதில் சொல்லும்.

— பனையடிப்பாடகன்

*ஈழத்துத் தமிழ்ச் சூழலில் நவீன ஓவியம் குறித்த பிரக்ஞையைக் கொண்டு வந்தவர்களுள் முதன்மையானவரான ஓவியர் மாற்கு அவர்கள் செப்.26ம் திகதி மன்னாரில் காலமானார்.*

*1933இல் குருநகரில் பிறந்த மாற்கு அவர்கள் ஓவியம், சிற்பம் ஆகிய துறைகளில் தீவிர அக்கறையுடனும் செயற்பட்டு வந்தவர். ஈழத்தில் இத்துறைகளுக்கான அவரது பணி ஈடு செய்ய முடியாதது. அவரது நினைவாக இக்குறிப்பு இங்கு பிரசுரமாகின்றது.*



# ஓவியர் மாற்கு : புதிய உலகைக் காட்டிய கலைஞன்!

இது நடந்தது 1976களில். -மார்க் மாஸ்டரிடம் முதன்முதல் ஓவியம் பயிலச் சென்றபோது-! எங்கே ஒரு படம் வரையும் பார்ப்போம் என்றார்.

வீடு, முற்றம், பூந்தோட்டம், பிள்ளை விளையாடுதல், அம்மா வெளியில் நிற்றல்... என வரைந்தேன்.

'அச்சா நல்லாயிருக்கு'- (இப்படித் தான் அவர் எல்லோருக்கும் சொல்வார் - பெரும்பாலும்)

கர்நாடக இசையை கவின்கலைப் பாடமாகப் பயின்ற எனக்கு - ஓவியத்தை - அதில் ஆர்வம் இருந்தமையால் மார்க் மாஸ்டரிடம் பயிலக் கிடைத்தமை, வாழ்வில் நல்ல அனுபவமாகவே அமைந்தது. மார்க் மாஸ்டர் - எனது படத்தைப் பார்த்து விட்டு- "முதலில் மனித உருவம் கீறுவோம்' என்று வரைய ('கிறுக்க')த் தொடங்கினார்.



மனிதத் தலையை வரைந்து பகுதிகளாகப் பிரித்தார். ஒரே கோடுகள் தான்!

அவருடைய மனிதன் எனக்குச் சிரிப்பைத் தந்தான். வீட்டில் காட்டிய போது- "இவர் என்ன பேய்க்காட்டுகிறாரோ" என எனது உறவுக்காரர் ஒருவர் சொன்னது ஞாபகம்.

எனது பெற்றோருக்கு இதனை - உள்வாங்கக்கூடியதாக இருந்தது.

ஏனெனில் அவர்கள் முன்பு சிங்களப் பிரதேசத்துடன் ஊடாட்டம் கொண்ட பண்டாரவளையில் படிப்பித்தவர்கள்.

-மார்க் மாஸ்டரின் ஓவியம் அப்போது தமிழ் பகுதிகளுக்குப் புதுசு தான்.

ஏன் அவர் எழுதிய 'தேடலும் படைப்புலகமும்' என்ற எழுத்து வடிவத்தை - அதை உருவாக்கியவேளை எம்மில் பலரால் உள்வாங்க முடியவில்லை.

இப்போது அந்த எழுத்து வடிவத்தை - நாம் ரசிக்கிறோம், திரும்பத் திரும்பப் பார்த்து...!

நாங்கள் அவரிடம் பயில நுழைந்த போது கிறுக்கல்களாக இருந்தவை- பயின்று வெளியேறும் போது - ரசித்து விளங்கத் தூண்டும் கலானுபவங்களின் பதிவுகளாக இருந்தன!

அல்வாய்க் கடற்கரையில் அவருடன் - சிப்பியும் சங்கும் முருகைக் கல்லும் பொறுக்கியது.

அவற்றில் இயேசுநாதரும், சூசையப்பரும், தேவமாதாவும், சம்மனசுகளும் செய்து திக்கத்துச் சிப்பிகளை பெத்தலகேம் ஆக்கியது...

வீட்டில் சிப்பி குவித்து ரெஜிபோமை பெற்றோலில் கரைத்துப் பசை செய்து ஒட்டி ஒட்டிப் பல சிற்பங்களை எங்கள் அனுபவங்களாய் எங்களால் உருவாக்க வைத்தவர் -மார்க் மாஸ்டர்!

அவரை 'லூாஸ்' என்ற ஹாட்லி மாணவர்களும் உண்டு. புலம் பெயர்ந்து வாழும் இவர்கள் அங்கு ஓவியங்களைக் காணும்போது 'மார்க்கரை' நிச்சயம் நினைவில் கொள்வார்கள்!

கர்நாடக சங்கீதம் பயில (பாட) முடியாதவர்களை ஓவியத்துக்குத் தள்ளிவிடும் வழக்கம் அப்போது பாடசாலைகளில் இருந்தது. இசைக்கே 'லாயக்கற்ற' பல மாணவர்களில் - பலர் - மார்க் மாஸ்டரிடம் அடிவாங்கத் தவறவில்லை. ஏனெனில் ஓவியமும் ஒரு கவின்கலையே! இதை மாற்கு மாஸ்டர் அப்போது சொல்வார். ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் பவுடர் ரின்களையும், ரோனியோ மை வரும் ரியூப்களையும்,கண்டால் - மார்க்கருக்குக் கொண்டு போய்க் கொடுக்கலாம் என்பார்கள்.

இந்தப் பொருட்களையெல்லாம் அவரவரது அனுபவங்களுக்கேற்ப வடிவங்களாக வடிக்கச் செய்து மேலும் ஊக்கப்படுத்தியவர் - மார்க் மாஸ்டர் - 'ஒரு டைப் ஆள்' என்ற பெயருடன்! இப்படி - முரண்பட்ட ஒரு மரபுவழிச் சமூகத்துள் நுழைந்தவர்களில் முன்னோடியான அவர் எப்படியான துயர அனுபவங்களைப் பெற்றிருப்பார் என்பதை இன்று எம்மால் உணர முடியும்!

அவரது நடமிடும் சிவன், இயேசுநாதரின் திருமுகம், சகுந்தலை, மண்ணின் அழைப்பு, மீட்சி, கண்ணகி போன்றன அப்போது பகிடிபோல கருதப்பட்டதையும் அவர் அனுபவித்துள்ளார்!

ஹாட்லிக் கல்லூரியில் அவரது வதிவறை - அறையாக இல்லாமல் - ஒரு களஞ்சியமாகவே (Store) இருந்தது.

படங்கள் - பலகைகள், மட்டைகள் கம்பிகள், குடுவைகள், தகரங்கள், சிப்பி, சங்குகள், முருகைக்கற்கள் யாவும் நிறைந்த அறை அதன் நடுவில் அவர். ஆர்வமுள்ளோரைக் கூட்டிச் செல்வார். தமது ஆக்கங்களைக் காட்டி அனுபவிப்பார்!

அவரது அறையே எமக்குப் புது அனுபவத்தையும் ரசனையையும் - ஊட்டத் தொடங்கியது! புறச்சூழல்கள் கட்டுப்பாடுகளின் தாக்கங்களில் இருந்து விலகி தமக்கான ஒரு சுய எண்ண ஒழுங்கில் - தமது உலகை, தமது உள்ளொளி அனுபவத்தை வண்ணக் கலவையிலோ அல்லது கோடுகளிலோ 'உறவாடி'ப் பதியச் செய்ய - பல 'மாணவர்களை'ப் புதிய உலகில் பிரவேசிக்கச் செய்தவர் -மார்க் மாஸ்டர்.



நல்ல சமூகத்தை உருவாக்கிய ஒரு நல்ல ஆசானாகவும் இருந்தார். அவரும் அவரது மாணாக்கர்களும் குடும்பமாகவே இயங்கினர்!

அவரிடம் பயிலச் சென்ற போது தெரிந்த அவரது 'கிறுக்கல்கள்' அவரிடம் பயின்று வெளியேறும்போது- 'உள்ளொளி அனுபவங்களாகவே' மனதில் பதிந்தன.

எல் கிறேக்கோ - என்ற ஸ்பானிய ஓவியரில் பற்று வைத்திருந்தவர் மார்க் மாஸ்டர்.

கிறேக்கோவின் ஓவியர்களும் அவரது காலத்தில் - பகிடியாகக் கருதப்பட்ட கிறுக்கல்களாம்.

பின்னர் தான் அவை ரசிக்கப்பட்டுப் புரிந்துணரப்பட்டன!

கிறேக்கோபோல - -மார்க் மாஸ்டரும் இனித்தான் எமது சமூகத்தால் ரசிக்கப்படுவார் - என்று பேராசிரியர் மௌனகுரு குறிப்பிடுவது - இங்கு பொருத்தமாகும்!

- 1953ல் நுண்கலைக் கல்லூரி.
- 1955ல் அங்கு நடந்த கண்காட்சியில் இவரது 21 ஓவியங்கள்-ஏனைய மாணவரில் - ஒருவரது குறைந்தது 2 அல்லது 3 மட்டுமே) தெரிவானமை.
- 1957ல் கலாபவனக் கண்காட்சியில் இரண்டாமிடம்.
- விடுமுறைகால ஓவியர் கழகம்
- கோடுகள், வர்ணம், வடிவம் தான் ஓவியம் என்ற கொள்கை.
- பணத்துக்காகவும் உழைப்புக்காகவும் என்றல்லாமல் மன ஓட்டத்திற்குக் கட்டுப்பட்டு வரைபரப்பில் பதிந்தமை.
- எல்.கிறேக்கோ என்ற ஸ்பானிய ஓவியரில் பற்று.
- றூா ஓ என்ற ஓவியரைப் போல (அவர் பற்றி அறிந்திராமலே) ஓவியங்கள் வரைந்தமை (இதனை அவரது விரிவுரையாளர் சொல்லிப் பாராட்டியுள்ளார்)
- ஓவியக் கண்காட்சிகளை நம்மிடையே அடிக்கடி நடத்துவதன் மூலமே ரசனையை வளர்க்கலாம் என்ற அவா!



என்பன அவரைப் பற்றிக் குறிப்பிடக் கூடியவை.

- மாற்கு மாஸ்டர் இன்று 'எம்மிடையில்' பிறந்திருக்காவிட்டால்' அவரது மரண அறிவித்தலை அனைத்து ஊடகங்களும் போட்டி போட்டுச் சிறப்பாக அறிவித்திருக்கும் அதை மொழிபெயர்த்து எம்மவர்களும் விளாசியிருப்பர்.

'- மார்க் மாஸ்டரைத் தெரியுமா?'

"அவர் ஆர் "எனக்குத் "தெரியாதே"

"அவர் ஒரு ஓவியர். சிறந்த ஆட்டிஸ்ட்..."


"உதைப் போடப் போனால் இனி எல்லா ஆர்டிஸ்ட்மாரையும் - செத்தால் போடச் சொல்லிக் கேட்பாங்கள்.."

(இவனுக்கு எப்படி விளங்கப்படுத்தலாம்?)

"இல்லை இவர் என்ற பெரியப்பா மாதிரி... கனகாலம் படம் கீறியவர்"

"அப்பிடியா?- குறிப்பை எழுதித்தாரும்..." இப்படி எல்லாம் சொல்லித் தான் இவரது பிரிவுச் செய்தியைப் போட வேண்டிய நிலையில் தமிழ் ஊடகச் செய்தித்துறை இருக்குமானால்.. நவீன ஓவியம் எங்கே?

**.வரதன்**



## எமது குரல்

**"புராண வரலாறுகளில், தேவதைக் கதைகளில், நாட்டுப்புறக் கதைகளில் இளவரசர்கள் கொடூரமான சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி வாகை சூடினர் எனத் தொன்று தொட்டுக் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் நன்கு ஆராய்ந்து பார்த்தால், இளவரசர்கள் உடற்பலத்தையும் மனத்துணிவையும் மட்டுமே கொண்டவர்கள் என விளங்கும். ஞான சக்தி இளவரசிகளுக்குரித்தாகியிருந்தது. பெண்கள், உடற்பலம் கொரண்ட ஆண்களின் காமத்தை ஞான சக்தி மூலம் உறிஞ்சி ஆட்டுவித்து வீரச் செயல்களைப் புரிய வைத்தனர்."**



சுனேத்ரா ராஜகருணாநாயக்க பெண் பத்திரிகையாளர். ஒரு படைப்பாளி. கவிதை மொழியில் வாசகர்களுடன் தமது அனுபவங்களை பரிமாறிக் கொள்ளும் வழக்கமுடைய சுனேத்ரா அவர்கள், சுமார் 10 வருடங்களுக்கு முன் "சந்துன்கிர கினி கனி "(எரியும் சந்தன மலை) என்ற நாவலின் மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமானார். அதன் பின்னரான அவரது படைப்புக்களில் "பிரேம புராணய" (காதற் புராணம்) எனும் நாவல் இலக்கிய உலகிற்கு ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுத்தது எனலாம். சுனேத்ராவின் புதிய சமீபத்தைய படைப்பு "ரிதி திரங்கனாவிய (வெள்ளித்திரை நாயகி)".

அந்நூலின் பின் அட்டையில் அந் நாவல் குறித்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இந் நூலைப் பற்றி பொதுவாகக் கூறுவதாயின், தென்னாசிய அரசியலை கருவாகக் கொண்ட ஒரு பரந்த திரைப்படத்தைப் போன்றது இந்நாவல். அதேபோல் தாள லயத்திற்கேற்ப அலைபாயும் சாகரத்தின் நடுவே உள்ள வனப்பு மிகு தீவினை, கருநீல வானத்தில் இருந்து உற்று நோக்கிக் கொண்டிருக்கும் ஒரு விழியைப் போன்றது"



"தெற்காசிய அரசியல் முழுவதும் ஒரு இயல்பான நடைமுறையை காணலாம். இங்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நபர்கள் தவறான வழிமுறையினைப் பின்பற்றியே காரியங்களை, கடப்பாடுகளை சாதித்துக் கொள்கின்றனர். இவ்வாறு தவறான வழிமுறையில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுபவர்கள், அத்தவறுகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், நியாயப்படுத்தவும் முயற்சிக்கின்றார்கள். நாம் இந்த முறையில் காணப்படும் தவறுகளைப் பற்றிப் பேசினாலும் சாதாரண மக்களினால் இவற்றை எதிர்க்கவோ, சவாலுக்குட்படுத்தவோ முடியாது. நாம் வாழுகின்ற சமூகத்தில் எமது இருப்பையும், வடிவத்தையும் தீர்மானிப்பது இந்தப் புறச்சக்திகள் தாம். ஆயினும், எம்மால் அனைத்தையும் எதிர்த்துப் போராட முடியாவிட்டாலும் சிலவற்றை மாற்றிவிட முடியும். பெரும்பாலும் இவ்வாறான மாற்றங்களை திரைப்படங்கள் செய்வதை காணக் கூடியதாக உள்ளது. இந்த விடயத்தைத் தான் நான் "ரிதி திரங்கனாவிய" மூலம் வெளிப்படுத்த முயற்சித்தேன்."

சுனேத்ரா அவர்கள், தனது ரிதி திரங்கனாவிய தலைப்பைப் பற்றி இவ்வாறானதொரு கருத்தை முன்வைக்கின்றார்.

சுனேத்ரா அவர்களின் நாவலின் கருப்பொருள் ஒரு பெண். அப்பெண்ணுக்கு அவர் ஒரு அரசியல் வடிவத்தைக் கொடுத்துள்ளார். அப்பெண்ணின் வாழ்க்கையின் பலதரப்பட்ட சந்தர்ப்பங்களினூடு மனித வாழ்வின் மிக மென்மையான திருப்பங்களை வெளிப்படுத்த அவர் முயற்சிக்கின்றார். இந்தப் பெண் பாத்திரத்தின் மூலம் எமது வாழ்வின் பலதரப்பட்ட கோணங்களையும், இயல்புகளையும் சித்திரிக்க சுனேத்ரா அவர்கள் எடுக்கும் முயற்சிகள் பாரம்பரிய எழுத்துலக வரையறைகளுக்கு அப்பால் பரந்துபட்டதாக உள்ளது.

"ரிதி திரங்கனாவிய" நாவலின் பிரதான பாத்திரத்தை எம்மால் சரளமான இலகுவான வழிமுறையில் அறிமுகப்படுத்துவது சற்றுக் கடினமானது. அப்பெண்ணின் பிறப்புச் சான்றிதழில், "மாஷெலா மானெல்" எனப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அவள் பின்னர் "மனுஷி" என்ற பெயர் கொண்ட நடிகையாக பிரபலமடைகிறாள். திருமணத்தின் பின் அவள் "திருமதி மனுஷி பத்திரன" என பெயர் பெறுகிறாள். பின்னர் அவள் வஜிரதேவி என்ற பெயரில் அழைக்கப்படுகிறாள்.

"இப்பெயர் குறித்த விடயத்தினூடே சமூகத்தினுள் மனிதாபிமானம், மனிதத்துவம் குறித்து நிலவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறைகளை கட்டுடைத்தலே என் தேவையாக இருந்தது" என சுனேத்ரா அவர்கள் கூறுகின்றார்.

பொதுவாக இலங்கைப் பெண் எழுத்தாளர்கள் அரசியல் தொனிப் பொருட்கள் குறித்து எழுதுவதும் பேசுவதும் அரிது. இதனால் அவர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாகி விட்டனர். இவ்வாறான பின்னணியில் சுனேத்ரா அவர்கள், அரசியல் சமூக, பொருளாதாரத் தொடர்புகளை சூட்சுமமாக வரையறுப்பது அவதானத்திற்குரியது. இதற்கான நிபுணத்துவத்தை அவர் எண்ணிலடங்கா இந்தியப் பயணங்களின் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்களினால் விசாலித்துக் கொண்டதாகக் கூறுகின்றார்.

"எமது பழைய தேவதைக் கதைகளில் பரந்துபட்ட அரசியலைக் காணக் கூடியதாகவுள்ளது. நான் அடிக்கடி இந்தியாவில் சஞ்சரிப்பதனால் அத்தேவதைக் கதைகளினுள் புதைந்து கிடக்கும் அரசியல் குறியீடுகளை விளங்கிக் கொள்ள இயலுமாகவிருந்தது. சிலவேளைகளில் கடவுளர்கள், தேவர்கள் தம்மை விட அதிகம் பலம் பெற்று விடுவார்கள்: ஆண் பெண் இயல்புகளுக்கு அப்பால் சென்று விடுவார்கள் எனப் பீதியடைந்தனர். சிவன் - பார்வதி புராணத்தில் இவை அனைத்தும் எழுத்தில் வடிக்கப்பட்டுள்ளன. இவற்றைச் செவிமடுப்பதினால், அவதானிப்பதினால், உள்வாங்கிக் கொள்வதினால் என் உள்ளத்தில் பொதிந்து கிடந்த கதைக்கரு மெருகேறியது. இந்நாவலில் வரும் உரையாடல்கள், காட்சிகள் சஞ்சாரங்களின் போது என்னுள் ஏற்பட்ட எண்ணங்களின் வெளிப்பாடாகும். நான் அப்புராணங்களில் தோற்றம் பெறும் அரசியல் தொனிப்பொருளை நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் ஆவணப்படுத்த முயற்சித்தேன் என்கிறார் அவர்."

**தொகுப்பு: திலினா வீரசிங்க, ரத்னா**

# சொர்க்கமும் நரகமும்

இலங்கை-சொர்க்கத் தீவு எனும் தலைப்பிலான ஒரு சிறு கட்டுரை வாசிக்கக் கிடைத்தது. Nexus எனும் உல்லாசப்பயணத்துறை சம்பந்தமான ஒரு சஞ்சிகையில் வந்திருந்தது. -அட்டையில் கொழும்பு மனிங் மார்க்கெட்டில் ஒரு சுமை தூக்கும் தொழிலாளியின் படம் போடப்பட்டிருக்கிறது. தலைப்புக்கு பொருத்தமில்லாத , உல்லாசப் பயணிகளை எந்த வகையிலும் கவராத படம். கட்டுரை ஒரு பிரித்தானியப் பெண்மணியால் எழுதப்பட்டிருக்கிறது. அவர்களின் காலனித்துவத்திலிருந்த நாட்டின் பரிதாப நிலை தான் அந்தப் படமாக இருக்கலாம். இருந்தும் கட்டுரையில் இலங்கை பற்றிய சில சுவாரஷ்யமான தகவல்களைப் பெறலாம்.

பாதுகாப்புக் கெடுபிடிகளையும், அது தரும் சோர்வுகளையும் மீறிய ஆரோக்கியமான சூழல், சிறந்த உணவுகள், உபசாரம் மிகுந்த மக்கள் (இதெல்லாம் ஹில்டன் போன்ற ஹோட்டல்களுக்குள்ளே தான்!) என ஓர் அறிமுகக் குறிப்பு, 1200 பிரிட்டிஷார் இலங்கையில் வசிக்கிறார்கள் (கொழும்பில் 900 பேர்), மூன்று அல்லது நான்கு படுக்கையறை கொண்ட இருப்பிடம் ஒரு லட்சத்திலிருந்து ஒரு லட்சத்தி முப்பதாயிரம் மாத வாடகையிலுண்டு என்ற தகவல்களென தொடங்குகிற கட்டுரை தொடர்ந்து...

இலங்கைத் தொழிலாளர்கள் புத்திசாதுர்யமிக்கவர்கள், திறமைசாலிகள் என்ற புகழுரையோடு இலங்கையர்கள் மேற்கத்தேய மயமாகி வருகிறார்கள். இருந்தும் ஏனைய ஆசிய நாடுகளைப் போன்று இங்கும் 'முகம்' என்பது முக்கியமானதாக இருக்கிறது.புன்னகைகள் ஆயிரம் அர்த்தங்கள் சொல்கின்றன. மக்கள் நீங்கள் எதைக் கேட்க விரும்புகிறீர்களோ அதைச் சொல்லி விடுவார்கள்... உண்மைகளையல்ல! தாமதம் என்பது ஒரு போக்காக மாறி வருகிறது. (இனியாவது நேரத்திற்கு அலுவலகத்திற்கு வரப் பார்) இது மக்களின் மனநிலையால் என்பதை விட போக்குவரத்து நெரிசலால் தான் என்று விடலாம்! தகுதி, அந்தஸ்து, அங்கீகாரம் தான் எல்லாமே இங்கு. பெண்கள் தான் இங்கு பிரதான குடும்ப ஓட்டுனர்களாகச் செயற்படுகிறார்கள்... (சுரண்டலுக்கு உள்ளாகின்றமைக்கான மறு பெயரா?)

இலங்கை தான் உலகிலேயே விடுமுறை கூடிய இடமாக இருக்க வேண்டும்...மக்கள் ஒரு பாலத் திறப்புக்காகக் கூட இங்கு விடுமுறை எடுத்து விடுகிறார்கள்! இன்னொன்று கிரிக்கெட்டால் இங்கு எல்லாமே ஸ்தம்பித்து விடுகிறது.

ஆசியாவிலேயே தாராள முதலீட்டுக்கான இடமாக இலங்கை இருக்கிறது. வெளிநாட்டவர்களுக்கு வியாபார பன்முகத் துறைகள் உண்டு.நகைத் தொழிலிலிருந்து வங்கித்துறை வரை இங்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன. பெரும்பாலும் இங்கு வர்த்தகம் தனிநபர் அடையாளங்களோடு நிற்கிறது. நாட்டுக்குள் பரவலாக இருக்கும் ஒரே மாதிரிப் பெயர்களான பெரேராக்கள், டி சில்வாக்களை இட்டு நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குழம்பிப் போய்விடக் கூடாது.

ஆங்கிலம் சிங்களத்தை பிரதியீடு பண்ணி உத்தியோக மொழியாக மாறிவருகிறது. பழசுகள் இளசுகளை விட நல்ல ஆங்கிலம் பேசுகிறார்கள்.

இலங்கை வாழ்க்கைக்குரிய சுகாதார வசதிகள் நிரம்பிய இடம் தான். இப்போது கொழும்பு பத்து வருடங்களுக்கு முன்பிருந்ததை விட சுத்தமாக இருக்கிறது. அங்கு மலேரியா பற்றிய அச்சம் வேண்டாம். ஆனால் டெங்குக் காய்ச்சலையிட்டு கவனமாக இருப்பது நல்லது.


இலங்கை ஒரு யுத்தப் பிரதேசம் தான். ஆனால் கொழும்பில் வசிக்கையில் அதையெல்லாம் விட்டுத் தூரமாயிருக்கிறது போல் இருக்கும். வாழ்க்கை எல்லாம் வழமைப்படிதான் செல்கிறது. இருந்தும் வீதிச் சோதனைச் சாவடிகள் தான் ஓர் இடையூறாக போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்துகிறதாக இருக்கிறது. பிரிட்டனில் எப்படி வீதி விபத்துக்களோ அது மாதிரித் தான் இங்கு பயங்கரவாத நிகழ்வுகள் என்பதும், அவ்வளவு சாதாரணமாகி விட்ட விடயம் என்கிறார் Rod Hobbes என்ற பிரித்தானியர்.

தனிப்பட்ட தாக்குதல்கள் என்பது இங்கு பெரிதாக இடம் பெறுகிற விடயமில்லை. எனவே பயமில்லாது வீதியில் நடக்கலாம். அநேக பெண்கள் நகரத்தில் மேற்கத்தேய பாணி சொகுசை அனுபவிக்கிறார்கள். திருட்டு என்பது இங்கு ஒரு சீரியசான விடயமாக இல்லாவிடினும் கூட பெரும்பாலும் அனேகர் குறிப்பாக, வெளிநாட்டினர் வீட்டுக்கு ஒரு காவலாளியை வைத்தேயிருக்கிறார்கள்!

Nicki Grinhutt என்ற பெண் தான் இச்சுவாரஷ்ய எழுத்துக்கள் அடங்கிய இக் கட்டுரையை எழுதியவர். இருந்தும் இதெல்லாவற்றையும் விடவான யதார்த்தங்கள் எமக்குத் தெரியும். இருந்தாலும் இதை வேறொரு ஒப்பீட்டுக்காகவே எழுத நினைத்தேன். அதுவும் ஒரு பிரித்தானிய பெண்ணின் எழுத்துக்கள் தொடர்பானது தான். அவர் இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய்பவர், ஆனால் உல்லாசப் பயணியாக அல்ல. அக்கறை மிகுந்த தேடலுள்ள ஒருவராக. அதிலும் இலங்கையின் எரியும் பிரச்சினைகள் பற்றிய தேடல் கொண்டவர். தமிழ் மக்களின் பால் மிகவும் கரிசனையுடையவர். இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் ஆய்வு நூல்கள் எழுதியிருக்கிறார்.

Sri Lankan Tamils: The right to self determination என்ற தலைப்பில் தன் பட்ட மேற்படிப்பு ஆய்வு மேற்கொண்டவர். (அவ எங்கட பிரச்சினையை வச்சு பட்டம் பெறுகிறா என்று கொச்சைத் தனமாக நினைக்காதே, நினைத்திருந்தால் எந்தப் பிரச்சினைகளுமற்ற தலைப்பில் அவ பட்டம் எடுத்திருக்கலாம்). அது நூலாக வெளிவந்தது. அவருடைய பெயர் Ms. Helena J. Wall. இலங்கையில் மேர்ஜ் கந்தசாமி என்பவரிடம் விற்பனைக்கிருந்தது. 750 ரூபா. நொண்டியடிக்கிற எனது சம்பளத்துள்ளும், கந்தசாமியண்ணையின் நக்கல் சிரிப்புக்கு மத்தியிலும் - அதைப் பெரிய பெரிய ஆக்கள் தான் வாசிப்பார்கள் என்று சில பெயர்களையும் குறிப்பிட்டார் - அதை வாங்கினேன். முன்னுரையை மட்டும் வாசித்த நிலையில் அது கிடப்பில் என் அறையில் இருந்தது. பிறகு சில நாட்களில் அதைக் காணவில்லை. காணவில்லையென்ன யாரோ எடுத்துச் சென்று விட்டார்கள். (யாரிடமாவது இருந்தால் தந்து விடுங்கள்).

ஆக இந்த இரண்டு பெண்களும் இலங்கையைப் பற்றி அவரவர் தளத்தில் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அந்தத் தளங்கள் தான் எவ்வளவு வித்தியாமானது! எதிரும் புதிருமானதுமான பார்வைகள்! இங்கு அவற்றையெல்லாம் விட துரதிருஷ்டம் என்னவென்றால் முக்கியமான அந்த நூலைப் படித்து ஏதாவது எழுதுவதை விடுத்து (அது பற்றி ஒரு அறிமுகக் குறிப்பு சரிநிகரில் வந்துள்ளதென நினைக்கிறேன்) இந்தக் கட்டுரையைப் பற்றி எழுதிக் கொண்டிருப்பது தான்!




"இரண்டாவது தசாப்தத்தில் காலடி" எனும் தலைப்பைத் தாங்கி சக்தி சஞ்சிகை வெளிவந்திருக்கிறது. சக்தி தொடங்கி 10 ஆண்டுகள் கழிந்த நிலையில் "ஆணாதிக்கப் பிடியிலிருந்து தகவல் தொழில் நுட்பத்தை விடுவிப்போம்" என்ற கோசத்தைத் தாங்கி வரும் இந்த இதழில் இம்முறை கனதியான கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

சக்தியின் முதலாவது இதழ் 1990 ஓகஸ்டில் மைத்திரேயி போன்றவர்களின் முழு

# இரண்டாவது தசாப்தத்தில் காலடி வைக்கும் சக்தி!

முயற்சியால் நோர்வே-ஒஸ்லோவில் இருந்து கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் சுகிர்தா, லிட்டா ராசநாயகம் போன்றோரின் பங்களிப்புகளுடன் வெளிவந்து, ஒரு கட்டத்தில் அது நின்று போக சக்தியுடன் இணைந்து பணியாற்றிய தயாநிதி அதனைப் பொறுப்பேற்று இதுவரை வெளிக்கொண்டு வந்துள்ளார். பின்னர் புலம்பெயர்ந்த பெண்கள் பலரின் பங்களிப்புகளுடன் தொடர்ந்து வெளிவந்து




கொண்டிருக்கிறது.

இதுவரை வெளிவந்த 25 இதழ்களையும் வைத்து மறுவாசிப்புச் செய்யும் போது தமிழ்ச் சூழலில் பெண்ணிய எழுத்துக்களை அல்லது பெண்களின் எழுத்துக்களை ஆராய்கையில் சக்தியை விட்டுவிட்டு நகரமுடியாது என்கிற முடிவுக்கு வரமுடிகிறது. 25 இதழ்கள் மட்டுமே இந்த 10 வருடங்களில் கொண்டுவர முடிந்திருந்தாலும் அதன் தொடர்ச்சி உண்மையில் மெச்ச வேண்டிய ஒன்று. புகலிடச் சூழலில் மட்டுமல்ல பொதுவாக சிறுசஞ்சிகை உலகில் ஆண்களால் வெளிக்கொணரப்பட்ட சஞ்சிகைகள் எல்லாமே காலக்கிரமத்தில் கைவிடப்பட்டுப் போன, போகிற நிலையில் (இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.) 10 ஆண்டுகால சக்தியின் தொடர்ச்சி உண்மையில் மலைக்க வைக்கக்கூடியது தான்.

சக்தியில் வெளிவந்த பெண்களின் சிறுகதைகளை ஒன்று திரட்டி 'புது உலகம் எமை நோக்கி' எனும் ஒரு சிறுகதைத் தொகுப்பை சக்தி வெளியிட்டிருந்தது.

பெரும்பாலும் சிறு சஞ்சிகைகள் நடத்தும் பலர் அச் சஞ்சிகைகளை நடத்துவதற்கு கொடுக்கும் விலை சாதாரணமானதல்ல. இலங்கையில் விடிவு சஞ்சிகை நடத்திய போதும், வேறு சில சஞ்சிகைகளுடன் கூட்டாக இயங்கிய போதும் நான் கண்ட அனுபவங்கள் அவை.

எனினும் சஞ்சிகையைக் கொண்டுவர என்னை விலையயாவது கொடுப்போம், போராடுவோம் எனும் விடாப்பிடியான நோக்கில் கொணரப்பட்ட பல சஞ்சிகைகள் இடையில் கைவிடப்பட்டதற்கு வெறும் பொருளாதாரக் காரணிகளை மட்டும் கூறி விட்டுப் போக முடியாது. கூட்டுழைப்பு, கூட்டுப்பொறுப்பு இல்லாமல் போனமை மற்றும் அரசியல் குழுவாதம், தனிப்பட்ட சண்டைகள் என்பன போன்ற காரணிகளும் சில சஞ்சிகைகளின் நிறுத்தத்திற்குக் காரணமாகியிருக்கின்றன.

இப்படியான சிறுசஞ்சிகை சூழல், அவலங்களின் மத்தியில் பெண்களால், பெண்களுக்காக, கொணரப்பட்டுள்ள சக்தி குறித்து முறையாக ஒரு முழுமையான விமர்சனம் பெண்களால் செய்யப்பட வேண்டும். அரச சார்பற்ற நிறுவன நிதியைக் கொண்டிருந்தும், பணம் கொடுத்து எழுத வைக்கக் கூடிய வசதிகள் இருந்தும் கூட பெண்கள் இயக்கங்கள் பல இலங்கையில் பெண்களின் சஞ்சிகையை தொடர்ச்சியாகவும், கிரமமாகவும் கொண்டுவர முடியாமலிருக்கும் நிலை கவனிக்கத்தக்கது.

புகலிடச் சூழலில் இயந்திரமயப்பட்ட வாழ்க்கை, களைப்பு, நேரமின்மை, இவ்வளவையும் விலைகொடுத்து சஞ்சிகைக்காக பிரேத்தியமாக உழைத்து, தம்மை மாடாகச் சுரண்டவிட்டு கிடைக்கும் பணத்தைக் கொண்டு தான் இப்படியான சஞ்சிகைகள் கொண்டுவரப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நோர்வேயில் வெளிவந்துகொண்டிருந்த 'சர்வதேச தமிழர்' எனும் சிறு பத்திரிகை (சில மாதங்களுக்கு ஒரு முறை வந்த News Lettet) சமீபத்தில் நிறுத்தப்பட்டது. அதன் ஆசிரியர் இப்பத்திரிகையை நடத்துவதாகக் கூறி வருடாந்தம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட லட்சத்துக்கும் மேற்பட்ட நோர்வே குரோனர்களை மோசடி செய்ததாகக் கூறப்படுகிறது. சக்தியை நடாத்த அரசாங்கத்திடம் உதவி கோரலாமே என்று சக்தி ஆசிரியரிடம் கேட்டதற்கு, அவர் 'அரசின் நிபந்தனைளுக்கும், அவற்றின் கட்டுப்பாடுகளுக்கும் இணங்குவதை விட நாங்கள் எங்களை வருத்தி சஞ்சிகையை நடாத்தி விடலாம் என்கிறார்.

இம்முறை சக்தியின் ஆசிரியர் தலையங்கத்தில் இப்படிக் குறிப்பிடப் படுகிறது. 'ஆரம்பத்தில் சந்தா சேகரிப்பதற்காக நாங்கள் வீடுவீடாகவும் பஸ்தரிப்பிடம் புகையிரத நிலையம் தென்பட்ட ஆசிய



முகங்களுடன் எல்லாம் பேச முயற்சித்தோம். அவர்களின் அலட்சியங்கள் மத்தியிலும் தொடர்ந்தோம்.... எமது சுவரொட்டிகளைக் கிழித்தும், சஞ்சிகைகளை எரித்தும் நடத்தப்பட்ட ஆண்களின் எதிர்ப்புகளையும் எதிர் கொண்டோம்... புகலிடச் சூழலில் ஆரம்பிக்கப்பட்ட இலக்கியச் சந்திப்பில் சக்தி சஞ்சிகை பற்றி பலமுறை விமர்சனங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை வாசகர்கள் அறிவீர்கள். ஆனாலும் சக்தி 10வது வருடத்தை பூர்த்தி செய்யும் இந்த ஆண்டில் இலக்கிய சந்திப்பின் 26 வது அமர்வில் சக்தி சஞ்சிகைக்கான 'அறிமுகம்' நடைபெற்றுள்ள முறையை என்னவென்பது?

ஆண்கள் இலக்கிய உலகம் இதையிட்டு பெருமிதம் அடையலாம் அத்துடன் பெண்விடுதலையில் ஆர்வம் உள்ளவர்களாக தம்மைக் காட்டிக் கொள்ளும் ஆண்களும் இது பற்றி திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ஐரோப்பாவில் ஆரம்பத்தில் வெளிவந்த சகல சஞ்சிகைகளும் நின்று போன நிலையிலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சக்தி 'பெண்கள் சஞ்சிகை' என்பதால் அதனை எவராலும் நினைவில் வைத்திருக்க முடியவில்லைப் போலும்.

சக்தி பல பெண் புதிய பெண் எழுத்தாளர் களை அறிமுகம் செய்திருக்கிறது. தங்களை எழுத் தாளர்களாக அடையாளப்படுத்துவதற்காகவும், தாம் கூற விரும்புவற்றைக் கூறு வற்கான கள மாகவும் பல பெண்களுக்கு சக்தி அமைந்திருக்கிறது. ஆண் எழுத்தாளர்களின் கட்டுரைகளும் இதுவரை வெளிவந்திருக்கின்ற போதும் பெண்களின் கட்டுரைகள் போதுமானதாக இருக்கும் பட்சத்தில் ஆண்களின் கட்டுரைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட மாட்டாது எனும் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். சக்தியில் 1992 ஆம் ஆண்டு வெளிவந்த 'கருக்கலைப்பு' பற்றிய விவாதம் பலர் அறிந்தது. அந்த விவாதத்தோடு ஒட்டிய கட்டுரைகள் சரிநிகர் மற்றும் பிரான்ஸிலிருந்து வெளிவரும் 'சமர்' போன்ற சஞ்சிகைகளிலும் வெளிவந்திருந்தது.

இம்முறை வெளிவந்திருக்கும் 25வது இதழில் 'தமிழ்ச் சமூகத்தில் கணவரை இழந்தவர்கள்'- குயின், 'வெள்ளி விழாக்காணும் கலைஞர் ஆனந்தராணியுடனான உரையாடல்" - தயாநிதி, 'ஈஸ்ட் இஸ் ஈஸ்ட் திரைப்பட விமர்சனம்' - உமா, 'தேசிய விடுதலைப் போராட்டமும் பெண்களின் நினைவுகளும்!' -ஜெயந்திமாலா, 'மறுப்பறிக்கை..'- நிரூபா, 'செல்வியின் நினைவுப் பதிவு செய்தி', 'வாடகைக்குக் கருப்பைகள்" - ஆறாம்திணையிலிருந்து. 'குழந்தை வளர்ப்பு - விலங்கொடு மனிதராய்' - றஞ்சி, 'ஹிட்லரின் ஆட்சியில் பெண்கள்' - கேட் மில்லட், 'புதிய கருத்தடை சாதனம்' - ஜெயந்திமாலா, 'சிங்கள சாதியமைப்பில் இன்றும் தொடரும் கன்னித் தன்மைப் பரிசோதனை' - என்.சரவணன் மற்றும் நளாயினி, சுதா ஆகியோரின் கவிதைகள் என்பன அடங்குகின்றன.

இவை எல்லாவற்றையும் விட சக்தி இந்த இதழ் தொடக்கம் இணையத்தில் கிடைக்கிறது. அடக்கப்படும் அனைத்து சமூக சக்திகளும் ஆளும் குழுமங்களிடமிருந்து தகவல் தொழில் நுட்பத்தைக் கைப்பற்றுவது என்பது தவிர்க்க முடியாத போராட்டமாக இந்த மில்லேனியத்தில் ஆகிவிட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பெண்கள் படிப்படியாக தகவல் தொழில்நுட்பத்தை பெண்கள் தமது பிடியில் கொண்டு வருவது அவசியமாகியிருக்கிறது. ஆணாதிக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தகவல் தொழில் நுட்ப சாதனங்கள் வாயிலாக இன்று உற்பத்தி செய்யப்படும் அதிகாரத்துவம் சார்ந்த கருத்துக்கள், தகவல்கள், தோற்றங்கள், சித்தாந்தங்கள் போன்றவற்றை முறியடிப்பதென்றால் இதனை மேற்கொள்வது தவிர்க்க இயலாததாகிறது. அந்த வகையில் சக்தியின் இணையப் பதிப்பு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது.

சக்தி சஞ்சிகையுடன் தொடர்புகளுக்கு

SAKTHI, BOKS 99 OPPSAL, 0619, OLSO 6, NORWAY

Email - sakthee@england.com

இணையத்தளம் - http://geocities.com/pennsakthi/

என்.சரவணன்

## எல்லாப் பக்கமும் வாசல்

### நாடகப் பிரதி




ஈழத்து நாடக சூழலில் சிறந்த நாடகங்கள் இன்னும் எழுதப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தாலும், அதையும் மீறி சிலர் நாடகத்துறைக்கு தங்களால் இயன்ற பங்களிப்பினை வழங்கியுள்ளார்கள். இதில் ஈழத்தில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவர் குழந்தை சண்முகலிங்கம். ஈழத்தில் நல்ல பல நாடகங்களினை மேடையேற்றியதில் இவரின் பங்களிப்பு அளப்பரியது.

தற்போது ஈழத்து தமிழ் படைப்பிலக்கியங்கள் ஈழம், புலம்பெயர் என்ற இரண்டு சூழலில் இடம்பெறுகின்றன. இதில் புலம் பெயர் கவிதை, சிறுகதை போன்ற படைப்புகள் ஏற்கெனவே அறியப்பட்டவை.

அத்தோடு, புலம் பெயர் சூழலிலும் நாடக ஆற்றுகைகள் இடம்பெறுகின்றன. இவற்றுள் எத்தனை சிறந்த சமூக நாடகங்கள் உருவாக்கப்பட்டன என்ற கேள்வி எழுப்பப்பட்டாலும் குறிப்பிட்ட சிலர் புலம் பெயர் வாழ்வியல் நெருக்கடிகளுக்குள்ளும் வாழ்வியல் அவலங்கள் தொடர்பாக நாடகங்கள் எழுதுவதிலும் மேடை ஏற்றுவதிலும் தங்களை ஆர்வத்துடன் ஈடுபடுத்தி வருகின்றனர்.

அதில் குறிப்பிடத்தக்கவர் ஜயகரன். கனடாவை கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தனது வாழ்விடமாகக் கொண்ட இவர் ஒரு கவிஞரும் கூட.

போரினால் ஏற்பட்ட புலம் பெயர்வும், புலம்பெயர் வாழ்வின் அவலங்களும், இப்புதிய வாழ்வு அனுபவத்தினை பதிவு செய்யும் நாடக அரங்காக புலம்பெயர் தமிழ் நாடக அரங்கை வளர்த்துச் செல்வதில் ஜயகரன் பங்களிப்பு காத்திரமானதாகும்.

பொடிச்சி (1997), எல்லாப்பக்கமும் வாசல் (1998) வெளி (1999) ஆகியன இவரால் எழுதப்பட்டு கனடாவில் ஆற்றுகை செய்யப்பட்ட மூன்று நாடகங்கள் ஆகும்.

இவற்றுள் எல்லாப்பக்கமும் வாசல் அச்சில் வரும் முதலாவது நாடகப் பிரதியாகும். இது தேடல் பதிப்பகத்தாரினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஆற்றுகை செய்வதற்கு நாற்பத்தைந்து நிமிடங்களே எடுக்கும் இந்நாடகத்தில் மூன்று பாத்திரங்களுக்கூடாக புகலிட வாழ்க்கையின் ஏக்கங்களையும், அவலங்களையும் வெளிக்கொணருவதில் வெற்றி பெறுகின்றார் ஜயகரன்.

புத்தகத்தில் 48 பக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் இந்நாடகப் பிரதி ஆழ்ந்த அர்த்தங்களினைப் புலப்படுத்தும் அழகிய அட்டையுடன் வெளிவந்துள்ளது.

தமிழிலும் சிறந்த நாடகங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையினைத் தரும் இந்நாடகம் புலம்பெயர் சூழலில் இனி வரும் காலங்களுக்கு முன்னோடியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நாடகத்தை மேடையேற்றுவதற்கான நெறியாள்கை ஆதாரத்திற்கு ஆற்றுகை செய்யப்பட்ட இந்நாடகத்தின் வீடியோவை பெற விரும்புவர்கள்

pajayakaran@hotmail.com

அல்லது Tel: (416)422 2783 யுடன் தொடர்பு கொள்ளவும்

– ஆர்ஸ்

# அவர்களும் அதற்குள் அடக்கமா?

ஊர்காவற்றுறைத் தொகுதியில் ஸ்ரீ.ல.சு.க சார்பில் சுயேச்சையாகப் போட்டியிடும் ஜெயந்தி பரமலிங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் இது. இவர் பெண் என்பதால் விதவைகள் மீதே இவரது கவனம் முழுவதும் விதவைகளின் நல்வாழ்விற்காக இவர் முன்வைத்துள்ள வேலைத்திட்டங்கள்.

1. யாழ். மாவட்ட விதவைகள் சம்மேளனம் உருவாக்கல்.
2. விதவைகள் ஆண்டு பிரகடனம்.
3. ஓய்வூதியமற்ற விதவைகளுக்கு மாதம் ரூ. 3000/-கொடுப்பனவு.
4. விதவைகளின் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை.
5. விதவைகளுக்கு இலவச பஸ் பிரயாணம்.
6. விதவைகளை மறுமணம் செய்யும் ஆண்களுக்கு வேலை வாய்ப்பு.
7. மறுமதிருமணம் தொடர்பாக விதவைகள் சபை உருவாக்கப்படும். திருமணச் செலவுகளை இச்சபை ஏற்கும்.
8. கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் இத்திட்டத்தில் இணைக்கப்படுவர்.

இப்படி மொத்தம் 12 திட்டங்கள்.

சரி, இத் திட்டத்திற்குள் பொ.ஐ.முவினால் விதவைகளாக்கப்பட்ட பெண்களும் அடங்குவார்களா ஜெயந்தி அவர்களே?

# தென்னிலங்கை யுத்தவாத....

யானதும் தேர்தலுக்கு பௌதீக சூழல் மட்டுமன்றி உளவியல் சூழலும் அவசியம் என்பது குறித்து இரண்டு வேறுபட்ட கருத்துகள் இருக்க முடியாது.

எனினும், தெற்கில் பிரசுரிக்கப்படும் சிங்களப் பத்திரிகைகளில் இத்தேவை நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பத சிக்கலானதாகும்.

இம்முறை தேர்தலை நீதியானதும், சுதந்திரமானதுமாக மாற்றிக் கொள்ள வரலாற்றில் இதற்கு முன் எப்பொழுதுமே நடைபெறாதளவுக்கு புத்த பிக்குகளும் பங்காற்றவுள்ளதாக பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 10ம் திகதி வாக்குச் சாவடிகளில் பிக்குகள் தமது கடமையைச் செய்வார்கள் என தேசிய சங்க சபை குறிப்பிட்டுள்ளது. நீதியானதும் சுதந்திரமானதும் தேர்தலுக்காக எந்தவொரு சக்தியாவது முன்வருவது வரவேற்றகத்தக்கதாகும். எனினும். தேசிய சங்க சபையும் தாய்நாட்டை பாதுகாக்கும் அமைப்பும் அரசியல் நோக்கம் கொண்ட கட்சிகளாகும். இலங்கை இன நெருக்கடி மற்றும் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக இந்த அமைப்புகள் இரண்டும் அடிப்படைவாத இயல்புகளைக் கொண்டிருப்பது இரகசியமானதல்ல. கடந்த மாதம் சமர்ப்பிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக இக் கட்சிகளின் நிலைப்பாடு எதிர்ப்புத் தன்மையைக் கொண்டதாக காணப்பட்டது.

**"புலிகளை அடக்க தாய்லாந்தின் உதவி"**

**-தாய்லாந்து தேரர் இலங்கைப் பிரதிநிதிகளுக்கு வாக்குறுதி.**

இது திவயின பத்திரிகையின் முதற் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இன்னுமொரு தலைப்புச் செய்தியாகும்.

"இலங்கையில் புலிப் பயங்கரவாதிகள் புத்த சாசனத்திற்கு எதிராக செயற்படுவதால் அதனை அடக்கி தாய்லாந்தின் பூரண உதவியைப் பெற்றுக் கொள்ள அந்நாட்டு தேரர் இணக்கம் தெரிவித்துள்ளார்" என இச்செய்தி அறிக்கையிடப்பட்டுள்ளது.

தேசிய சங்கச் சபையை சேர்ந்த மாதுளுவாவே சோபித்த தேரர், இத்தாபனே தம்மாலங்கார தேரர் ஆகிய பிக்குகள் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டதாக பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சிங்கள வீர விதான போன்ற சிங்களப் பௌத்த சக்திகளை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**"புதிய யாப்பின் காரணமாக நாட்டிற்கு ஏற்படும் தீமையை அறிவுறுத்துங்கள்"**

ஞாயிறு லங்காதீப பத்திரிகையின் முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட தலைப்புச் செய்தியில் குறிப்பிடப்படும் விடயம் யாதெனில், தலைமை பிக்குகளினால் இலங்கையில் உள்ள அனைத்து பௌத்த கோயில்களுக்கும் பௌத்த சங்கங்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கடிதத்தில், உத்தேச அரசியலமைப்பு நிறைவேற்றப்படின் சிங்கள பௌத்த இனமும் நாடும் அழியும் நிலை ஏற்படுவதினால் அதனை எதிர்ப்பதிற்கு பிரதேசவாசிகளை அறிவுறுத்துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் பொ.ஐ.முவினால் மீண்டும் இந்த யாப்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்பது திண்ணம் எனவும், இதற்கு ஐ.தே.க பொறுப்புச் சொல்ல வேண்டுமென அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தை ஆராயும் போது, இது மத விடயங்களுக்கு அப்பால் அரசியல் அதிகாரத்தை தெளிவுறுத்தும் ஒரு ஆவணம் என்பது தெளிவாகின்றது. இது தென்னிலங்கை சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் இன அரசியல் கருத்தியலை ஏற்படுத்தும் முயற்சி எனக் கருதலாம்.

இலங்கையில் இனப்பிரச்சினை உண்டெனவும் அதற்க அரசியல் ரீதியான தீர்வு அவசியமென உதட்டளவில் ஏற்றுக் கொள்ளும் பொ.ஐ.முவையும், ஐ.தே.கவையும் கடுமையாக விமர்சிக்கும் தலைமை பிக்குகள் அவர்களுக்கு வாக்கு போட வேண்டாம் என மறைமுகமாகக் கூறுவதைக் காணலாம். இதனால் அதிக நன்மையை அடைவது சிஹல உறுமய போன்ற கட்சிகள் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

இதன்படி பார்த்தால் தென்னிலங்கை அரசியலில் யுத்தவாத அரசியல் நிகழ்ச்சி நிரல் மென்மேலும் பலப்படுத்தப்படும் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதற்கு உடன்படவதா? இல்லையா? என்பதை வாக்காளர்களே தீர்மானிக்க வேண்டும். எனினும் இதற்கான வாய்ப்பு நீதியானதும், சுதந்திரமானதும் தேர்தல் இடம்பெற்றால் மட்டுமே சாத்தியம். இவ்வாய்ப்பு வாக்காளர்களுக்கு கிடைக்குமா? இல்லையா? என்பதை ஒக்டோபர் 10 வரை கூற முடியாது.

தலைமை பிக்குகள் மட்டுமன்றி பொ.ஐ.மு மற்றும் ஐ.தே.க ஆகிய பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் இன்று போட்டிக்கு இன அரசியல் போராட்டத்தில் இறங்கியுள்ளது. பொ.ஐ.முவினால் ஐ.தே.கவுக்கு புலி முத்திரை குத்தப்படும் போது ஐ.தே.க, வரதர் மற்றும் சந்திரிகா - பிரபாகரன் இரகசிய கடித பரிமாறல்களை வெளிப்படுத்துகின்றது.

இதற்கிடையில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தினால் எழுதப்பட்ட நூலில் அக் கடிதங்கள் உலகம் முழுவதும் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளது. தெற்கில் இனவாத யுத்தவாத அரசியலை மோசமாக இந்தவகையில் புலிகளும் பங்காற்றிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் பிரதான சக்திகளினால் இவ்வாறு யுத்தவாத அரசியல் வளர்க்கப்படும் போது சிங்களப் பத்திரிகைகளினால் அது மென்மேலும் தூபமிடும் போது சமாதானமான ஜனநாயக ரீதியான அரசியலுக்கான போராட்டத்தினை மக்களினால் தனித்து முன்னெடுக்க முடியுமா என்பது சிக்கலான விடயமாகும்.

# வெட்கம் கெட்டவர்க்கு ....

ஆடுபவர்கள், என எத்தனை எத்தனை கயவர்களுக்கும், நயவஞ்சகர்களுக்கும் பின்னால் ஒரு வேலை கிடைக்காதா என்ற பரிதாபமான ஏக்கத்தில் இத்தேர்தல் காலத்தில் விசுவாசமான நாய்க்குட்டிக்களைப் போல் அலையும் தமிழ் இளைஞர்களையும் இளம் பெண்களையும் பாருங்கள். மட்டக்களப்பின் ஸ்ரீலங்கா படைக்கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் தமிழரின் அரசியலைப் பற்றி சற்றும் அக்கறைப்படாது இயங்கி வரும் புலிகளும் தமிழரின் அரசியல் காயடிப்பு இவ்வாறான கேவலம் கெட்ட நிலைக்கு சென்றுள்ளமைக்குக் காரணமாய் உள்ளனர். ஆனால் அவர்களையோ, எவர்களையோ குற்றம் சாட்டி மாரடித்துக் கொண்டிருப்பதை விடுத்து சில ஒத்த கருத்துள்ள எழுத்துலக நண்பர்கள் காரியத்தில் இறங்குவதாகத் தீர்மானித்துள்ளோம்.

நீங்களும் மேற்கண்டவற்றை நன்கு ஆய்ந்து உங்களால் சரியெனப்பட்டதைச் செய்யுங்கள். இதை ஒரு விவாதத்திற்கான முன்னுரையாகக் கொண்டு சிந்தனைக் களத்திலும் செயற்களத்திலும் இறங்குங்கள். எமக்கு வீழ்ச்சியில்லை.

# பாராளுமன்றத் தேர்தல்....

சாதாரண பெண்களின் நிலைமை என்னவாகும் என்பதை கூறத் தேவையில்லை.

அடுத்ததாக பொ.ஐ.முவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பெண்கள் குறித்து கூறப்பட்டுள்ளவற்றை குறிப்பிடுவதாயின், அவர்கள் ஜனாதிபதி தேர்தலுக்கு சமர்பித்த விஞ்ஞாபனத்தையே பொதுத்தேர்தலிலும் சமர்ப்பித்துள்ளனர். பெண்களுக்கு சாதகமான சிற்சில வரையறைகள் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன என்கிறார் டள்சி அவர்கள்.

அதேவேளை ஜே.வி.பியைப் பற்றி வினவியப் பொழுது, "ஜே.வி.பியின் கொள்கை விளக்கப் பிரகடனமே தவறான விபரத்துடன் ஆரம்பிப்பதாக டள்சி கூறுகிறார். "இலங்கை சனத்தொகையில் பெண்கள் 49.7 சதவீதத்தினர் என ஜே.வி.பி. கூறுவது தவறானது. உண்மையில், பெண்கள் 51 சதவீதத்தினர் ஆவர். ஜே.வி.பியின் தவறான அரசியல் சித்தாந்தங்கள் எவ்வாறாயினும் 1971 கிளர்ச்சியின் போதும், அதற்கு முன்னரும் தோழர்களுடன் இணைந்து ஆயுதமேந்திப் போராடிய பெண்கள் குறித்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்தவித குறிப்புகளும் இல்லை. இவர்களில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் கிளர்ச்சியில் பங்குபற்றிய பெண்களைப் பற்றி எவ்வித அக்கறையும் காட்டாத ஜே.வி.பி. தான் பெண்களுக்கு சமத்துவத்தை பெற்றுக் கொடுக்கப் போகின்றதா?" என டள்சி வினவுகின்றார்.

மேலும் அவர், "சிஹல உறுமய கட்சி பெண்கள் இருந்தாலும் ஒன்று, இறந்தாலும் ஒன்று என்ற நிலைப்பாட்டிலும், பெண்கள் இல்லாத உலகத்தில் தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்திலும் இருக்கிறார்கள் போலும்" என டள்சி தெரிவித்தார்.

இந்த நிலைமைகள் யாவும் பெண்கள் குறித்து எந்த நேர்மையான மனப்பாங்கையும் கட்சிகள் கொண்டிருக்கவில்லை என்பதையே தெளிவுறுத்துகின்றதெனலாம்.

பொதுவாகக் கூறுவதாயின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஆண்களால் ஆண்களை கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டவை. இந்த அடிப்படையில் தேர்தல் விஞ்ஞாபனங்களில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படும் என எதிர்பார்ப்பது மூடத்தனமாகும்.

**— ரத்னா**

# சரியான பாடம்....

அச்சிட்டேன் என்ற சாரப்பட விளக்கமளித்தார். துண்டுப்பிரசும் வெளியிடத் துணிந்தவர் யார் என்று கேட்கப்பட்டது. நீரோட்டத்தில் வந்த அந்தக் கட்சியின் உறுப்பினரே துண்டுபிரசுரம் அச்சிடமுன்வந்தார் என்றும், அவரின் இருப்பிடம் அக்கட்சியின் அலுவலகமே என்றும் அச்சக உரிமையாளர் குறிப்பிட்டார்.

சில பொலிஸ் உத்தியோகத்தார்களின் கோபமும் வேட்பாளரின் கோபமும் அந்தக்கட்சி உறுப்பினர் மீது திரும்புவதற்குப் பதிலாக அச்சக உரிமையாளர் மீதே அதிகாரித்தது. செல்லக்கூடிய இடத்தில் கோபத்தைக் காட்டிக் கொண்டார்கள்.

தலைமைப் பொலிஸ் அதிகாரி அச்சக உரிமையாளரை அழைத்து விசாரித்தார். "தனிப்பட்ட மனிதனாகக் கேட்கிறேன். அந்தப் பிரசுரத்தில் காட்டப்பட்டிருக்கும் விடயங்கள் உண்மையாக இருக்கும் என்று நம்புகிறீரா" என்று கேட்டார். அச்சக உரிமையாளரோ "ஐயா நான் இந்த உரவன் என்ற வகையில் சொல்வதானால் அந்தப் பிரசுரத்தில் வந்த விடயங்களில் எழுபது சதவீதத்துக்கும் அதிகமானவை உண்மைகளே" என்றார். அதிகாரி சிரித்துவிட்டு 'அழைக்கும்போது வா" என்று அனுப்பிவிட்டார்.

"சட்டப்படி பிரசுரத்தில் தவறுகள் காணப்படுமாயின் என்னை மாத்திரமல்ல, வெளியிட முன் வந்த வரையும் கைது செய்திருக்க வேண்டும். இது தேர்தல் வரை துண்டுபிரசுர வெளியீட்டைத் தாமதப்படுத்த எடுக்கப்பட்ட தந்திரமே" என்று குமுறுகிறார் அச்சக உரிமையாளர்.

"பதினோராம் திகதி நான் எப்படியாயினும் உனக்கு சரியான பாடம் படிப்பிக்கிறேனா இல்லையா பார்? என்று அச்சக உரிமையாளர் மேல் (எதிர்நடவடிக்கை இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டு) பாய்ந்திருக்கிறார் வேட்பாளர்.

"கட்டுக்காசைக் காப்பாற்றுவதே பெரும்பாடு என்ற நிலையில் இருக்கும் இவர் எப்படியாவது எப்படி?" என்று தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள் ஊர் மக்கள்.

சில நாட்கள் தானே. பொறுத்திருந்து பார்ப்போம்.

**விவேகி**


## சரிநிகர் வார இதழ் சந்தாதாரர்களுக்கு ஒரு அறிவித்தல் !

உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்!

புதிய சந்தா விபரம் :

| சந்தா விபரம்: ஆயுள்சந்தா | மாதங்கள் | ஒரு வருடம் |
|---|---|---|
| உள்நாடு: | 350/= | 750/= |
| இந்தியா: | 15 US$ | 25 US$ |
| வெளிநாடு: | 30 US$ | 50 US$ |

முகவரி:
சரிநிகர், 19/4, நாவல வீதி, நுகேகொட, இலங்கை.

தொலைபேசி : 815004, 814859
தொலைமடல் : 815003

மின்னஞ்சல்:sarini@sltnet.lk

ஏற்கனவே சந்தா கட்டியுள்ளவர்களுக்கு வார இதழ் சந்தா விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்: sarini@sltnet.lk

## எங்கள் தெரிவு இது தான் உங்கள் தெரிவு என்ன?

உங்கள் முன்னுள்ள ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடமையை ஆற்றுவதற்காக நீங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் அடிப்படை உரிமைகளில் ஒன்றான வாக்களிக்கும் உரிமையை நீங்கள் பயன்படுத்தப் போகிறீர்கள்.

உங்களுக்குப் பிடித்த உங்கள் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக் கூடியவர்கள் என்று நீங்கள் நம்புகின்ற ஒருவரை உங்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யப் போகிறீர்கள்

உங்கள் உண்மையான நண்பன் யார்? எவர் உங்களுக்காக தன் சுய லாபங்களைக் கைவிட்டு தன்னை உங்கள் பணிக்காக அர்ப்பணித்தவர்? - அவருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள்.

-சகல அரசியல் கட்சிகளும், மேற்சொன்ன இயல்புகளைக் கொண்டவர்கள் தங்கள் வேட்பாளர்கள் தான் என்றும், சகல வேட்பாளர்களும் தாங்கள் தான் அவர்கள் என்றும், உங்கள் முன்வந்து நிற்கிறார்கள்.

-உங்கள் நெஞ்சில் கை வைத்து யோசிக்கிறீர்கள். உண்மையா? உண்மை தானா? இவ்வளவும் செய்தவர்களா இவர்கள்? உங்கள் ஞாபக சக்தியைத் தூண்டுகிறீர்கள். தலையைப் பிய்த்துக் கொண்டு யோசிக்கிறீர்கள். கண்களைக் கசக்கிக் கொண்டு பார்க்கிறீர்கள். கண் முன்னே நிற்பவர்கள் எல்லாம் நயவஞ்சகர்களாக, போக்கிரிகளாக, அடாவடியர்களாக, சண்டியர்களாக, கொலைகாரர்களாத் தெரிகின்றனர். பதவிகட்காக உங்களையும், உங்கள் நலன்களையும் விற்றுப் பிழைத்தவர்கள், காட்டிக் கொடுத்தவர்கள், முதுகில் குத்தியவர்கள், கொள்ளையடித்தவர்கள், கொலை செய்தவர்கள் தான் உங்கள் முன் தெரிகிறார்களே அன்றி வேறு யாரையும் தெரியவில்லை.

பாராளுமன்ற பதவிக்காலம் முழவதும் தமதும் தமது சகாக்களினதும் நல்வாழ்வில் மட்டும் கவனம் செலுத்தியவர்கள் உங்களுக்கு வேலைவாய்ப்பு, நிவாரணம், அது இதென்று இச்சகம் பேசுகிறார்கள்.

யுத்தம் நடந்து கொண்டிருக்கையில், யுத்தத்தை உங்கள் மீது திணித்த அரசிற்குப் பக்க பலமாக நின்று செயற்பட்டவர்கள், நீங்கள் யுத்தத்தால் படும் அவஸ்தைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். காணாமல் போன உங்கள் கணவர்களை, பிள்ளைகளை, உறவுகளைக் காண்பதற்காக நீங்கள் கதறிக் கண்ணீர் வடிக்கையில் உங்கள் பிள்ளைகளை புதைகுழிகட்குள் அனுப்பியவர்களுடன் சகவாசம் செய்தவர்கள், இன்று உங்கள் முன் நட்புப் பார்வை பார்த்துப் பல்லிளிக்கிறார்கள். உங்கள் அரசியல் உரிமைகளை மட்டுமல்ல, கடந்த இரண்டு தசாப்தங்களில் உங்கள் அடிப்படை உரிமைகளையும் படிப்படியாக இழந்து கொண்டிருக்கும் அல்லது பறிகொடுத்துக் கொண்டிருக்கும் உங்களிடம் இன்றும் பறிக்கப்படாமல் இருக்கும் வாக்குரிமையை அபகரிக்க வந்திருக்கிறார்கள் இவர்கள்!

ஆம், வாக்குரிமை என்பது வாக்களிக்கும் உரிமை மட்டுமல்ல, வாக்களிப்பது யாருக்கு என்று தீர்மானிக்கும் உரிமையும் கூட என்பதை நீங்கள் வசதியாக மறந்து விடும் விதத்தில் உங்களுக்கு போதையூட்டுகிறார்கள். எதற்காக வாக்களிக்க வேண்டும்? இதுவரை காலமும் வாக்களித்ததால் நாம் பெற்ற லாபம் தான் என்ற கேள்விகளை எழுப்புவது கூட, இந்த வாக்களிக்கும் உரிமையில் உள்ளடங்குகிறது என்பதை இவர்கள் உங்களிடம் மறைக்கிறார்கள். உங்களுக்கு ஒரு தெரிவு இல்லாத பட்சத்தில் நீங்கள் வாக்களிக்காமல் இருப்பது கூடச் சரி தான் என்று நினைத்தால் அதை மாபெரும் தவறென்று கூறி உங்களை வாக்களிக்க நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உங்கள் வாக்குகளை அவர்களே உங்களுக்காகப் போட்டும் கொள்கிறார்கள். 'மக்களுக்காக எதை எதை எல்லாமோ செய்தோம். ஏன் அவர்கள் வாக்குகளை நாமே போட்டு அவர்களுக்கு உதவக் கூடாது என்று தாமே வாக்குப் பெட்டியை நிரப்புகிறார்கள்.

கத்தி, துப்பாக்கி, வெடிகுண்டு சகிதம் வந்து ஜனநாயகம் பற்றியும் உங்கள் வாக்குகளை தாமே போடுவது பற்றியும் பேசுகிறார்கள். ஆயுதம் ஏந்திய பயங்கரவாதம் என்றெல்லாம் காரசாரமாக விமர்சனம் செய்பவர்கள் அதற்குப் பதிலாக இந்த தேர்தல் ஜனநாயகத்தை முன்நிறுத்துவதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஜனநாயகத்தின் மோசடியையைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. இந்த தேர்தலுக்கான 'ஜனநாயக யுத்தத்தில்' இதுவரை 37 கொலைகள் நடந்துள்ளன. 14 கொலை முயற்சிகள், உட்பட 1162 வன்முறைச் சம்பவங்கள் ஒக்.2ம் திகதி வரை பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு யுத்தமுனைச் செய்தியைப் போல் தேர்தல்கள செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆக, பலத்த ஒரு நெருக்கடியான சூழலில் நீங்கள் இந்தப் பாராளும்மன்றத் தேர்தலை எதிர் கொள்கிறீர்கள். உங்கள் கையில் வாக்கு இருக்கிறது. உங்களைச் சுற்றி உங்கள் எதிர்கால சந்ததியை எல்லாவிதத்திலும் முடமாக்கின்ற யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

உங்களை அரசியல் அனாதைகளாக்கும் அரசியற் களத்தில் நீங்கள் நிற்கிறீர்கள்.

உங்கள் மனச்சாட்சிக்குரிய தெரிவு உங்கள் முன் இல்லை.

என்ன செய்யப் போகிறீர்கள்?

மூன்று தெரிவுகள் உள்ளன.

இவையெல்லாவற்றையும் மறந்து விட்டு உங்கள் உறவினர், தெரிந்தவர், ஊரவர், இனத்தவர், அல்லது சாதிக்காரர் என்று பார்த்து அவருக்காக உங்கள் வாக்கை அளித்து உங்கள் உரிமையை வீணாக்கலாம்.

அல்லது யாருக்குமே வாக்களிக்க முடியாது என்று உங்கள் வாக்கை செல்லுபடியற்றதாக்கி உங்கள் உரிமையைப் பாதுகாப்பதாக நினைத்துக் கொண்டு இந்தத் தேர்தல் என்கிற மோசடி ஜனநாயகத்திற்கு முண்டு கொடுக்கும் அநியாயத்தைச் செய்யலாம்.

அல்லது யாருக்கும் வாக்களிக்கவும் மாட்டேன் வாக்குச் சாவடிக்குப் போகவும் மாட்டேன் என்று முடிவு செய்து உங்கள் வாக்குரிமையை நீங்கள் அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளலாம்.

இவற்றில் எதைச் செய்யப் போகிறீர்கள்.

அதைச் செய்ய உங்களுக்குப் பூரண உரிமை உண்டு.

அந்த உரிமையை சரிநிகர் கௌரவிக்கிறது.

நீங்களும் இந்தப் பத்தியைக் கௌரவிப்பீர்களா?



## வவுனியா: மகாதேவன் மரணம் மர்மம் துலங்குமா?

வவுனியா தோணிக்கல் அம்மன் கோவிலில் சுருக்கிட்ட நிலையில் சடலமாகத் தொங்கிய சண்முகநாதன் மகாதேவன் என்ற இளைஞனின் மரணவிசாரணைகளில் மேலும் புதிய தகவல்களும் சந்தேகங்களும் வெளிப்பட்டிருக்கின்றன. இந்த மரணம் சம்பந்தமாக நேரடியாக வவுனியா மாவட்ட நீதவான் எம்.இளஞ்செழியன் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் மேற்கொண்ட விசாரணைகளின் போது, இந்த மரணம் தொடர்பாக சாட்சிகளை விசாரணை செய்த பொலிசார் நீதி மன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்தனர்.

வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்காக அவருடைய வீட்டுக் கிணற்று வாளியில் கட்டப்பட்டிருந்த நைலோன் கயிற்றினாலேயே மகாதேவனுடைய கழுத்தில் சுருக்கிடப்பட்டிருந்தது. அத்துடன் அவருடைய சைக்கிள் தோணிக்கல் அம்மன் கோவிலின் மடப்பள்ளியருகில் சாய்த்து நிறுத்தப்பட்டிருந்தது. மகாதேவனுடைய சிலிப்பர்கள் அந்த சைக்கிளுக்கு அருகில் இருந்தன.

சைக்கிள் அருகில் மிக நேர்த்தியாக செருப்புகள் இரண்டும் சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்ததாகப் பொலிசார் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளனர். அத்துடன் நைலோன் கயிறு இரண்டாக மடிக்கப்பட்டு, மடிக்கப்பட்ட முனையின் சுருக்கிலேயே இறந்தவருடைய கழுத்து இருந்தது. கயிற்றின் இரு முனைகளும் மறுபக்கத்தில் மேலே கூரையின் உத்தரமாக இருந்த இரும்பில் கட்டப்பட்டிருந்தது.

வழமையாக சுருக்கிட்டவர்களின் கழுத்தின் பின்பக்கமாகவே கயிற்றின் சுருக்கு முடிச்சுக் காணப்படும் என்றும், அதற்குப்பதிலாக வலது காதுப் பக்கமாக மகாதேவனுடைய சடலத்தில் கயிற்றின் சுருக்கு முடிச்சு காணப்பட்டதாகவும் பொலிசார் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்கள்.

மகாதேவன் பண்டாரிகுளம் விபுலானந்த மகாவித்தியாலயத்தின் உயர்தர வகுப்பு மாணவர் என்பதுடன், அந்தப் பாடசாலையைச் சேர்ந்த வேறொரு மாணவன் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட போது, அவரை விடுதலை செய்யக்கோரி வவுனியா மாவட்ட மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம், வகுப்புப் புறக்கணிப்பு நடவடிக்கைகள் என்பவற்றில் முக்கிய பங்களிப்புக் கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவருடைய மரணத்தில் ஏற்பட்டுள்ள பல கேள்விகள், சந்தேகங்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

## சரியான பாடம் படிப்பிப்பேன் என்கிறார் இந்த வேட்பாளர்!

திருகோணமலையில் அச்சகமொன்றில் ஒரு தேர்தல் துண்டுப் பிரசுரம் அச்சேறிக் கொண்டிருந்தது. அந்தத் துண்டுப் பிரசுரத்தில் சுயேட்சை அணியொன்றின் தலைமை வேட்பாளர் கிண்டல் செய்யப் பட்டிருந்தார்.

"ஆகாயத்திலிருந்து ஒரு அவசரத் தொலைபேசி" என்பது அதன் தலைப்பு. வெறும் உரையாடல் ரூபத்தில் அது எழுதப்பட்டிருந்தது. தலைமை வேட்பாளருக்கு மறைந்த அவரது தம்பியார் - பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்- அவசரமான ஓர் அழைப்பை எடுத்து உரையாடுகிறார்.

அதனுடைய சாராம்சம் "அண்ணா என் பேரைச் சொல்லி ஊரை ஏமாற்றாதே.. அது பாவம்...' என்ற தோரணையில் அமைந்திருந்தது. இதில் தமிழர்களின் வாக்குகளைப் பிரித்து திருகோணமலையில் தமிழ்ப்பிரதிநிதித்துவம் இல்லாமற் செய்வதற்காகப் பெற்ற கைக்கூலி முப்பது லட்சம் ரூபா. வேட்பாளரின் கோணங்கித்தனம், வேட்பாளரின் முன்னைய நடவடிக்கைகள் காரணமாக மறைந்த பாராளுமன்ற உறுப்பினரான தம்பி அடைந்த மன உளைச்சல் ஆகியவை பற்றி சுவாரசியமாக எழுதப்பட்டிருந்தது.

அச்சக உரிமையாளரிடம் நாலாயிரம் பிரதிகள் அச்சிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. இதற்கான ஓடர் கொடுத்தவர் தற்போது தேர்தல் களத்தில் நிற்கும் ஜனநாயக நீரோட்டத்துக்குள் வந்த ஒரு கட்சியைச் சேர்ந்தவர்.

துண்டுப்பிரசுரம் அச்சாகிக் கொண்டிருந்த வேளையில் அந்த வேட்பாளரின் கையாள் ஒருவர் வேறு வேலை காரணமாக அச்சகத்துள் நுழைந்திருக்கிறார். துண்டுப்பிரசுரங்கள் அவரது கண்ணில் பட்டிருக்கின்றன.

அச்சக உரிமையாளர் அதைப் பொருட்படுத்தவில்லை. வந்த கையாள் இலட்சியத்துக்காக உழைப்பவரல்ல. பணத்துக்காக உழைப்பவர் என்பது அச்சக உரிமையாளருக்கு நன்கு தெரியும். ஏனென்றால் அந்த வேட்பாளரது துண்டுப்பிரசுரங்களை அவரே பெற்றுவந்து இந்த அச்சகத்தில் கொடுத்து உண்மையான கொடுப்பனவை விட அதிக பணத்துக்கு ரசீது பெற்றுச்சென்று உழைத்திருக்கிறார்.

ஆனால், வந்திருந்த கையாளுக்கு இலட்சியமும் கொஞ்சம் இருந்திருக்கிறது. நேராகச் சென்று தனது வேட்பாளரிடம் கூறிவிட்டார். உடனயாகப் பொலிஸ் வந்தது. அச்சகம் முற்றுகையிடப்பட்டது. துண்டுப் பிரசுரத்தின் தடயத்தைக்கூட விட்டுவைக்காமல் அத்தனையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் செல்லப்பட்டது.

அச்சக உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்டார். தேர்தல் காலங்களில் இப்படியான சுவாரஷ்யம் நிறைந்த பிரசுரங்கள் வருவது சகஜம். எனவே அச்சக உரிமையாளர் என்ற வகையில் வியாபார நோக்கில்

19

* மீன்பாடும் தேனாட்டின்
போர்க்கால வாழ்வு எப்படியிருக்கும்?
* போர்க்கால நிபந்தனைகளும்
கலைஞர்களும்

பாருங்கள் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொவைலக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியை




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!
இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது.

ஆசிரியர்: பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர்: எஸ்.கே.விக்னேஸ்வரன். 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு: நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 05.10.2000